Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 16/50

மார்ச்.24 - 30, 2005

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 607



## புலிகளின் ஹெலியும் அரசின் கிலியும்

ரோபோக்களின் குழந்தைகள்

வன்னிச் சிறை மீண்ட லண்டன் தமிழர்

சச்சின் பிபாஷாவின் கலாட்டா!

# விரதம் பற்றிய விபரம்

# ஆன்மீகம்



இந்து மதப் பெண்கள் விரதம் அனுஷ்டிக்கும் முறைமை பற்றி விரத நூல்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளது. விரத பலனைப் பூரணமாக அடைவதற்கு விரதம் நோற்கவிருக்கின்ற பெண்ணானவள் கணவன், தந்தை, மகன் இவர்களில் ஒருவரது அனுமதியைப் பெற்று விரதம் மேற்கொள்ள வேண்டுமென்றும் அல்லது அந்த விரத அனுஷ்டானம் நிறைவான பலனைத் தராது என்றும் உள்ளது அதிகாலையில் எழுந்து தனது கடமைகளை முடித்து தலைக்கு ஸ்நானம் செய்து பர்த்தாவுக்குத் தெரிவித்து, ஆசார சீலத்துடன் தூயமனதுடன் தான் நோற்கவிருக்கின்ற விரதத்தினை பயபக்தியுடன் சங்கல்பபூர்வமாக அனுஷ்டிக்கும்போது முழுமையான பலன் கிட்டுமாம். இப்படி விரத பூஜா விதானத்தில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.

## ஜலம் அமர்ந்தது

"தேவன் பூமியின் மேல் காற்றை வீசப் பண்ணினார். அப்பொழுது ஜலம் அமர்ந்தது. (ஆதி 8:1) பேழைக்குள் இருந்த நோவாவுக்கும் அவன் குடும்பத்திற்கும், தேவன் தாம் செய்ய வேண்டிய காரியத்தை நினைந்தருளி, பூமியின் மேல் காற்றை வீசப் பண்ணினார். அப்பொழுது கொந்தளித்த ஜலம் அமரத் தொடங்கியது. இவ்விடத்தில் இயற்கைகள் தேவனுடைய சித்தத்தைச் செய்வதையும், அவருடைய ஆளுகைக்குள் அவை இருப்பதையும் காண்கின்றோம் தேவன் உலகத்தைப் படைக்கும்போது "உண்டாகக் கடவது" என்றார். அப்படியே அவை ஆயிற்று. நோவாவின் காலத்தில் உலகத்தில் மனிதர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாததால் - அவரைத் தூஷித்ததால், மறுதலித்ததால் தேவன் உலகத்தை நிக்கிரகம் பண்ண ஆழத்தின் ஊற்றுக்கண்ணுக்குக் கட்டளையிட்டார். அவை பிளந்தன. வானத்தின் மதகுகளும் திறவுண்டன. ஆனால் நோவா தேவனுக்குப் பயந்து ஓர் உத்தமனாக - நீதிமானாக கீழ்ப்படிந்தவனாக - இருந்தமையால் அவன் கர்த்தரின் பேழைக்குள் அடைக்கலமாக இருந்தான். அருமையானவர்களே! இன்று உங்கள் வாழ்க்கையிலும் கொந்தளிப்பு காணப்படுகின்றதா? உங்கள் வாழ்க்கையை முற்றுமாக அவரிடத்தில் ஒப்புக்கொடுங்கள். அவர் ஒரு வார்த்தை சொல்ல, அந்தக் கொந்தளிப்பு அகன்று போகும். தேவ சமாதானம் நிறைந்த வாழ்க்கையை தேவன் தருவாராக.

-ஆர்.பாலசந்திரன், அல்மா சீட்டன், கந்தப்பளை.

## புகைத்தல் இஸ்லாத்தில் ஹராம்

புகை பிடிப்பது ஹராமாகும். அல்லாஹ்தாலா "நீங்கள் உங்களையே கொலைசெய்து கொள்ளாதீர்கள்." (4:29) எனக் கூறியுள்ளான். புகை பிடித்தல் மரணத்தை ஏற்படுத்தும் புற்றுநோய் போன்ற கொடிய வியாதிகளுக்குக் காரணமாக உள்ளதென மருத்துவம் தெளிவுபடுத்தியுள்ளது. புகைபிடிப்போர்கள் தமக்குத் தாமே மரணத்தைத் தேடிக்கொள்கின்றனர். உண்ணுங்கள். பருகுங்கள் வீண் விரயம் செய்யாதீர்கள். வீண் விரயம் செய்பவர்களை அல்லாஹ் நேசிக்க மாட்டான்" என அல்குர் ஆன் குறிப்பிடுகின்றது.

புகைத்தல் மட்டுமல்ல புகைக்கும் பொருட்களை விற்பதும் அதற்காக வாடகைக்கு விடுவதும் பாவமான காரியத்திற்குத் துணை போவதாகும்.

மேலும் புகைபிடிப்பவர்கள் நோய்களுக்குள்ளாகுவது மாத்திரமின்றி, அவர்களின் பக்கத்திலுள்ளவர்களுக்கும் கொடூரமான நோய் ஏற்படக் காரணமாகின்றனர். (மு.'மீன்களே!) நீங்கள் பாவத்திலும் வரம்பு மீறும் காரியத்திலும் ஒருவருக்கொருவர் உதவி செய்யாதீர்கள்.

(5:2)

எனவே, அல்லாஹ்வுக்கும் அவனது ரஸுலுக்கும் வழிபட்டு தனக்கும், பிறருக்கும் தீங்கு அளிக்கக்கூடிய இப் பழக்கத்தை 'புகைப்பிடித்தல்' விட்டுவிட அல்லாஹ் துணை புரிவானாக!

-முல்லை றஸீஹா, றஹ்மத்புரம்.

## கவிதைப் போட்டி இல.604



### தவறுகள்

குற்றம் செய்யா
நிரபராதி இவன்
கைதியாகி
சிறையில்
தவிக்கிறான்!
குற்றவாளி
இங்கே
சுதந்திரமாய்
வெளியில்
சுற்றித்
திரிகிறான்!

-திருமலை நதார், ஜின்னாநகர்.

**பரிசுக்குரிய கவிதை**

### இலஞ்சம்

வாங்கியிருப்பாய்
உள்ளே போனாய்
கொடுத்துப் பார்
வெளியே வரலாம்.

-யூ.எம்.முனீர், நிககொள்ள.

### எதிர்பார்ப்பது.....?

தடம் மாறி
தண்டனைப் பெற்று
இடம் மாறி
வந்துவிட்ட இவன்,
எதிர்பார்ப்பது
மரண தண்டனையா..?
மனித நேயத்தையா...?

-நா.ஜெயபாலன், பிபிலை.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### ஏக்கம்

கம்பிகளுக்குப்
பின்னால்,
கைகள் தாங்குவது
கடந்து வந்த
பாதையின்,
கறை படிந்த
நினைவுகளையா?
கரைந்துவிட்ட
கற்பனைகளையா?

-எஸ்.ஸ்ரீ, காரைதீவு- 08.

### விரக்தி

அதிகாலைத்
தூக்குக்கு
ஆயத்தமான
தூக்குக் கைதியின்
கடைசி இரவின்
கவலை நிறைந்த
காட்சியன்றோ இது!


-சீனிமுகம்மது மீராமுகைதீன், ஏறாவூர் - 02ஏ.

### நிஜம்

சிறையில் இருப்பவர்கள்
எல்லாம்
குற்றவாளிகளில்லை;
குற்றவாளிகள் எல்லாம்
சிறை செல்வதுமில்லை!

-எஸ்.பி.பாலமுருகன்.

## கவிதைப் போட்டி இல.607



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 30.03.2005.

கவிதைப் போட்டி இல.607
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### இருபக்க அடி

கடலடியால்
வாழ்க்கையிலடி.
இவன்போல் நிவாரண
மோசடிக்காரர்களால்
வயிற்றிலடி.

-எஸ்.பி.பி.கணேஷ், கொழும்பு - 12.

### திருட்டு!

குத்திக் கெட்டது பல்,
குடைந்து கெட்டது காது;
திருடிக் கெட்டேன் நான்.
ஏழைகளின் நிவாரணத்தை
எண்ணாமல் திருடி
விட்டேன்.
கைக் கோட்டாய்ப் பிடிபட்டு
கம்பிகள் எண்ணுகின்றேன்.
தியாகி என ஒரு முகம்
காட்டி
துரோகியாக மறுமுகம்
காட்டக்
கூசுகின்றேன் கம்பிக்குப்
பின்.

-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### அரசியல் கைதி

வேலை தேடி வேறிடம்
சென்று
விடுதியில் ஓரிரவு தங்கி
விடியுமுன்
விடுதியிலிருந்து
விசாரணை என்று
அழைத்து
கைதிக் கூண்டில்
அடைக்கப்பட்ட
காரணத்தை
எண்ணிப்
பார்க்கின்றேன்....
அரசியல் கைதி என்ற
புனைப் பெயரோடு.

-எஸ்.ரகு, சம்பூர் - 05.

### கடலில் கரைந்த உறவுகள்

ஆழியில் அகப்பட்டு
நான் சிறையில்.
சுனாமியில் அகப்பட்டு
என் உறவுகள் ஆழியில்.
என்றோ ஒருநாள்
நான் சிறை மீண்டு வரலாம்!
என் உறவுகள்....?

-ஓடையூரான், மீராவோடை.

### நிரபராதி

நீ
நிரபராதி என்பதை
நிழற் படம் உணர்த்துகிறது.
சட்டம் ஓர்
இருட்டறை என்பதால்
குற்றவாளி
தப்பித்துக் கொண்டான்.

-எம்.சி.கலீல், கல்முனை - 05.




# வாசக[ர்] சாலை

## தினமுரசே! வாழ்க பல்லாண்டு!

எம் இதயமென்ற பூங்காவில் பாசமலராய்ப் பூத்திருக்கும் தினமுரசே! வாரம் ஒரு முறை வாசகர்களின் வாசலில் வந்து நின்று வேடிக்கையாய் நீ கூறும் செய்திகள்தான் எத்தனை? படிக்கப் படிக்கப் பரவசமூட்டும் பாசமலரே தினமுரசு. நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் எங்கள் இதயத்தில் நீங்காத இடம் பிடித்துவிட்டன.
நீ எங்கள் கரங்களில் தவழ்வது மிக்க சிரமத்துக்கு மத்தியில்.

உன் வருகைக்காக வழிமேல் விழிவைத்துக் காத்துக் கிடக்கும் ஏராளமான வாசகர்களில் நானும் ஒருவன். உனைக் கண்டதும் நாம் சூரியனைக் கண்ட செந்தாமரை போலாவோம். தினமுரசு மலரே, என்றும் நீ மங்காமல் எங்கள் கரங்களில் தவழ இறைவனைப் பிரார்த்திப்பதோடு நீ பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறேன்.

-ஆர்.பாலசந்திரன், அல்மா சீட்டன், கந்தப்பளை.

## ஐ..... லவ் யூடா!

அன்புடன் முரசுக்கு ஐ..... லவ் யூடா. இப்படிப் புதுப்புது அர்த்தங்கள் அனைத்தையும் சுமந்து நாடோடி மன்னனாய் அனைத்து பிரதேசங்கள் எல்லாம் நீ வருவாய் என உனக்காக மட்டும் காத்திருப்பேன். நீ தி(யாய்) தரும் செய்திகளைப் பார்க்கும்போது திகி(ல்)லாய் இருக்கின்றது. அத்தனை பக்கங்களைப் பார்த்தாலே பரவசமாய் இருக்கிறது. அத்தோடு அட்டகாசமாய் உள்ளது. ஏழை ஜாதி முதல் பணக்காரன் வரை உன் நாமம் எங்கும் ஊறிப்போய் குருதிப்புனல் போல் எங்கும் பரவுகிறது. தினந்தோறும் பூக்கள் பூப்பது போல் வாராவாரம் நீ எம் கையில் இருப்பது சொக்கத் தங்கமாய் உள்ளது. நீ தரும் செய்தி தூ(ள்)ளாய்ப் பறக்கிறது. ஐ(யா)மார் முதல் அய்யர் ஐ.பி.எஸ். வரை சுறுசுறுப்பாகப் பார்க்கும் அது ஒரு சிறப்பு. காதல் கவிதைகள் உன்னைப் பார்த்தால் போதும், தேவதையைக் கண்டேன் போல் அளப்பற்ற ஆனந்தம். சொல்லுவதைச் செய்பவனே, நீ மட்டுந்தான் ஜெய்ராம் என்று கூறி உனக்காக வரைவேன் புதுக் கவிதை.

-ஜே.முத்துக்குமார், வவுனியா.

# உங்கள் பக்கம்

## சீட்டன் கிறிஸ்தவ மக்களின் துயர் தீருமா?

வலப்பனை தேர்தல் தொகுதியில் அமைந்துள்ளது அல்மா குறூப் சீட்டன் தோட்டம். 1996ஆம் ஆண்டில் இத்தோட்டத்தில் அதிகாரியாகப் பணிபுரிந்த சிரிவர்தன அவர்களால் சீட்டன் தோட்ட கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்தவ ஆலயம் நிர்மாணிக்கவென ஓர் இடம் வழங்கப்பட்டிருந்தது. அந்த இடத்திலுள்ள கற்கள் அகற்றப்பட்டு துப்புரவு செய்து ஆலயம் கட்ட ஆயத்தமாகிக்கொண்டிருந்த வேளையில் அதிகாரி அவர்கள் இடம் மாற்றப்பட்டு வேறு பகுதிக்குச் சென்று விட்டார். அதன் பின்னர் இத் தோட்ட நிர்வாகத்தைப் புதிதாக வந்து பொறுப்பேற்ற அதிகாரியான மஹேஸ் வணிகசூரிய அவர்கள் ஆலயம் நிர்மாணிக்க விருந்த இடத்தைச் சுவீகரித்து புதிதாகப் பிள்ளை பராமரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப் போவதாகவும் பழைய பிள்ளை பராமரிப்பு நிலையமாகவிருந்த இடத்தை கிறிஸ்தவ ஆலயம் அமைக்கத் தருவதாகவும் வாக்களித்திருந்தார். தோட்ட அதிகாரியின் வாக்குறுதியை நம்பிய சீட்டன் பகுதி கிறிஸ்தவ மக்கள் மிகவும் பொறுமையோடு காத்திருந்தனர். ஆனால் ஆலயம் அமைக்க ஆயத்தமாகியிருந்த இடத்தில் புதிய பிள்ளை பராமரிப்பு நிலையம் கட்டி முடிந்து 2003ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4ஆம் திகதி காலை 10 மணி அளவில் திறப்பு விழாவும் நடந்து முடிந்துவிட்டது. ஆனால் பழைய நிலையத்தை ஆராதனைகள் நடத்தவோ ஆலயம் அமைக்கவோ வழங்காமல் மக்கள் குடியிருப்புக்காக வழங்கப்பட்டது. இது நயவஞ்சகச் செயல் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். 8 வருட காலமாக மனிதநேயத்தோடு பொறுமை காத்து வந்த கிறிஸ்தவ மக்களுக்கு ஆலயம் அமைக்க ஓர் சிறிய இடமேனும் கொடுக்காமல், கொடுக்கவிடாமல் தடைசெய்து வைத்திருப்பதானது ஒரு கீழ்த்தரமான செயலாகும். மலையகத்தில் மக்களுக்காக ஓங்கிக் குரல் கொடுத்து வரும் இரு பிரதான தொழிற்சங்கங்களான இ.தொ.கா. ம.ம.மு. போன்ற தொழிற்சங்கங்களின் தலைவர்கள், பிரமுகர்கள், முக்கியஸ்தர்கள் போன்றோர் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தி கவனத்தில் எடுப்பார்களா? அல்லது ஏனைய தொழிற்சங்கத் தலைவர்கள், பிரமுகர்கள் யாரேனும் கவனத்தில் எடுப்பார்களா? அல்லது இந்து கலாசார அமைச்சராவது மதம், இனம் பாராது இம்மக்களின் கோரிக்கையைப் பூர்த்தி செய்வாரா என மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆகவே இப்பகுதி மக்களின் இந்த வேண்டுகோளைப் பூர்த்தி செய்ய யார் முன்வந்தாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, தேயிலை பிடுங்காமல் காட்டுக்கு என ஒதுக்கியிருக்கும் இடத்தில் தேவாலயம் நிர்மாணிக்க ஓர் இடத்தைப் பெற்றுத் தருமாறு இப்பகுதி மக்கள் மிகவும் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றனர்.

-மல்லிகா பாலசந்திரன், அல்மா சீட்டன், கந்தப்பளை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -4-514282
தொலை நகல் (Fax):-4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# கிழக்குக் காடுகளில் புலிப் பிரிவு மோதல்களைத் தடுக்க ஆயுதப் படையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## -எல்லைப்புறக் கிராம மக்கள் கோரிக்கை

கிழக்கில் இரு தரப்புப் புலிகளுக்கு மிடையில் (பிரபா அணி - கருணா அணி) நடந்த மோதல்களினாலும் அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களினாலும் கடந்த நான்கு வாரங்களுக்குள் ஐம்பதுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனரென்று தகவல்கள் வெளிவந்திருக்கும் இவ்வேளையில், பொலநறுவை எல்லைப் பகுதியில் வெலிக்கந்தைக்கு அண்மிய பகுதிகளிலும் நெலுச்சிவில் காட்டுப் பகுதிகளிலும் நடைபெறும் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துமாறு அப்பகுதி மக்கள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த வெலிக்கந்தையிலிருந்து பத்துக் கிலோ மீற்றர்கள் வடமேற்காக அமைந்திருக்கும் தீவுச்சேனை மீது பிரபா அணிப் புலிகள் நடத்திய தாக்குதலை அப் பகுதியிலுள்ள முஸ்லிம், சிங்கள மக்கள் கண்டித்துள்ளனர். கருணா முகாம் அமைந்திருப்பதாகக் கூறப்படும் தீவுச்சேனையில் 78 தமிழ்க் குடும்பங்கள் வசித்து வருகின்றன. ஒளலியாமடு, அரகலன்வில, முருகொட போன்ற அருகேயுள்ள கிராமங்களில் சிங்கள, முஸ்லிம் மக்களும் வாழ்கின்றனர். இந்தப் புலித் தரப்புகளின் மோதல்களால் அப்பாவி மக்களே பாதிக்கப்படுகின்றனர் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். கருணா குழுவினரின் முகாம்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இல்லையென்று படைத்தரப்புக் கூறுகிறது. இருப்பினும் காட்டுப் பகுதிகளுக்குள் கருணா குழுவினர் முகாம்களை அமைத்து வாழ்ந்தால் அதனை யுத்த நிறுத்த மீறலென்று எவரும் கூற முடியாது. ஏனெனில் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் அவர்கள் ஒரு தரப்பினரேயல்லவென்று பிரபா அணிப் புலிகள் கூறுகின்றனர். இந்த நிலையில் பிரபா அணிப் புலிகளால் தொடர்ச்சியாக வேட்டையாடப்பட்டு வரும் கருணா அணியினர், தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காகக் காட்டுக்குள் முகாமிடுவதைத் தவறென்றும் சொல்ல முடியாது. கருணா தரப்பினர் மட்டுமல்ல, அண்மையில் சில வாரங்களில் கிழக்கில் முன்னாள் புளொட் உறுப்பினர்கள் பலர் தேடிப் பிடித்து அழிக்கப்பட்டுள்ளனர். இவர்களும் பிரபா அணிப் புலிகளாலேயே கொல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் கொலைகளைத் தடுத்து நிறுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க முடியாவிட்டால், ஆயுதப் படையினரை அப் பகுதிக்கு அனுப்பி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதே சரியானதென்றும் அப் பகுதிக் கிராம மக்கள் கோருகின்றனர்.

---

## தீவுச்சேனை மோதல் கவலைக்குரியது

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

"வெலிக்கந்தைத் தீவுச்சேனையில் பிரபா அணிக்கும் - கருணா அணிக்கும் இடையில் நடந்த மோதல் சம்பவமானது கவலைக்குரியதாகும். இரு அணிகளாக குறிப்பிடப்படுகின்றபோதும் இறந்தவர்களும் காயமடைந்தவர்களும் சகோதரர்களே என்பதால் இவ்வகையான ஆயுத மோதல்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்." என்று ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா வெலிக்கந்தை மோதல் பற்றிக் குறிப்பிடுகையில் தெரிவித்தார்.

போர் நிறுத்த ஒப்பந்தக் காலத்தில் இடம்பெறும் இவ்வாறான விரும்பத் தகாத சம்பவங்கள் அமைதியை விரும்பும் மக்கள் மத்தியில் பதற்றத்தை அதிகரிப்பதாகவே அமையும். ஒருபுறம் சமாதானம் பேசுவதும், மறுபுறம் தமது அரசியல் எதிரிகளை தீர்த்துக்கட்டுவதுமான சூழல் மாற வேண்டும். முரண்பாடுகளை ஆயுதத்தால் தீர்க்க முடியாதென்பதையே இச் சம்பவமும் மீண்டும் மீண்டும் நிரூபித்திருக்கிறது.

எனவே மாறி மாறி இடம்பெறும் சகோதரப் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டுமென இரு தரப்பையும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்

## இராஜகோபுரத்துக்கு அடிக்கல்

திருகோணமலை, திருஞானசம்பந்தர் வீதியிலுள்ள ஸ்ரீகற்பகப் பிள்ளையார் கோயிலின் இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழா கடந்த இருபதாம் திகதி காலை பெருந்தொகையான பக்தர்களின் பிரசன்னத்துடன் நடைபெற்றது. இந்து சமய அலுவல்கள் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய, அமைச்சின் ஆலோசகர் செல்வி.மகேஸ்வரி வேலாயுதம், ஆலயத்தின் தர்மகர்த்தா சபைத் தலைவர் செல்வராசா ஆகியோர் கலந்துகொண்டனர். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட செல்வி மகேஸ்வரி வேலாயுதம் அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

## ரி.பி.சி ராமராஜுக்குக் கொலை அச்சுறுத்தல்

லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் ரி.பி.சி. (தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) வானொலியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ராமராஜுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன. லண்டன் வாழ் தமிழரான ஜெயதேவனை வன்னிக்கு ஏமாற்றியழைத்து, சிறைவைத்து சித்திரவதை செய்தமை தொடர்பாக முதன்முதலில் எடுத்து அம்பலப்படுத்தியது ரி.பி.சி. வானொலியென்பது குறிப்பிடத்தக்கது. இதற்காகவும் லண்டனிலுள்ள ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் நிர்வாகப் பொறுப்பை புலிகளின் நேரடிக் கண்காணிப்பில் கொண்டுவருவதற்காக சிவயோகம் அறக்கட்டளை என்ற பெயரில் சீவரத்தினம் என்பவரின் பேருக்கு மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட மோசடி முயற்சிகள் பற்றியும் அம்பலப்படுத்திய தற்காகவே இக் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன. உனது மனைவி வெள்ளைச் சேலை அணியப் போகிறார் என்று தொலைபேசி மூலம் மிரட்டல் விடுத்த ஆசாமியொருவர் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளால் திட்டியுமுள்ளார். ரி.பி.சி. வானொலி விசயங்களை அம்பலப்படுத்தியதையடுத்து தொழிற்கட்சி எம்.பி.கள் 15 பேர் கூடி பாராளுமன்றத்தில் பத்திரிகையாளர் மாநாடொன்றினைக் கூட்டி ஜெயதேவனை விடுவிக்கத் தவறினால் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமென எச்சரிக்கப் போவதாகத் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. ரி.பி.சி. சிவயோக அறக்கட்டளை தொடர்பாக வெளியிட்ட செய்திகளுக்கு மறுப்புத் தெரிவிக்க விரும்பினால் அதனையும் தமது செய்தியில் சேர்த்துக்கொள்ளத் தயாரென்று ராமராஜ் பதிலளித்தபோது, 'உங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய தேவையில்லை. உரியவர்களிடம் கூறிவிட்டோ'மென்று பதில் வந்ததாம். மார்ச் ஒன்பதாம் திகதி வன்னியில் புலிகளால் விடுவிக்கப்பட்ட ஜெயதேவன் பதினோராம் திகதி விமானமேறி 12ஆம் திகதி லண்டன் சென்றடைந்தபோது, அவரை வரவேற்க சுமார் 75 பேர் காத்திருந்தனர். மற்றொரு புலி ஆதரவாளரான லண்டனைச் சேர்ந்த இராமச்சந்திரன் அல்லது இராமர் என்றழைக்கப்படும் அன்ரன்ராஜா என்பவர் இன்னமும் வன்னிச் சிறையில் வைக்கப்பட்டுள்ளாரென்று லண்டனில் பரவலாகப் பேசப்படுகிறது.

## தமிழகத்தில் அமைதியை ஏற்படுத்தியது நானே!

### -ஜெயலலிதா



1991ஆம் ஆண்டு நான் முதல் தடவையாக முதலமைச்சராகப் பதவியேற்ற பின்னரே தமிழகப் பொலிஸ் படைக்கு ஆண்டொன்றுக்குப் பத்துக் கோடி ரூபா வீதம் வழங்கி, அதனை நவீனமயப்படுத்தியதையடுத்தே புலிகளின் நடவடிக்கைகளைத் தமிழகத்தில் கட்டுப்படுத்த முடிந்ததென்று தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார். 1991மே மாதம் தமிழகத்திலுள்ள ஸ்ரீ பெரம்புதூரில் ராஜீவ் காந்தி, புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியினால் கொல்லப்பட்டமை குறிப்பிடத் தக்கது. "நான் பதவியேற்றபோது இரண்டாம் உலக யுத்த காலத் துவக்குகளையே தமிழகப் பொலிஸார் வைத்திருந்தனர். நான் அவர்களுக்கு ஏ.கே. 47 ரக ரைபிள்கள், 7.62 மி.மீ.ரக துவக்குகள், 9.மி.மீ.ரக பிஸ்டல்கள் ஆகிய நவீன ஆயுதங்களை வழங்கினேன். ஏற்கெனவே தமிழகத்தில் தாம் நினைத்தவாறு செயற்பட்ட புலிகள், இதன் பின்னர் தம்மால் ஒன்றும் செய்ய முடியாதென்பதை உணர்ந்துகொண்டனர். தமிழகத்தில் தற்போது 96,000 பொலிஸார் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளனர். வெளிச் சக்திகள் கடல் மூலம் ஊடுருவதைத் தடுப்பதற்காக மாநிலத்தின் ஆபத்தான இடங்களில் விசேட படைகளும் நிறுத்தப்பட்டுள்ளன" என்றும் அவர் சொன்னார்.

## தமிழ்ப் பத்திரிகை மீது வழக்கு

தனது நற்பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் விதத்திலும் தனது அரசியல் வாழ்வைப் பாதிக்கும் முறையிலும் செய்திகள் வெளியிட்டதாகக் கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ்த் தினசரியொன்றுக்கு எதிராகத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார். கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பத்திரிகை நிறுவனத்துக்கும் பிரதம ஆசிரியருக்கு மெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் ஆனந்தசங்கரி ஒரு கோடி ரூபா நட்டஈடு கோரியுள்ளார்.

## மலையக இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு

இன்னும் ஐம்பது நாட்களுக்குள் சுமார் 4500 படித்த மலையக இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகள் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக இ.தொ.கா.வைச் சேர்ந்தவரும் அமைச்சருமான முத்து சிவலிங்கம் தெரிவித்தார். மலையகப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குமுகமாக சுமார் 3500 மலையக இளைஞர், யுவதிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுமென்றும் அவர் கூறினார். வேலைவாய்ப்புகள் வழங்கப்பட விருந்த 4500 பேரில் இந்த 3500 ஆசிரியர் களும் உள்ளடங்குவதாகவும் அவர் கூறினார்.

## வெளிநாட்டுத் தூதர்களுக்கு சங்கரி கடிதம்

"அரசும் புலிகளும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டபோது ஏனைய தமிழ்க் குழுக்களின் ஆயுதங்களைக் களைய இணக்கம் காணப்பட்டது. ஆனால் புலிகள் தமது ஆயுதங்களை எவருக்கெதிராகவும் பாவிக்கக் கூடாதென அவர்களிடமிருந்து உறுதிமொழியை அரசாங்கம் பெறத் தவறியதால், ஏனைய தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களின் தலைவர்களுக்குக் கடந்த 18ஆம் திகதி அனுப்பிவைத்துள்ள நீண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு முன்னர் எவரும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தப் பகுதிக்கும் செல்லலாம். ஆனால் இன்று வடக்கு, கிழக்கில் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலும் புலிகள் ஆதிக்கம் செலுத்துவதால், புலிகளுக்கெதிரான எவரும் இப் பகுதிகளில் சுதந்திரமாக நடமாட முடியாமலுள்ளதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தீர்வு காண்பதைப் புலிகள் விரும்பவில்லை. அவர்கள் சர்வாதிகாரத்தை நிலைநாட்டவே முனைகின்றனர். வடக்கு, கிழக்கு அவர்களின் கட்டுப்பாட்டில் இன்றில்லை. அவர்கள் அங்குள்ள அரசாங்க ஊழியர்களைத் தமக்கு அடிபணிந்து நடக்குமாறு மிரட்டுகின்றனர். அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அமைச்சர்கள் கூடச் செல்ல முடியாமல் உள்ளது. வடக்கு, கிழக்கு ஆளுநரை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யக் கூடாதென்று மிரட்டியுள்ளனர் என்றும் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## கிளிநொச்சியில் கொமர்ஷல் வங்கிக் கிளை?

கிளிநொச்சியில் கொமர்ஷல் வங்கிக் கிளையொன்றினைத் திறக்குமாறு புலிகளின் முக்கிய பிரமுகரான புலித்தேவன், கொமர்ஷல் வங்கியின் தலைவர் மகேந்திர அமரசூரியாவிடம் சில நாட்களுக்கு முன்னர் விடுத்த கோரிக்கையை அவர் நிராகரித்து விட்டார். இந்தக் கோரிக்கை பற்றி மத்திய வங்கிக்குத்தான் அறிவிக்க வில்லையென்றும் அதற்கான தேவை தமக்கு இல்லையென்றும் தெரிவித்த அமரசூரியா, இக் கோரிக்கை குறித்துத் தனது பணிப்பாளர் சபையில் கலந்துரையாடவில்லையென்றும் குறிப்பிட்டார்.

## நாதன் ஐயர் காலமானார்

யாழ்ப்பாணம் இருபாலை கிழக்கு, இலிங்கப் பிள்ளையார் கோவிலின் பிரதம குருக்களும் கோப்பாய் மகா வித்தியாலய ஆசிரியருமான நாதன் ஐயர் அவர்கள் கடந்த 16ஆம் திகதி காலமானார். சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பணியாற்றிய நாதன் ஐயரின் மறைவு குறித்துப் பல சமய மற்றும் வெகுஜன ஸ்தாபனங்கள் அஞ்சலிச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளன.

## பொதுக் கட்டமைப்பு இழுபறியில்

வடக்கு, கிழக்கில் கடற்கோள் அனர்த்தத்தைக் கையாள்வதற்கு அரசும் புலிகளும் இணைந்து உருவாக்கத் திட்டமிட்டுள்ள பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக இன்னமும் இரு தரப்புக்குமிடையில் பூரண இணக்கப்பாடு ஏற்படவில்லையென்று அரசாங்க சமாதான செயலகப் பேச்சாளரொருவர் தெரிவித்தார். பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக நோர்வே யோசனைகளைதெனையும் சமர்ப்பிக்கவில்லையென்றும் இரு தரப்புக்கும் சில வழிகாட்டல்களையே முன்வைத்துள்ளதென்றும் அவர் சொன்னார். தேசிய, பிராந்திய, மாவட்ட மட்டங்களில் குழுக்கள் அமைப்பதற்கான சிபார்சுகள் செய்யப்பட்டுள்ளபோதிலும் இக் குழுக்களில் ஜனநாயக ரீதியிலான பிரதிநிதித்துவ முறையை ஏற்படுத்துவது தொடர்பாக இன்னமும் இணக்கம் காணப்பட வேண்டுமென்றும் அவர் சொன்னார். சில விடயங்களில் இணக்கம் காணப்பட்டாலும் இன்னும் சில விடயங்களில் இணக்கத்துக்கு வரவேண்டியுள்ளதென்றும் அவர் சொன்னார்.

## அப்பலோவில் சிகிச்சை

கடந்த பதின்மூன்றாம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஓமந்தையிலிருந்து ஆயுதப் படையினரின் பாதுகாப்போடு கொழும்புக்கு அழைத்துவரப்பட்ட மூன்று முக்கிய புலி உறுப்பினர்கள் கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டலொன்றில் தங்கியிருந்து அப்பலோ தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தனர். புலிகளின் வேண்டுகோளுக்கிணங்க அழைத்துவரப்பட்ட இவர்களுக்கு ஹோட்டலிலும் விசேட அதிரடிப்படைப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. இம் மூவரும் தற்போது சிகிச்சை பெற்று வெளியேறிவிட்டனர்.

## பாதிக்கப்பட்டோருக்கு ஒரு இலட்ச ரூபா கடன்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிறு தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்காக ஒரு இலட்ச ரூபாவினை எட்டு சதவீத வட்டியென்ற அடிப்படையில் கிராமிய வங்கிகள் மற்றும் கிராமியக் கூட்டுறவு வங்கிகளூடாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தேசிய அபிவிருத்தி நிதியத்திலிருந்து இக் கடன் தொகை வழங்கப்படவுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையின் பேரில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

## மண்ணுக்குள் புதைந்த மர்மங்கள்

ஆரையம்பதி, மண்முனைப்பற்று பிரதேச செயலக வளவுக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த அத்தியாவசியப் பொருட்கள் மீட்கப்பட்டமை தொடர்பாக இதுவரை எவ்வித விசாரணையும் நடத்தப்படவில்லையென்று மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். சம்பவம் அம்பலத்துக்குக் கொண்டுவரப்பட்டு இரு வாரங்களாகியும் யார் பக்கத்தில் தவறு இருக்கிறதென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விசாரணை நடத்தி உண்மை நிலையை மக்களுக்கு அறிவிக்கத் தவறுவதேன் என்றும் கேள்வி எழுப்பப்படுகிறது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:- 1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):- 011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

## முரசம்

### மக்களே அழுத்த சக்தியாக மாற வேண்டும்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

சுனாமி பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான பொதுக் கட்டமைப்பு ஒன்றை நிறுவுவது தொடர்பில் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் இழுபறி தொடர்கிறது. நோர்வேயின் பொதுக் கட்டமைப்பு வரைபை புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அரசாங்கம் அது குறித்த நிலைப்பாட்டை இன்னும் வெளியிடாமல் உள்ளது. நிச்சயமற்ற இந்த நிலையில் நோர்வேத் தரப்புப் பிரதிநிதிகளின் கருத்துக்களின்படி இரண்டு வார காலத்துக்குள் பொதுக் கட்டமைப்பு அமைக்கப்படுமென்று நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது. அரசும் புலிகளும் தீர்க்கமான முடிவுகளுக்கும் வராமல் எவ்வித காலத்தைக் கடத்துவதால் இவ்வாறான நம்பிக்கைகள் மீது பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர். அமைக்கப்படவிருக்கும் பொதுக் கட்டமைப்பில் சிங்கள மக்களின் பிரதிநிதித்துவமும், முஸ்லிம்களின் பிரதிநிதித்துவமும் உள்ளடக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் வலுப் பெற்று வருகின்றன. இன்னொரு புறம் பொதுக் கட்டமைப்பு அமைக்கப்படுமானால் அதை வன்மையாக எதிர்க்கப் போவதாகத் தேசப் பற்றுள்ள தேசிய இயக்கமும் அதன் சார்பு அமைப்புகளும் கங்கணம் கட்டி நிற்கின்றன.

பொதுக் கட்டமைப்பு என்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித நலனையும் தராத அதேவேளை, வீணான தாமதத்திற்கே காரணமாகியுள்ளது. ஐரோப்பிய சுற்றுலா மேற்கொண்டிருக்கும் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு நாடு திரும்பியதும் நிவாரணப் பணிகளை அரசோடு இணைந்து எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பிலான தீர்க்கமான முடிவுகள் வெளியிடப்படலாம். ஆனாலும், சந்திரிகா தலைமையிலான அரசோடு சில முரண்பாடுகளும் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. மக்களின் நலன் என்பதை விடவும், புலிகளுக்கும் அரசுக்கும் கொடுக்கப்படும் சர்வதேச சமூகத்தின் அழுத்தமே ஏதோ ஒரு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகக் குறைந்தது சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளை முன்னெடுக்கும் ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் எத்தனை சாவல்களையும், தாமதங்களையும், நிச்சயமற்ற சூழல்களையும் எதிர்கொள்ளும் சர்வதேச சமூகம், நீறுபூத்த நெருப்பாய் உள்ள இனப் பிரச்சினை தொடர்பில் எவ்வகையான நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்ப்பதற்கு இது பொருத்தமான தருணம். மக்கள் நலன், நாடு, உரிமைகள், சுதந்திரம் இவையெல்லாமே வெறும் வாய் வீச்சுகளே தவிர எவருடைய செயற்பாடுகளிலும் ஆழப் பதிந்தவையல்ல. இந்த யதார்த்தத்தையே சுனாமியால் பாதிக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பு விவகாரம் இலங்கை வாழ் மக்களுக்கு உணர்த்தி நிற்கிறது.

அரசுக்கும் புலிகளுக்கும் பொதுக் கட்டமைப்பு தொடர்பில் சர்வதேச அழுத்தமானது சம்பிரதாய சடங்காகவே உள்ளது. இந்த இழுபறி நிலைக்குத் தீர்க்கமான முடிவு எட்டப்பட வேண்டுமென்றால், இலங்கை வாழ் மக்கள் அனைவரும் அரசுக்கும் புலிகளுக்கும் தமது அபிலாஷைகளை உணர்த்துகின்ற வகையில் அழுத்தமாகக் குரல் கொடுப்பதே இன்றைய தேவையாகும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

### எக்ஸ்ரே ரிப்போர்ட்

நரன்

# புலிகளின் 'ஹெலி'யும் அரசின் கிலியும்

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னிக் காட்டுப் பகுதியிலுள்ள இரணைமடுக் குளத்துக்கருகே புலிகளின் விமான ஓடுபாதையொன்று இருப்பதாக வெளிவந்த செய்திகள் அரசாங்கத்தையும் சர்வதேச சமூகத்தையும் அதிர்ச்சிக் குள்ளாக்கியிருக்குமென்பதில் ஐயமில்லை. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடுப் பகுதியில் 1200 மீற்றர் அல்லது 1.2 கிலோ மீற்றர் நீளமான இந்த ஓடுபாதை இருப்பதான செய்தியை விமானப் படையினரின் வேவு பார்க்கும் ஆளில்லா விமானம் கடந்த ஜனவரி மாதம் 12ஆம் திகதி கண்டுபிடித்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்த ஓடுபாதையையும் இப் பாதையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு விமானங்களையும் விமானப் படையின் வேவு விமானம் படம் பிடித்தமையும், அவை பாதுகாப்புத் தரப்பினரிடம் கையளிக்கப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது. புலிகளிடம் நான்கு விமானங்கள் இருப்பதாகவும் இவை ஹெலிகொப்டர்களைப் போன்று மென்ரக விமானங்களென்றும் ஏற்கெனவே செய்திகள் வெளியாகியிருந்தன.

அதாவது செக் குடியரசில் உற்பத்தி செய்யப்பட்ட, நான்கு அல்லது இரண்டு இருக்கைகளைக் கொண்ட Z LINZ 143L ரகத்தைச் சேர்ந்த விமானங்களே புலிகளிடம் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த செக் நிறுவனம் தயாரித்த இரட்டை இருக்கை, ஒற்றை இருக்கை மென்ரக விமானங்களும் புலிகளிடம் இருப்பதாகக் கூறப்படுகிறது. புலிகள் வைத்திருக்கும் விமானங்கள் மணிக்கு 265 கிலோ மீற்றர் வேகத்திலும் பறக்கக்கூடியவையென்றும் கூறப்படுகிறது. 65 சதவீத எரிபொருள் சேமித்து வைக்கப்படும் பட்சத்தில் ஆகக் கூடியதாக 1335 கிலோ மீற்றர்கள் பறக்கக் கூடியவை யெனவும் கூறப்படுகிறது. "செக் நாட்டில் தயாரிக்கப்பட்ட விமானமொன்றினைப் புலிகள் இயக்கம் கொள்வனவு செய்துள்ளதாக எமக்குத் தகவல் எட்டியுள்ளது. எமது நாட்டின் பாதுகாப்பு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி அமைச்சுகளின் அனுமதியின்றி எமது நாட்டிலிருந்து எந்தப் பொருளையும் ஏற்றுமதி செய்ய முடியாது. புலிகளுக்குக் குறிப்பிட்ட விமானத்தைப் பெற்றுக் கொடுத்தவர்கள் கனடாவிலுள்ள புலிகளின் ஆதரவாளர்களென்று எமக்கு உளவுத் தகவல்கள் கிடைத்துள்ளன" என்று இலங்கையிலுள்ள செக் நாட்டுத் தூதுவர் ஜெரோமர் நொவட்னி தெரிவித்தார். இதற்கிடையில் புலிகளின் விமானங்களைத் தாக்கி அழிக்கக்கூடிய, சக்திவாய்ந்த ராடர் கருவிகளுடன் கூடிய ஏவுகணைத் தொகுதியொன்றினை இலங்கைக்கு வழங்க செக் அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக இலங்கைக்கு விஜயம் செய்த செக் நாட்டுப் பதில் வெளிவிவகார அமைச்சர் வெவல் ஸ்லோபொதான் தெரிவித்தார். புலிகள் இயக்கம் செக் நாட்டில் பூரணமாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐரோப்பாவுக்கு விஜயம் செய்த புலிகளின் அரசியல் குழு, கொழும்புக்கு வராமல் மாலைதீவிலிருந்து கடற்பகுதியில் இறங்கக்கூடிய விமான மூலம் இரணைமடுவுக்கருகே இறங்கியமையும் இந்த விமானத்தை நோர்வே ஒழுங்கு செய்து கொடுத்தமையும் குறிப்பிடத் தக்கது. புலிகளிடம் விமானங்களும் விமான ஓடுபாதையும் விமானப் படையணியும் இருப்பதாகத் தகவல் கிடைத்ததும், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க உடனடியாகவே நோர்வேப் பிரதமர் கஜெல் மக்னே பொன்டேவிக்குக்கு அறிவித்ததோடு, அதற்கு ஆதாரமாக விமானப் படையின் வேவு விமானமெடுத்த வர்ணப் புகைப்படங்களையும் சமர்ப்பித்து, புலிகளின் விமான அணி நாட்டின் பந்தோபஸ்துக்கு அச்சுறுத்தலாக அமையுமென்பதால் உடனடியாக நடவடிக்கையெடுக்குமாறும் கேட்டுக்கொண்டார். விரைந்து செயற்பட்ட நோர்வேப் பிரதமர், இது குறித்துப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச, நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம்மை லண்டனுக்கு அனுப்பி வைத்தார். இலங்கை அரசின் அக்கறையும் பீதியும் ஆதாரமற்றவையென மறுத்த அன்ரன் பாலசிங்கம், யுத்த நிறுத்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்பே, அதாவது 2002ஆம் ஆண்டு பெப்ரவரிக்கு முன்னதாகவே புலிகளிடம் விமானப் படையணி இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இச் சர்ச்சை பற்றிக் குறிப்பிட்ட தமிழ்ச்செல்வனும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னதாகவே தம்மிடம் விமானப் படையணி இருந்ததாகவும் இப்போது மட்டும் அரசாங்கம் ஏன் துள்ளிக் குதிக்கிறது என்றும் கேள்வி எழுப்பினார்.

இங்கு சில முக்கிய கேள்விகள் எழுகின்றன. பாலசிங்கமும் தமிழ்ச்செல்வனும் கூறுவது போல் யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்துக்கு முன்னதாகவே புலிகளிடம் விமானப் படையணி இருந்ததா? அப்படியானால் அரசாங்கம் இப்போது மட்டும் அதனைப் பிரச்சினையாகக் கிளப்புவது ஏன்? புலிகள் விமானப் படையணி வைத்திருப்பதை இலங்கை அரசாங்கம் அனுமதிக்க முடியுமா? புலிகள் கூறுவது போல் பயிற்சி விமானங்கள்தான் வைத்திருக்கிறார்களா? இவை மிக முக்கியமான கேள்விகள்.

புலிகள் கூறுவது போல் யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்துக்கு முன்னதாகவே விமானப்படையொன்றினை உருவாக்குவதற்கான முன்தயாரிப்பு வேலைகள் இடம்பெற்றிருக்கின்றனவென்பது நிச்சயமான உண்மை. இது இலங்கையின் பாதுகாப்புப் படையினருக்குக் கூடத் தெரிந்திருக்கலாமென்பதும் மறுக்க முடியாத உண்மை. பிரச்சினை புலிகளின் விமானப் படையணியைப் பற்றியதல்ல, அதற்கான முன் தயாரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதே இங்கு கவனிக்கக் கூடியவை. பிரபாகரனின் நெருங்கிய சகாவும் கனடாவில் விமானப் பொறியியலாளராகப் பணிபுரிந்தவரென்று கூறப்படுபவருமான வைத்திலிங்கம் சொர்ணலிங்கம் எனப்படும் சங்கர் என்பவரே இந்த முன்முயற்சிகளில் ஈடுபட்டிருந்தாரென்ற ஊர்ஜிதமற்ற தகவல்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்பே வெளிவந்தமை உண்மையே. அத்துருகிரிய மிலேனியம் சிற்றியிலிருந்து செயற்பட்ட ஊடுருவித் தாக்கும் இராணுவ அணி, வன்னிக் காட்டுக்குள் ஊடுருவி நடத்திய தாக்குதலில் சங்கர் கொல்லப்பட்டமையும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழ்ச்செல்வன் கூறுவது போல் யுத்த நிறுத்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னரே புலிகள் விமானப் படையணி வைத்திருந்தனரென்றால் அதனை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோதோ அல்லது அதற்கான முன்னோடிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதோ ஏன் நோர்வேயிடமோ அல்லது இலங்கை அரசிடமோ அல்லது பின்னர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமோ தெரிவிக்கவில்லை. உறுதியான, நிரூபிக்கக்கூடிய, திட்டவட்டமான தகவல்களைக் குறிப்பிட்டே அரசாங்கம் தனது புகாரைத் சாய்வாகவும் செங்குத்தாகவும் தெரிவிக்க வேண்டுமென்பதால், விமான ஓடுபாதை பற்றியும் மென்ரக விமானங்கள் பற்றியும் தகவல்கள் கிடைத்த பின்னர் அரசாங்கம் பல்வேறு நாடுகளுக்கு முறைப்பாடு செய்தமை சரியானதே. இந்த விமான ஓடுபாதையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமானங்கள் குறித்த புகைப்படங்கள் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னரே அமெரிக்க இராணுவ



சுவிற்ஸர்லாந்தில் தயாரிக்கப்பட்ட பிளாட்டஸ் பீ.சீ.7 ரக விமானத்தைப் படத்தில் காண்கிறீர்கள். இந்த ரக விமானத்தையே புலிகள் ஆரம்பகாலத்தில் கொள்வனவு செய்திருந்தார்கள் என்று கிளப்பப்பட்ட சந்தேகம் தவறானது.

அதிகாரிகள் அந்த விமானங்களின் ரகத்தை உறுதிசெய்தன என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. 1997 - 98ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவிலுள்ள புலிகளின் முக்கியஸ்தர் தில்லை ஜெயக்குமார் என்பவர் இரு மென்ரக விமானங்களை அங்கு கொள்வனவு செய்து அனுப்பியுள்ளார். புலிகளிடம் விமானப் படையணி இருப்பது குறித்து அரசாங்கம் ஐ.நா. பந்தோபஸ்துச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கும் இந்தியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும் அறிவித்தது. இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளைத் தொடர்ந்தும் தட்டிக்கழித்துக்கொண்டே ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஓர் அமைப்பின் நடவடிக்கை குறித்து சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தமை சரியானதே. பத்திரிகைச் செய்திகள் கூறுவது போல் புலிகளிடமிருக்கும் மென்ரக விமானம் மணிக்கு 216 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கும் சக்திவாய்ந்ததென்றால் இரணைமடுவிலிருந்து கொழும்புக்கு வந்து தற்கொலைத் தாக்குதல் நடத்துவதற்கு சுமார் நாற்பது நிமிடங்களே பிடிக்கும். எனவே பயங்கரவாத அமைப்பொன்றிடம் விமானப் படையணி இருப்பது ஒரு நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலென்பது உண்மைதான்.

அண்மையில் லண்டன் சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் புலிகளிடம் விமானப் படையணி இருப்பது குறித்துப் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜக் ஸ்ட்ரோவிடம் தெரிவித்தபோது, இது இலங்கையின் ஐக்கியத்துக்கு மிகவும் அச்சுறுத்தலான விடயம் என்று ஜக் ஸ்ட்ரோ எச்சரித்ததோடு, பிரிட்டனில் புகலிடம் மறுக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களை இலங்கைக்குத் திருப்பியனுப்புவதற்கான நடவடிக்கைகளுக்கும் உத்தரவிட்டுள்ளார். புலிகளின் விமானப் படையணியால் வந்த வினை இதுவென்றே பிரிட்டனிலுள்ள இலங்கைத் தமிழ் இளைஞர்கள் கூறுகின்றனர்.

புலிகளின் விமானப் படையணியும் ஓடுபாதையும் யுத்த நிறுத்த மீறல் இல்லையென்றால், இவை பற்றிய உண்மை நிலையை அறிந்துகொள்ள நான்கு தடவைகள் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்குச் செல்ல முயன்ற யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கப் புலிகள் மறுத்ததேன்? விமானப் படையணி வைத்திருப்பது யுத்த நிறுத்த மீறல் இல்லையென்றால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு சோதனையிட முனைந்ததேன்? இவை புலிகள் பதிலளிக்க வேண்டிய கேள்விகளாகும்.

பயங்கரவாத அமைப்பென அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா உட்படப் பல நாடுகளால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் புலிகளிடம் தளப் பிரதேசம் (கட்டுப்பாட்டுப் பகுதிகள்) உண்டு. தரைப்படை உண்டு. தற்கொலைப் படை உண்டு. சுனாமி அழித்தாலும் கூட ஓரளவு உறுப்பினர்களைக் கொண்ட கடற்புலிப் படையும் உண்டு. புலிகள் பீற்றுவது போல் பெரிதாக இல்லாவிட்டாலும் மூன்று, நான்கு ஹெலி ரக மென்ரக விமானங்களும் ஓடு பாதையும் இருக்கின்றன. 1980ஆம் ஆண்டிலிருந்து 2000ஆம் ஆண்டு வரையிலான இருபது வருட காலப் பகுதிக்குள் மிகக் கூடுதலான தற்கொலைத் தாக்குதல் களை நடத்திய பயங்கரவாத அமைப்பாகப் புலிகள் இயக்கமே முதன்மையானதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாயிரமாம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 - 23ஆம் திகதிகளில் நடைபெற்ற தற்கொலைப் பயங்கரவாதத்துக்கு எதிரான முதலாவது சர்வதேச மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. புலிகள் இயக்கம் 168 தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியிருப்பதாகவும் லெபனானிலும் குவைத்திலுமுள்ள ஹிஸ்புல்லா சார்புக் குழுக்கள் 52 தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியிருப்பதாகவும் இஸ்ரேலிய ஹமாஸ் அமைப்பு 22 தாக்குதல்களை நடத்தியிருப்பதாகவும் கணக்கிடப்பட் டுள்ளது. தனது பிள்ளைகளான சார்ள்ஸ் அன்ரனியையும், பாலச்சந்திரனையும், துவாரகாவையும், மனைவி மதிவதனியையும் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு, ஏழைகளின் வயது குறைந்த பிள்ளைகளைக் கடத்திச் சென்று, வெளியுலகோடு தொடர்புகொள்ள விடாமல் தடுத்து வைத்து, மூளைச் சலவை செய்து, பலிக்கடாக் களாகத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கு அனுப்பும் பிரபாகரனைத் தமிழ் மக்களின் வரலாறு என்றுமே மன்னிக்காது.

தமிழ் மக்களின் விடிவுக்காகப் போராடிய சகல தமிழ்க் குழுக்களையும் மிலேச்சத்தனமாகத் தாக்கியழித்துவிட்டு, தமிழ் மக்களுக்குச் சார்பாகச் செயற்பட்ட ராஜீவ் காந்தியையும் கொன்றொழித்து, இந்திய எதிர்ப்பையும் சம்பாதித்து பின்னர் தமிழீழ அரசொன்றினை நிறுவ முடியுமென்று புலிகள் கனவு கண்டால் அது சாத்தியமற்றதாகும். தமிழ் மக்களின் சாம்பல் மேட்டில் வேண்டுமானால் பிரபாகரனும் அவரது கம்பனிகளும் புலிக்கொடிகளை நிலைநாட்டலாம். விமானப் படையணி போன்ற செயற்பாடுகள், புலிகள் தமது புதைகுழிகளைத் தாமே தோண்டுவதற்கான செயற்பாடுகளேயொழிய வேறல்ல. 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்ற கட்டத்துக்குப் புலிகள் போகாமல் இருந்தால் சரி. ■

# கிழக்கில் பாதுகாப்பு முன்னெடுப்புகள்

அலசுவது
**- மதியூகி -**

**பு**ரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பிறகு அதிகமான மனிதப் படுகொலைகள் கிழக்கு மாகாணத்திலேயே நடந்துள்ளன. புலிகளின் அரசியல் எதிராளிகள் மீதான படுகொலைகள், புலிகளுக்குள் ஏற்பட்ட பிளவை அடுத்துப் புலிகள் மீது புலிகள் புரிந்த படுகொலைகள், அது போல



அரசியல்வாதிகள் மீதான படுகொலைகள் என வகைப்படுத்தலாம். அதன் தொடர்ச்சியாக இன்று வரை ஆகக் குறைந்தது ஒரு படுகொலை, ஒரு கைக்குண்டு வீச்சு அல்லது மிரட்டல், ஆட்கடத்தல் என்றளவிலேயே கிழக்கு ஒவ்வொரு விடியலையும் எதிர்கொள்கிறது. இவ்வாறான சம்பவங்கள் பெரும்பாலும் அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதிகளிலேயே நடந்துள்ளன. இந்தக் கொலைகளைப் புரிந்த கொலையாளி யார் என்பதைப் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக, அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் எனக் கோஷமிடுவதும், அறிக்கை விடுவதும் வழமையாகிவிட்டது. அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலே இப்படுகொலைகள் நடப்பதால் அரசின் மீது வலிந்து குற்றஞ்சாட்டுவதில் முனைப்பாகச் செய்திகளை வெளியிடும் ஊடகங்கள், இந்தக் கொலைகளைப் புரிகின்ற கொலைகாரர்கள் யார் என்பதைத் தெரிந்துகொண்டும் அவற்றை மூடி மறைப்பதிலேயே கடும் அக்கறையைக் காட்டிவருகின்றன. இதில் சில தமிழ் ஊடகங்களும் உள்ளடக்கம்.

இதனால் அரசாங்கம் தனது சட்டம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. அரசுக்கு ஒவ்வொரு இலங்கைப் பிரஜையின் பாதுகாப்பையும், ஜனநாயக உரிமையையும் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு இருப்பதனால் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அரசு இப்போது கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புத் தொடர்பான பல நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது. அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. வீதிச் சோதனைச் சாவடிகள், திடீர்த் தேடுதல், திடீர்ச் சோதனைகள், என்பன போன்ற நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சமாதானம் பேசிக்கொண்டு படுகொலைகளைச் செய்யும் சக்தியைத் தடுத்துவிடுவது அவ்வளவு எளிதானதல்ல. ஆனாலும் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் படுகொலைகளை ஓரளவுக்குக் குறைக்கும் என நம்பலாம்.

இந்த நம்பிக்கையைத் தகர்க்கும் விதமாக மட்டக்களப்பு கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் சில புலிகள் சார்புப் பிரமுகர்களினதும் கருத்துக்கள் வெளியாகத் தொடங்கியுள்ளன. சமாதான காலத்தில் இலங்கை அரசின் பாதுகாப்புப் படையினர் கெடுபிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்றும் தேவையற்ற சோதனைகளிலும் சுற்றிவளைப்புகளிலும் ஈடுபடுகின்றனர் என்றும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

படுகொலைகளை அரசே பொறுப்பேற்க வேண்டும் என்றும் பாதுகாப்பை அரசே உறுதிப்படுத்த



வேண்டும் எனவும் பேசும் இவர்கள், அதைத் தடுக்க அரசு முயற்சிக்கின்றபோது ஏன் மறுத்துப் பேசுகிறார்கள்? பாதுகாப்புத் தரப்பு நடத்திய சோதனைகளின்போது கைக்குண்டுகள், பிஸ்டல்கள், பிஸ்டலுக்கான ரவைகள் என குற்றம் புரியக்கூடிய தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கண்டுபிடித்துள்ளனர். அது மட்டுமல்ல, சோதனைக்கு உட்பட்டால் பிடிபட்டுவிடுவோமோ என்று பலர் ஓடி ஒழிந்துவிட்டதாகவும், மோட்டர் சைக்கிளில் தப்பித்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பில் இவ்வாறு புலிகள் ஓடித் தப்பியபோது கைவிட்டுச் சென்ற மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள் இப்போதும் பாதுகாப்புத் தரப்பிடம் உள்ளன. இவையெல்லாம் இந்தச் சமாதான காலத்தில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேதான் நடந்தன.



தற்போதைய இரண்டுங்கெட்டான் நிலையைச் சமாதான காலமென்றால் அது ஒரு வேடிக்கையானதுதான். ஏனெனின், புலிகளுக்கும் இராணுவத்துக்கு மிடையில் நேரடிச் சமரொன்று இடம்பெற வில்லையே தவிர, படையினர், பொதுமக்கள், மாற்றுக் கருத்துக் கொண்டோர் என அனைத்துத் தரப்பினரும்

> **படுகொலைகளை அரசே பொறுப்பேற்க வேண்டும் என்றும் பாதுகாப்பை அரசே உறுதிப்படுத்த வேண்டும் எனவும் பேசும் இவர்கள், அதைத் தடுக்க அரசு முயற்சிக்கின்றபோது ஏன் மறுத்துப் பேசுகிறார்கள்?**

கொல்லப்பட்டிருக்கிறார்கள். பொதுமக்களோ, மாற்று ஜனநாயக சக்திகளோ, அரச படையினரோ படுகொலை செய்யப்படுகின்றபோது, எவரும் பொறுமையின் எல்லைக்குப் போவதில்லை. அல்லது பலிக்குப் பலி எடுப்பதில்லை. மாறாக புலிகள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் புலிகள் பொறுமையின் எல்லையில் இருப்பதாக ஆவேச அறிக்கைவிடுவதும், போரை விரும்பவில்லை. ஆனால் அது திணிக்கப்பட்டால் அதற்கும் தாம் தயாராக இருப்பதாக மாவட்டப் பொறுப்பாளர்கள் ஊடாக வீர வசனம் பேசிப் பரபரப்பை ஏற்படுத்துவதும் புலிகள் சமாதானத்தை விரும்பவில்லை என்பதையே சுட்டி நிற்கின்றன. யுத்தம் எப்போது வேண்டுமானாலும் எங்கிருந்து வேண்டுமானாலும் ஆரம்பிக்கும் என்றளவில் ஒரு யுத்தப் பீதியைத் தவிர வேறு எதையும் தராத இந்த மந்தகாலப் பகுதியை சமாதான காலமாக எவ்வாறு குறிப்பிடுவது?

அரசின் பாதுகாப்புச் செயற்பாடுகளையும் இராணுவ சோதனை நடவடிக்கைகளையும் எதிர்ப்பவர்கள் மாற்றுச் கருத்துடையோர், பொதுமக்கள் மீதான படுகொலைகளைத் தடுக்க ஏன் குரல் கொடுப்பதில்லை. அல்லது தடுப்பதற்கான எந்தவொரு ஆலோசனையையும் முன்வைப்பதில்லை. இனந் தெரியாதவர்களால் மேற்கொள்ளப்படும் மாற்றுக் கருத்துடையோர் மற்றும் பொதுமக்கள் மீதான ஒவ்வொரு படுகொலைகளின்போதும், தமக்கு எதிரான அரசியல் எதிராளி ஒழிந்தான் என மகிழ்பவர்கள், அரச எதிர்ப்புக்கு மட்டும் கொடுக்குக் கட்டிக்கொண்டு நிற்பதுதான் எவ்வகையான நியாயம் என்று புரிந்துகொள்ள முடிவதில்லை.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவும் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கும் நிர்ப்பந்தங்களாலும் படைத் தரப்பு எடுக்கும் நடவடிக்கைகள், அப்பாவிப் பொதுமக்களின் இயல்பு வாழ்வுக்கு இடையூறாக அமைந்துவிடாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். மக்களின் பாதுகாவலர்களாக, நண்பர்களாகப் படைத் தரப்பு நடந்துகொள்வது மிக அவசியமாகும். இந்தக் கடமைகளை மறந்து பாதுகாப்பு என்பதற்காகக் கண்மூடித்தனமாக நடந்துகொள்ளக் கூடாது. அப்படி நடந்துகொள்வதையும் அனுமதிக்க முடியாது. பாதுகாப்புத் தரப்பினரைத் தமிழ் மக்களின்



ஆக்கிரமிப்பாளர்களாகவும் அரசாங்கத்தை தமிழ் மக்களின் எதிரிகளாகவும் காட்டி, அதனூடாக அரசியல் இலாபம் தேடும் தீய சக்திகள், சின்னச் சறுக்கலைக்கூட அவதானித்துக்கொண்டிருப்பார்கள் என்பதையும் கவனத்தில் கொள்வது நல்லது. இந்த இருட்டறை நியாயங்களையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவர வேண்டிய வலியுறுத்தல்கள் அதிகரித்து வருகின்றன. படைத் தரப்பைப் பொறுத்தவரை நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்போது காட்டும் அக்கறையைக் காலப் போக்கில் கைவிட்டு, பழைய குருடி கதவைத் திறவடி என்பது போல் கவனக் குறைவோடு இருந்துவிடுகிறது. படைத் தரப்பு பரபரப்புக் காட்டும்போது கொலையாளிகள் பதுங்கிக் கொள்வதும் நிலைமை சாதகமாகின்றபோது பழையபடி கொலைகளைப் புரிவதுமாக நிலைமை தொடர்கிறது. எனவே அரசு இந்த விடயத்திலும் கூடுதல் அக்கறை எடுத்துச் செயற்படுவது அவசியமாகும்.

## அதிரடி அய்யாத்துரை

**சுனாமியால** பாதிக்கப் பட்டவையளுக்கு கனடா எம்பஸியில விசா தருவின மெண்டொரு கதை அடி பட்டது பழைய கதை. அதில அண்ணளவா ஐம்பதாயிரம் பேர் விண்ணப்பிச்சிருக்கின மாம். கிளிநொச்சியில நடக்கிறது தெரியுமோ? கனடாவுக்குப் போறதுக்கு சுனாமியாலை பாதிக்கப் பட்டவை எண்டு செர்ட்டிபிகட் பண்ணித் தாறன் எண்டு ரெண்டெழுத்தாற்ர கிளிநொச்சிப் பொறுப்பாளர் சின்னவன் எண்டவர் தவிச்ச முயலடிக்கிறாராம். ரொக்கம் பதினைஞ்சு ஆயிரத்தைத் தாங்கோ லெட்டர் தாறன் எண்டு கூசாமக் கேட்கிறாராம். 'வந்தாலும் வந்தது சுனாமி, பாத்தியலோ எப்பிடி எப்பிடி யெல்லாம் உழைக்கிறாங்கள்' எண்டு சனம் சொல்லுதுகளாம்.



**தலைநகரில** இருந்து ஏ9 பாதை யால யாழ்ப்பாணத்துக்குப் போறவைக்கு செக்கிங், வரி, அது இதெண்டு குடையிற தால காசைப் பாக்காம எங்கட சனம் ஆகாயத்தால போனவையெல்லோ. அவைக்கும் வந்திட்டுது தலையிடி. பலாலியாலை தரையிறங்கி சனம் வெளிக்கிடேக்க, அவையின்ர வாக னத்தை மோட்டார் சைக்கிளில துரத்தி ரெக்ஸ் அடிக்கி றவையாம். அதிலையும் சில பேர் தங்களுக்கே தண்ணி காட்டினமெண் டிட்டு புதுசா ஒரு சட்டத்தை அறிவிச்சி அதைக் கடுமையாக அமுல்படுத்தினமாம். அதுதானுங்கோ, இனி ஒவ்வொரு விமான சேவை நடத்திறவையும் தலா ஒரு டிக்கட்டுக்கு ஒரு பச்சைத்தாள் தங்களுக்குத் தர வேணுமாம். பாதையால போய் பல்லைக் காட்டிறதை விடவும் பச்சை ஒண்டை இவைக்கு அழுதுபோட்டு போய்வர வேண்டியதுதானெண்டு சனம் ஆகாயத் தால போய் வருகுதுகளாம்.

**எங்கடை** அண்டை நாடு கோடி கோடியாக் குடுத்து சங்கரியாரைப் போன எலக்ஷனில வெல்லப்பண்ண முயற்சி எடுத்ததாம் எண்டு தலைநகரில இருந்து தினமும் வெளியாகிற சிங்கப் பத்திரிகை செய்தி போட்டதுக்கு எதிராக சங்கரியார் மான நட்ட வழக்குப் போட்டிருக்கிறார். தன் மானப் பிரச்சினைக்காக அவர் கேட்டிருக்கிற தொகை ஒரு கோடியுங்கோ. "என்ன இது, கோடி கேடியெண்டு உப்பிடிப் பண்ணிப் போட்டியள்" எண்டு யாரும் கேட்டால், "பிறகென்ன? எனக்கு யார் கோடி கோடியாப் பணம் தாறது? ஒரு பக்கச்சார்பா சாஞ்சு கொண்டு பத்திரிகை நடத்திறதெண்டால் நடத்தட்டுமே. இதுக்க ஏன் என்னை இழுக்கினம். பொய்யைச் சொன்னாலும் பொருத்தமாகவெல்லோ சொல்ல வேணும்" எண்டு தன்ர நியாயத்தைக் கேக்கிறார். வீர மான சிங்கக்காரர் சங்கரியாரை சமரசப் படுத்திறதிலை இறங்கி இருக்கினமாம். ஏதோ சங்கடமில்லாம தீத்துக்கொண்டால் சரிதான்.

**தீவுச்** சேனையில அம்மான்ரண்ட அணி முகாமை வன்னித் தலைவற்ர அணி தாக்கினதெல்லோ! அந்தத் தாக்குதல் அணிகள் வன்னியில இருந்து வரவழைக் கப்பட்ட சிறப்புப் பிரிவாம். அதுவும் கிழக்கு மாகாணப் பெடியள் இல்லாத அணியாம். இனிக் கிழக்கு மாகாணத்தில தங்களுக்கு விசுவாசமானவை எண்டு யாரையும் வன்னித் தலைமை நம்பாது எண்டதைத்தான் இந்தச் சம்பவம் காட்டுது. இப்பவும் கிழக்கு மாகாணப் பெடியள் வன்னித் தலைமைக்கு விசுவாசமாக இருக்கினமெண்டு என்னதான் தம்பட்டமடிச்சாலும், தலைமை இவையை நம்பத் தயாரில்லையாம். எதிர்காலத் திலையும் வன்னிப் பெடியளைத்தான் கிழக்கில குவிக்கப் போகினமாம். உப்பிடித் தான் நடக்கப்போகுதெண்டு பானுவைப் போடேக்கையும் செம்மணனைப் போடேக் கையும் சொன்னனான். ஞாபகமிருந்தா யோசியுங்கோ......

**பள்ளிக்கூடத்துக்குப்** பிள்ளையளை அனுப்பிப்போட்டுப் பெத்ததுகள் பதறிக் கொண்டு நிக்குதுகள். புதுப்புது மோட்டார் சைக்கிள்களிலை பெடியள், பெட்டையளை கலைச்சுத் திரியினமாம். பயிற்சிக்காக பிள்ள பிடிக்கிறது ஒரு பிரச்சினையெண்டால் பெட்டையளுக்குப் பின்னால லவ்ஸ் காட்டிக்கொண்டு ஒரு கூட்டம் திரியுதாம். ஆரெவர் எண்டு விசாரிச்சால் ரெண்டெ ழுத்துப் பெடியள் காட்டுக்க இருந்து போட்டு ஊருக்குள்ள வரவும் அவைக்கு மோட்ட சைக்கிளும் வாங்கிக் கொடுத்திருக்காம். மோட்டார் சைக்கிளில வந்து சுட்டுப்போட்டு தப்பிப்போயிட்டினம் எண்டது ஒரு பக்க மெண்டால், அதே மோட்டார் சைக்கிள்களில லவ்ஸ் ஜொள்ளு விடுறதும் கூடிப்போச்சாம். எட லவ்ஸ்தானே எண்டு எண்ணிப்போடா தயுங்கோ. விரும்பாத பிள்ளையளிட்டை லேசா மிரட்டுறதும் நடக்குதெண்டது தானுங்கோ விசேஷம். விடுதலைக்கெண்டு புறப்பட்டவை எந்தப் பொஸிஸனில நிக்கினம் பாத்தியளோ?

**கொழுந்து** பிடுங்கி சீவனம் நடத்தி, முதலாளி முதலைகளிண்ர மொள்ளை மாறித்தனத்துக்கு சிரிச்சு வச்சு, தானுண்டு தன்ர பாடுண்டு எண்டு வாழ்ந்து கொண்டி ருக்கிற சனத்துக்கு அலுப்புக் குடுக்கிறதுக் கெண்டே மண்வெட்டித் தலையர் கொம்புக்கு மண்ணெடுக்கிறாராம். "வாற சந்தாவில வரியையும் கட்டி; கொள்ளையடிக்கிற கட்சிக் காசிலயும் அவைக்கு கொடு. ஏண்டாப்பா எங்கட பிள்ளைகளைப் பலி கொடுக்கப் பாக்கிற?" எண்டு அந்தச் சனம் அழுகுதுகள்.

வீர வித்தாகத்தான் உப்பிடி ஒரு கொண்ரக்ட்டை ரெண்டெழுத்துக்கார ரோடை பண்ணினவராம். "ஒட்டிப் போயிருக்கிற வயித்துக்கு ஒரு வாய் கஞ்சி ஊத்தாம ஏமாத்தி ஏமாத்தியே வயிறு வளர்க்கிற நீ, எங்கட நிம்மதியை வெட்டிப் புதைக்கப் இந்த வெட்டியான் வேலையை எப்ப பொறுப்பெடுத்தனீ?" எண்டு வேர்வை சிந்திற உழைப்பாளிகள் உரிமையோட கேக்கினம். பாப்பம்! மண்வெட்டித் தலையர் என்ன பதில் சொல்லப் போறாரெண்டு.

# கொழும்புக் கம்பன் கழகம் நடாத்தும் அமரர் துரை விஸ்வநாதன் ஞாபகார்த்த

## பேச்சு, கவிதைப் போட்டிகள் - 2005

**கொ**ழும்புக் கம்பன் கழகம் ஆண்டுதோறும் கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்குத் தலைநகரில் பெருவிழா எடுத்து வருகிறது. இவ்வாண்டு, கம்பன் கழகம் ஆரம்பிக்கப்பட்டு இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவடைகின்றமையை முன்னிட்டு, கழகத்தின் வெள்ளிவிழா எதிர்வரும் மே மாதம் 20ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. கொழும்புக் கம்பன் கழகம் வழமை போலவே இவ்வாண்டும் இவ்விழாவினையொட்டி அமரர் துரை விஸ்வநாதன் ஞாபகார்த்தப் பேச்சு, கவிதைப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

உடன் வழங்கப்படும் தலைப்பில் பேசும், கவிதை இயற்றும் திறமையுள்ளோர் மேற்படி போட்டிகளில் கலந்துகொள்ளலாம். 25 வயதிற்கு உட்பட்ட (சென்ற விழாக்களில் தங்கப் பதக்கப் பரிசில்களைப் பெற்றோர் தவிர்ந்த) எவரும் இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியும். போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் முழு வெள்ளைத் தாளில் பெயர், பால், கலந்துகொள்ளும் போட்டி, பிறந்த திகதி, முகவரி, மாவட்டம், கல்வி கற்கும். கற்ற பாடசாலை அல்லது பல்கலைக்கழகம் ஆகிய விபரங்களை எழுதி, கல்லூரி அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது கிராமசேவகர் ஆகியோரிடம் தம் தகைமைகளை உறுதிப்படுத்தி, கடித உறையின் மேல் கலந்துகொள்ளும் போட்டியின் பெயரைக் குறித்து, செயலாளர் கொழும்புக் கம்பன் கழகம், 11, இராமகிருஷ்ண தோட்டம், கொழும்பு - 06. (Secretary, Colombo Kamban Kazhakam, 11, Ramakrishman Garden, Colombo - 06.) எனும் முகவரிக்கு 15.04.2005க்கு முன் கிடைக்கத் தக்கதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

இப் போட்டிகளில் இனங்காணப்படும் விசேட திறமையுள்ள இளைஞர்களுக்குக் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படும். ஒவ்வொரு போட்டியிலும் தேர்ந்தெடுக்கப்படும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும், நடைபெற இருக்கும் கம்பன் விழா மேடையில் அமரர் துரை விஸ்வநாதன் ஞாபகார்த்த தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன. விண்ணப்பிக்கும் போட்டியாளர்களுக்குப் போட்டி பற்றிய முழு விபரங்கள் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்கள் வேண்டுவோர் 2360525 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.


## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:


| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் **D.D. Enterprises** எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளை களை முகாமையாளர் தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றும் வண்ணம் **'Manager Thinamurasu'** என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் **Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06.** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- **murasu@sltnet.lk**




**நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்**

**46 வருடம் நிரூபிக்கும் மலையாள மாந்திரீகம்**

1. எனது 46 வருட அனுபவத்தைக் கொண்டு அனுதினமும் வரும் வாடிக்கையாளர்கள் என்னை நேரில் கலந்து ஆலோசனை பெற இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
2. வெளிநாட்டவர்களுக்கும் என்னிடம் தொலைபேசியில் கலந்து பேச வாய்ப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்து தொலைபேசிகளுக்கும் C.L.I. வசதியுள்ளது.
3. ஜாதக, ஜாதகிகள் எதிர்கால வாழ்வு, ஆய்வு கண்ணோட்டம் பற்றி நேரில் வியக்கத்தக்க முறையில் என்னால் அருள் ஞானத்தால் கூறமுடியும். நடந்தது, நடக்கப் போவது, நடக்க இருப்பது, திருமணம் எப்போது எத்தனையாம் திகதி, நினைப்பது எப்போது நடக்கும் என்பதற்கெல்லாம் நேரில் வந்தால் என் அருள் ஞான சித்தத்தால் தெட்டத் தெளிவான பதில் கிடைக்கும்.
4. உங்கள் தேவைகளுக்கு நேரில் மட்டும் எந்த நாட்களும் முன் அறிவித்தல் இன்றி வருகை தரலாம்.
5. ஆணித்தரமாக கைரேகை பார்த்து பலன் தரும் சேவையும் உண்டு

உலக மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர் டாக்டர். தெய்வீக ஞான குரு P.K. சாமி ஐயாவின் பிரதான அனுசரணையுடன் ஞாயிறுதோறும் சக்தி தொலைகாட்சியில் இரவு 7.00 மணிக்கு வேலன் தொடரை தொடர்ந்து பாருங்கள்

எனது P.K. Saamy Associate (Pvt) Ltd. ஒருங்கமைப்புடன் செயல்படும் நிறுவனத்தில் ஒரு அங்கமே எனது மலையான மாந்திரீக உச்சாடன பீட பிரிவு.

**பேராசிரியர். டாக்டர். P.K. சாமி (J.D.G.A.N) J.P.**

**ஸ்ரீ துர்கா தேவி மாந்திரீக உச்சாடன பீடம்**

**இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.**


**தொலைபேசி இலக்கங்கள் :**

(CLI) Nos. 2342463, 2342464, 2344832, 4613124, 4613133. Fax : 2344831

கடிதங்களுக்கு பதில் எழுத அவகாசம் கிடையாது.

வெளிநாட்டவர்கள். உள்நாட்டவர்கள். நற்சாட்சி கடிதங்களை அவர்களின் நலனுக்காக விளம்பரம் செய்வதில்லை.


# எதிர் பாருங்கள்



**சித்தர்களின் தெய்வீக சாதனங்கள்**

ஓம் ஆதி அகஸ்திய மஹாரிஷியின் திருவருளாலும் சித்தர்களின் அனுக் கிரகத்தாலும் ஆன்மீகம், தியானம், மணி, மந்திரம், வைத்தியம், ஜோதிடத்தின் மூலம் எமது 30 ஆண்டுகால அனுபவத்தின் நற்கன்ம வழியில், மனித வாழ்வில் ஏற்படுகின்ற நவக்கிரக தோஷம், மாறுபாடு, மனக் கோளாறு, தரித்திரம், தன நஷ்டம், காரிய பங்கம், செய்தொழில் நட்டம், ஒற்றுமைக் குறைவு, ஆண்மைக் குறைவு, திருமணத் தடை, திடீர் விபத்து, தொழிற்சாலை வளரவும், பதவி, பணம், புகழ் அடைவதற்கும், ஜோதிடம் மாந்திரீகம், தியானம் இவற்றில் எளிதில் சித்தி பெறவும், சகல விதமான நோய்கள் தீரக் கூடிய நாட்டு மருந்துகளுக்கும் சர்வ காரிய சித்தி தரும் பஞ்ச பூத ஆகாஷ்ண ராஜ வசிய மூல மந்திரங்களால் உருவேற்றிய நல்ல மணிமாலைகளும், பாதரச சிவலிங்கங்களும், இராஜ வசிய யந்திரங்களும் மற்றும் சகல விதமான தேவைகளின் மந்திர யந்திர தாயத்துச் சக்கரங்களும், அஞ்சன மைகளும் (சுபகர்மம்) மூலிகை ரட்சா பந்தனங்களும் மற்றும் ஜெனன ஜாதகம், பெயரில், எண்ணில், எழுத்தில் இவற்றின் மூலம் பஞ்சபூத தத்துவ அடிப்படையில் தங்களது வாழ்வின் தெளிவானதொரு பலா பலன்களை அறிந்து சிறந்த பரிகாரம் செய்து நற்பயனடையும், திருமூலர் ஸ்ரீ புவனைக் கக்கிஷ அஷ்டமாசித்து எண் கணித மந்திர சக்கர அடைப்பு முறைகளைக் கற்று மாந்திரீகத்தில் தேர்ச்சி பெறவும், மற்றும் சகல வித பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கும் உள்நாட்டு வெளிநாட்டு அன்பதுகள் எமது தொலைபேசியில் தொடர்புகொண்டு நற்பலனடைய வேண்டுகிறோம்.

இந்தியாவின் தலைசிறந்த சித்தர்களில் ஒருவரான ஞானயோகி டாக்டர் **பி.எசக்கி** I.B.A.M. , R.M.P., D.I.S.M. அவர்கள் 'தினமுரசு' ஊடாக தமிழ் பேசும் மக்களுடன் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவுள்ளார். அவரின் சேவை தேவைப்படுவோர் இவரோடு நேரடியாகவும் தொடர்புகொள்ளலாம். அவரிடம் உங்கள் சந்தேகங்களை கேள்வியாகவும் கேட்கலாம். முரசு அதற்காகப் பாடுபடும், மேலும் விபரங்களைத் தெரிந்துகொள்ள தொடர்ந்து இணைந்திருங்கள்.

குறிப்பு :- நற்செயலுக்கு மட்டும் எம்மமை அணுகவும்.

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத் தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்


## லண்டன், பாரிஸ்

**இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்**

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

**டாக்டர் ஆர். தியாகராஜன்** DHMS, AMRSH (LON)

01.03.2005 முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார். மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes), எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை, பேறின்மை (Strillity), ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும். ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம் மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையான பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.


முன்கூட்டிய பதிவுக்கு - லண்டன் தொலைபேசி:

**02087678004 - 07984803488 - 07833341693**

**E-mail : homoeocare@rediffmail.com**

இந்தியா - 0091-9843051099 இலங்கை - 0094-777602513

மார்ச் மாத இலங்கை விஜயம் 21.03.2005 முதல் 26.03.2005 வரை


வாழ்க்கையில் வெற்றி பெற்ற மனிதராகிய கலாநிதி மாறன் தனது அநுபவங்களை பகிர்ந்து கொள்ளும் இந்த் ஆக்கமானது கடந்த சில வாரங்களாக முக்கிய காரணங்களின் நிமிர்த்தம் பிரசுரமாகவில்லை என்பதை வாசக நெஞ்சங்கள் கவனத்தில் கொள்ளவும்.



**வாஜ்பாய்..** எல்லோருக்கும் பிடித்த மனிதராக இருப்பது ரொம்பச் சிரமமான விஷயம். ஆனால் அதை வெற்றிகரமாகச் சாதித்துக் காட்டிய மிஸ்டர் நிதானம்! புயலே அடித்தாலும் புன்னகையோடு அந்தச் சூழ்நிலையைக் கையாளும் ஞானம் கற்றது வாஜ்பாயிடமிருந்துதான். கவிதை மனசு... ஆனாலும், காரியத்தில் கெட்டி மிக முக்கியமாக எதிராளிகளைக் கையாள்வது பற்றி அவரிடம் படிக்க வேண்டிய பாடங்கள் பல உண்டு. எந்தச் சூழ்நிலையிலும் தன் எண்ணத்தை, விருப்பத்தை நிலைநாட்டிவிடுகிற வல்லமைதான் வாஜ்பாயிடம் நான் ரசிக்கும் விஷயம்.



**சோனியாகாந்தி...** என் மனதில் மிக மரியாதையான இடம் அவருக்கு உண்டு. தன் கணவரைப் பறிகொடுத்த பிறகும் உடைந்துவிடாமல், ஒதுங்கி விடாமல், பொதுவாழ்க்கைக்கு வந்த அவரது மன உறுதி, எல்லோருக்கும் பாடம் முக்கியமாக நம் பெண்களுக்கு! அவரது வாழ்வில் அடுக்கடுக்காக எத்தனை சோதனைகள், குடும்பத்ததயும், கட்சியையும், தேசத்தையும் பார்த்துக் கொள்கிற அளவுக்கு வளர்ந்தவர். கைக்கு எட்டுகிற தூரத்தில் பிரதமர் பதவி இருந்து அதை வேண்டாமென்று மறுத்த அவரது காரெக்டர் என்னை வியக்கவைத்த விஷயங்களில் ஒன்று. அரசியல் காரணங்கள் ஆயிரம் இருக்கட்டும்... ஆனால் அந்தத் தியாகக் குணம் - இந்தியப் பெண்களின் அடையாளம்.



**கமல்** நான் இரசிக்கின்ற மகா கலைஞர் 'ஹை ரிஸ்க்... ஹை ரிவார்ட்' என்பார்கள் அதற்கு தமிழ் சினிமாவில் கமல் சரியான உதாரணம் இரசனை, தேடுதல், முயற்சி, உழைப்பு, எல்லாமே சேர்ந்து அவரது கண்களில் எப்போது கனவு மிதக்கும். வெற்றி, தோல்விகளால் துவண்டுவிடாத போராளி எப்போதும் பரிசோதனை முயற்சிகளிலும் தீராத தேடலிலும் கமல் ஓர் அழகான புரொ .'.பசர்.

## இன்னொருவர் பார்வையில்

**ஜெயதேவன் என்ற பிரிட்டிஷ் பிரஜாவுரிமை பெற்ற தீவிர புலி ஆதரவாளரான இலங்கைத் தமிழர், தலைவர் அழைக்கிறாரென்ற போர்வையில் வன்னிக்கு அழைக்கப்பட்டுச் சிறைவைக்கப்பட்டுச் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு பின்னர் பிரிட்டிஷ் அதிகாரிகளின் தலையீட்டினால் விடுவிக்கப்பட்டார். புலிகளின் தீவிர ஆதரவாளர்களாகவும் பிரபாகரனோடு நெருங்கிய தொடர்புடையவர்களாகவும் காட்டிக் கொள்பவர்களுக்கு ஜெயதேவனின் வன்னி விஜயம் ஓர் படிப்பினையாக அமையுமென்பதால் அதனை இங்கு தருகிறோம்.**

# புலிகளின் பரம ஆதரவாளர்களுக்குமா இந்தக் கதி?

லண்டனைச் சேர்ந்த 49 வயதான கணக்காளரான ராஜசிங்கம் ஜெயதேவன் புலிகளின் முக்கியஸ்தர். புலிகளின் அழைப்பு என்று பொய் கூறி வன்னிக்கு நயவஞ்சகமாக அழைக்கப்பட்ட இவர், தை மாதம் 8ஆம் திகதி புலிகளால் கைது செய்யப்பட்டு, பங்குனி மாதம் 9ஆம் திகதி இங்கிலாந்து அரசு கொடுத்த அழுத்தங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். இவர் கைதுசெய்யப்பட்டதைக் கேள்விப்பட்ட இவரது மாமனார் மாரடைப்பினால் காலமாகிய போதும் இறுதிச் சடங்குகளுக்காகவாவது இவரை விடுதலை செய்யாமல் போன குரூரத் தனம் புலிகளால் மட்டும்தான் முடியும்.

லண்டனில் ஈழபதீஸ்வரர் ஆலயம் என்ற சிவாலயத்தை அமைத்து அதன் பிரதம தர்மகர்த்தாவாக இருந்தவர் இவர். இவரது தாயும் சகோதரனும் நாவற்குழியில் உள்ள வீட்டில் வைத்து இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்டதன் பின்னர், இவர் புலிகளின் தீவிர ஆதரவாளராக மாறியிருந்தார். இவரது செல்வாக்கு அதிகரிப்பதைக் கண்ட லண்டன் புலிகள் இவருடன் மோதியதன் விளைவாக. இவரை ஒதுக்கப் புலிகள் பெரும் முயற்சியெடுத்தனர். இவர் நடத்திய சமூக வீடமைப்புத் திட்டத்தினுள் புகுந்த புலிகள், இவரை வெளியேற்றி அவருக்குத் துரோகி என்று முத்திரை குத்தியபோது இவர், அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்திருந்தார்.

இவரைக் கோயில் நிர்வாகத்திலிருந்து வெளியேற்றி முழு வருமானத்தையும் பைக்குள் போட்டுச் சுருட்ட, புலிகள் எடுத்த முயற்சிக்கு இவர் தடையாக இருந்திருக்கிறார். இவர் தொடர்ந்தும் தன்னை ஒரு புலி முக்கியஸ்தராகவே காட்டிக்கொண்டதால் புலிகளால் அந்த முயற்சியில் வெற்றிபெற முடியவில்லை. பொதுமக்களும் இவரைப் புலியாகவே அடையாளம் கண்டதால் புலிகளுக்கும் இவரைப் பற்றிப் பொய்ப் பிரசாரம் செய்யவும் முடியவில்லை. புலிகள் கோயில் நிர்வாகிகளில் ஒருவரான சிவராஜாவைக் கைக்குள் போட்டுக்கொண்டாலும் மற்ற நிர்வாகிகள் ஜெயதேவனுக்கு ஆதரவாகவே இருந்தனர்.

தண்ட முறையைப் பாவித்த புலிகள் தற்போது சாம, பேத விளையாட்டுக்களில் ஈடுபடத் தொடங்கினர். 'பாலா மாஸ்டர்' என்பவரும் 'பாம்பு அஜித்' என்பவரும் ஜெயதேவனுக்கு மாய வலையொன்றைப் போட்டனர். "இது உள்ளூர்ப் புலிகளின் திருவிளையாடல். வன்னி யாத்திரை போய் தலைவரைச் சந்தித்தால் பிரச்சினைகள் நீங்கிப் பழம் பெருமையுடன் வந்து சேரலாம்" என்று இவரின் தலையைக் கழுவினர்.

இதில் பாலா மாஸ்டர் என்ற சுதர்சன் ஜேர்மன் பிரசையாவார். இவர் அங்கே பணம் சேர்த்து மோசடியில் ஈடுபட்டதால், வன்னிக்கு அழைக்கப்பட்டுத் தண்டனை கொடுக்கப்பட்டவர். பின்னர் புனர்வாழ்வடைந்து லண்டன் வந்து பணம் சேர்க்கத் தொடங்கினார். இவரோடு வேலை செய்த பாம்பு அஜித் என்பவர் கிட்டுவைக் கண்காணிக்கத் தலைமைப் பீடத்தால் கிட்டுவுடன் லண்டனுக்கு அனுப்பப் பட்டவர்.

பிரபாகரன் அழைக்கிறாரென்று இவர்கள் கூறியதை நம்பிய ஜெயதேவன், மார்கழி மாதம் 8,500 பவுண்களுடன் வன்னி செல்லத் திட்டமிட்டார். இந்தப் பணத்தை இந்திய இராணுவ காலத்தில் பிரபாகரனைக் காப்பாற்ற தன்னைப் பலி கொடுத்த நவம் என்ற போராளியின் பெயரால் இயங்கும் அங்கவீனரான புலிகளின் அறிவுக்கூடத்திற்கு வழங்குவதெனத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால், பேரலை வந்த பின்னர் புது வருட தினத்தன்று கோயிலில் சேரும் பணத்தை பேரலை மறுவாழ்வுக்கு அளிப்பதாகத் திட்டமிட்டு இவர் மார்கழி 27ஆம் திகதி கொழும்பு சென்றார். புதுவருடத்தன்று சேர்ந்த 15 ஆயிரம் பவுண்களுடனும் இன்னொரு கோயில் நிர்வாகியான விவேகானந்தன் தை மாதம் 3ஆம் திகதி சென்றார். இவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள் என்பதுடன் புலிகளின் பரம ஆதரவாளர்களாகவும் திகழ்ந்தனர். ஜெயதேவன் இங்கிலாந்தில் நிரந்தர வசிப்பிடம் பெற்றபோதிலும் சமீபத்தில்தான் பிரசாவுரிமைக்கு விண்ணப்பித்திருந்தார். இவருடைய பிள்ளைகள் அங்கே பிறந்து பிரசாவுரிமை பெற்றவர்கள். விவேகானந்தன் விற்பனை உதவியாளராகப் பணியாற்றியவர். பிரசாவுரிமை உள்ளவர். இவர்கள் இருவரும் கிளிநொச்சிக்கு 8ஆம் திகதி சென்று புலிகளின் வெளிநாட்டுப் பொறுப்பாளரான காஸ்ட்ரோ எனப்பட்ட வீரகத்தி மணிவண்ணனைச் சந்தித்தனர்.

பொலிகண்டியைச் சேர்ந்த மணிவண்ணன் 91இல் ஆனையிறவுத் தாக்குதலில் கால்கள் செயலிழந்து சக்கர நாற்காலியில் நடமாடுபவர். இவர் வெளிநாடுகளில் புலிகளின் செயற்பாடுகளுக்குப் பொறுப்பானவர். இவர் பதவிக்கு வந்ததும் தனக்கு வேண்டப்பட்டவர்களை நியமித்து பழையவர்களை விரட்டிவிட்டார்.

வழமை போல இவர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது. முன்பு பதவி இறக்கப்பட்ட பாரிஸ் லோறன்ஸ், திலகர் உட்படப் பலர் சமுகமளித்த வைபவங்களில் இவர்களின் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது. மதிய உணவின் பின்னால் தலைவர் காத்திருப்பதாகவும் பாதுகாப்புக்காக இவர்களது கண்ணைக் கட்ட வேண்டியிருப்பதாகவும் கூறி, கண்களைக் கட்டி இவர்களை வாகனத்தில் அழைத்துச் சென்றனர்.

தலைவரைக் காணும் மகிழ்ச்சியில் திளைத்தவர்களை பழைய இருண்ட வீடு ஒன்றுக்கு அழைத்துச் சென்று இருட்டறையில் தள்ளி, தனித்தனியே அடைத்தனர். விசாரணைக்காக வெளியே அழைக்கப்பட்டபோதிலும் நிலத்திலேயே எலிகள், பூச்சிகளுடன் படுக்க வைக்கப்பட்டனர். சைவ உணவுக்காரரான விவேகானந்தன் தண்ணீர் குடிக்க பயன்படுத்திய பானைக்குள் செத்த எலிகள் இரண்டு காணப்பட்டன. விவேகானந்தனின் மருமகன் புலிகளின் மருத்துவப் பிரிவில் இருந்ததால் அவர் பிணை நிற்க விவேகானந்தன் விடுதலை செய்யப்பட்டபோதும், விசாரணைக்காக அவர் திரும்ப வேண்டியிருந்தது. ஜெயதேவன் தொடர்ந்தும் சிறையிலேயே இருந்தார்.

விசாரணையை முன்னின்று நடத்தியது காஸ்ட்ரோவே. முக்கிய நோக்கம், கோயில் நிர்வாகத்தைப் புலிகளின் கைக்கு மாற்றுவதே. சித்திரவதையின் பின் விவேகானந்தன் சம்மதித்தார். ஜெயதேவன் முதலில் மறுத்தாலும் பின்னர் சம்மதித்தார். கோயில் நிர்வாகத்தை மாற்றும் பத்திரங்களில் கையொப்பமிடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டது.

விவேகானந்தன் உரிய பத்திரங்களுடன் லண்டன் வந்து சீவரத்தினம் என்பவரின் பொறுப்பில் உள்ள சிவயோகம் ட்ரஸ்ட்டின் பெயருக்கு கோயில் கைமாறியது. இந்தச் சீவரத்தினம் என்பவர் ஜெயதேவனின் சகோதரியைத் திருமணம் செய்த விடயத்தில் ஜெயதேவனுக்கும் இவருக்கும் மனக் கசப்பு ஏற்பட்டு இருவரும் பேசிக்கொள்வதில்லை.

இந்தச் சீவரத்தினம் என்பவர் புலிகளின் ஆயுதக் கொள்வனவாளரான கே.பி. போன்றே மயிலிட்டியைச் சேர்ந்தவர். நைஜீரியாவில் கணக்காளராக இருந்த இவர், கே.பி.யுடன் ஆபிரிக்காவில் புலிகளுக்காகப் பணம் சேர்ப்பதில் ஈடுபட்டவர். பின்னர் அமெரிக்காவில் ஏவுகணை வாங்கப் பணம் சேர்ப்பில் ஈடுபட்டவர். பின்னர் குடும்பத்தினரை இந்தியாவில் விட்டுவிட்டு லண்டன் வந்து "Tamil Voice International" என்ற பத்திரிகையை ஏற்கெனவே இருந்த "Tamil Times" க்கு எதிராக ஆரம்பித்தார். இந்திய இராணுவக் காலத்தில் பாலசிங்கம் லண்டன் வந்தபோது, லண்டனில் யார் புலிகளின் பெரியவர் என்பதில் இருவருக்கும் முறுகல் நிலை ஏற்பட்டது. லண்டனில் சின்னக் குகன், பெரிய குகன் இருவருக்குமிடையிலான போட்டி இவர்களுக்கு இடையிலான முறுகலின் பிரதிபலிப்பே. பிரபாகரன் தலையிட்டு இருவரையும் நீக்கி சேகர் என்பவரை நியமித்தார்.

கிட்டு லண்டன் வந்தபோது இந்தப் பத்திரிகை பெரும் நட்டத்தில் இயங்கியதாலும் சீவரத்தினத்தின் கணக்குகளில் தவறுகள் இருந்ததாலும். சீவரத்தினம், மனைவி பிள்ளைகளைக் கைவிட்டு, பத்திரிகையில் பணியாற்றிய தன்னிலும் பாதி வயதான ஜெயதேவனின் சகோதரியோடு தொடர்பு கொண்டதாலும் பத்திரிகையை நிறுத்த வழி தேடினார். அந்தப் பத்திரிகையில்தான் ஏ.ஜே.வில்சனின் பெறாமகள் ஜெயா, 'ராணியைக் கேளுங்கள்' என்ற பகுதியை எழுதி வந்தார். அதில் "பாலசிங்கத்திற்கு உண்மையாகவே கலாநிதிப் பட்டம் உண்டா?' என்ற கேள்விக்கு அவர் "ஆதாரபூர்வமாக அப்படியில்லை" என்று பதில் அளித்திருந்தார். அதுவரையும் தன்னைக் கலாநிதி என்று கூறி வந்த பாலசிங்கத்தின் புளுகு, புலிகளின் பத்திரிகையிலேயே அம்பலமானது. கிட்டு பத்திரிகையைக் காட்டி இதை நிறுத்தினார்.

சீவரத்தினம் தன் முதல் மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு ஜெயதேவனின் சகோதரியைத் திருமணம் செய்தார். இதனால் மைத்துனர்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டது.

ஜெயதேவன் கோயிலை ஸ்தாபித்ததோடு, சர்வதேச தமிழ் சம்மேளனம், தமிழ் ஐக்கிய அமைப்பு, தமிழ் அகதி நடவடிக்கைக் குழு. தமிழ் சமூக வீடமைப்புச் சங்கம். கிங்ஸ்பரி தமிழ்ப் பாடசாலையெனப் பல்வேறு புலிகளின் முகவர் அமைப்புகளைத் தொடங்கி புலி ஆதரவாளர்களின் தலைவராகவே விளங்கினார். அத்துடன் பிரிட்டனில் ஆட்சியிலுள்ள தொழிற்கட்சியிலும் செயற்பட்டார். தற்போதைய தனது தொகுதி பாராளுமன்ற உறுப்பினருடனும் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். பரி கார்டினர் எனப்பட்ட இந்த உறுப்பினரை இலங்கை விடயங்களில் ஆர்வம் கொள்ள வைத்தமைக்கு ஜெயதேவனே காரணம். உள்ளூராட்சிச் சபையில் தொழிற்கட்சி சார்பில் போட்டியிட்டு 897 வாக்குகளையும் பெற்றிருந்தார்.

இவரது தந்தை ராஜசிங்கம் பிரபல எழுத்தாளராவார். நல்லூரில் உள்ள இவர்களது 'கந்தன் கருணை' வீடு புலிகளால் தளமாகப் பாவிக்கப்பட்டிருந்தது. இந்திய இராணுவத்தினரால் தங்கள் தாயும் சகோதரனும் கொல்லப்பட்டதை இவரது சகோதரர் கலாநிதி நரேந்திரன் பகிரங்கப்படுத்தியிருந்தார். பாலசிங்கமும் மனைவியும் தென்கிழக்காசியாவில் பாஸ்போட், விசா இல்லாமல் அந்தரித்தபோது தன் செல்வாக்கைப் பாவித்து

> **பாலசிங்கம், தான் மட்டுமே பிரபாகரனின் அன்புக்குரியவராக இருக்க வேண்டும் என எண்ணியதால் மற்றவர்கள் செல்வாக்குப் பெறுவதை விரும்பவில்லை. எனவே, ஜெயதேவனை அவருக்குப் பிடிக்கவில்லை. அத்துடன் லண்டனில் உள்ள புலிகளின் பொறுப்பாளர் சாந்தனுக்கும் ஜெயதேவனைப் பிடிக்கவில்லை.**

ஜெயதேவன் பாஸ்போட் பெற்றுக் கொடுத்தார். அதன்பின் லண்டனுக்கு வந்து பாலசிங்கம் மருத்துவ வசதி பெறக் கூடியதாக இருந்தது.

பாலசிங்கம், தான் மட்டுமே பிரபாகரனின் அன்புக்குரியவராக இருக்க வேண்டும் என எண்ணியதால் மற்றவர்கள் செல்வாக்குப் பெறுவதை விரும்பவில்லை. எனவே, ஜெயதேவனை அவருக்குப் பிடிக்கவில்லை. அத்துடன் லண்டனில் உள்ள புலிகளின் பொறுப்பாளர் சாந்தனுக்கும் ஜெயதேவனைப் பிடிக்கவில்லை.

இங்கிலாந்து அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டுவர இருந்தபோது ஜெயதேவனும் நேமிநாதன் என்ற இன்னொரு வழக்கறிஞரும் அந்தச் சட்டத்தை எதிர்த்து வழக்குப் போட முயன்றனர். ஆனால் அவர்களுக்குத் தெரியாமல் பாலசிங்கம் அதிகாரிகளுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டார். பயங்கரவாதத் தடைச் சட்டம் வந்தால், தானே முதலாவதாகப் பாதிப்படைய நேரிடும் எனக் கண்ட பாலசிங்கம், புலிகள் தங்கள் அலுவலகங்களை மூடிக்கொண்டால் இங்கிலாந்து அரசு நடவடிக்கை எடுக்காது. அதற்குப் பிரதியுபகாரமாகப் புலிகள் இதற்கு எதிராக வழக்குத் தொடரக் கூடாது என்ற ஒப்பந்தத்திற்கு வந்தார்.

ஆனால், ஜெயதேவன் போன்றவர்கள் சட்ட நடவடிக்கைக்கு முயன்றார்கள். பாலசிங்கம் அந்தச் சட்ட நடவடிக்கையை நிறுத்தும்படி ஜெயதேவனைக் கேட்டார். இதனால் இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு பாலசிங்கம் ஜெயதேவனை ஆபாச வார்த்தைகளால் பேசினார். இதைப் பற்றிக் கடிதம் ஒன்றை எழுதி ஜெயதேவன் வன்னி உட்பட எல்லோருக்கும் அனுப்பினார். பாலசிங்கம் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனாலும் படித்தவர்கள் மத்தியில் பாலசிங்கத்தின் நடவடிக்கை பற்றிச் சலசலப்பு ஏற்பட்டது. சாந்தனின் உதவியுடன் பாலசிங்கம், ஜெயதேவனைப் பற்றிப் பொய்யான தகவல்களைப் பரப்பத் தொடங்கினார். இதற்குள் சீவரத்தினம் தன் மைத்துனர் மீதுள்ள ஆத்திரம் காரணமாகப் பாலசிங்கத்துடனான பழைய பகையை மறந்து கூட்டுச் சேர்ந்தார்.

சீவரத்தினத்தின் மகள் ஒருவரை காஸ்ட்ரோ திருமணம் செய்வதாக இருந்தது. ஆயினும் காஸ்ட்ரோ காயமடைந்த பின்னாள் அந்தத் திருமணம் நடைபெறவில்லை. சீவரத் தினம் ஒதுக்கப்பட்ட பின்பு மீண்டும் உயிர்த்தெழுந்து 'சிவயோகம் ட்ரஸ்'டைக் கைக்குள் கொண்டுவந்த பின்னர் காஸ்ட்ரோவின் ஆசியுடன் முத்துமாரியம்மன் ஆலயத்தைத் தொடங்கி, பாலசிங்கத்துடன் சேர்ந்து மற்றவர்களை மிரட்டினார். அத்துடன் பணம் பெறும் நோக்கில் ஈழபதீஸ்வரர் ஆலயத்தைக் கைக்குள் கொண்டுவரும் நடவடிக்கையில் சீவரத்தினம் ஈடுபட்டார்.

விவேகானந்தனிடம் காஸ்ட்ரோ, கோயில் கை மாறியதும் ஜெயதேவன் விடுவிக்கப்படுவார் என்று கூறியதால் மற்ற நிர்வாகிகளைச் சந்தித்து அவர்களைச் சம்மதிக்க வைத்து கோயில் கைமாற்றப்பட்டது. "ஜெயதேவன் விடுவிக்கப் படுவாரா?" என்று கேட்க, சீவரத்தினம் அலட்சியமாக, "அதை நீங்கள் வன்னியில்தான் கேட்க வேண்டும்" என்று அடுத்த நாள் பொறுப்பேற்க வருவதாகக் கூறிச் சென்றார். விவேகானந்தன் காஸ்ட்ரோவுடன் போனில் பேசியபோது, "அவர் குற்றவாளியா இல்லையா என்பது பற்றி இப்போது விசாரணை நடைபெறுகிறது. பல ஒழுக்க, நிதிக் குற்றச் சாட்டுக்கள் உள்ளன. குற்றவாளி என்றால் இங்கே தண்டனை வழங்கப்படும். இது பற்றி மேற்கொண்டு விசாரிக்க வேண்டாம்" என்று காஸ்ட்ரோ கூறினார்.

இதனால் விவேகானந்தன் யாருடனும் பேசாமல் தலைமறைவானார். ஜெயதேவனின் மாமனார் வந்து கேட்டபோது உண்மையை மறைக்க முடியாத விவேகானந்தன் உண்மையைக் கக்கினார். வந்து மகளுக்கு நிலைமையைச் சொல்லி வேதனையடைந்த மாமனார் சில மணி நேரத்தின் பின்னர் மாரடைப்பால் மரணமானார். புலிகளின் 'நந்தவனம்' அலுவலகத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்ட போதும் ஜெயதேவன் விடுவிக்கப்படவில்லை.

இதன் பின்னர் ஜெயதேவனின் மனைவி மஞ்சுளாதேவி துணிவு பெற்று பொலிஸ் உதவியை நாடினார். இதுவரையும் இவர்கள் பொலிஸாருக்கு அறிவிப்பது பற்றி நினைக்கவேயில்லை. அவ்வாறு செய்தால் ஜெயதேவனின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று பயந்திருந்தனர்

விவேகானந்தன் வரும் வரைக்கும் குடும்பத்தினருக்கு ஜெயதேவனின் நிலைமை தெரியாது. அவர்கள், அவர் தலைவரைச் சந்திக்கச் செல்கிறார் என்றே நினைத்திருந்தனர். மனைவியும் மூன்று பிள்ளைகளும் பொலிஸாருக்கு முறையிட்டபோது பொலிஸார் ஐந்து நாட்கள் அவகாசம் கேட்டிருந்தனர். அத்துடன் குடும்பத்தினர் இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்திற்கு முறையிட்டபோது, "அவர் இலங்கைக் கடவுச்சீட்டில் வந்ததால் தங்களால் ஒன்றும் செய்ய முடியாது" என்று தூதரகம் கை விரித்தது. அடிக்கடி வன்னி சென்று வரும் தூதரக அதிகாரிகள் புலிகளைத் தாஜா பண்ணுவதற்காக இப்படியான விடயம் குறித்துத் தலையிட விரும்பவில்லை.

ஜெயதேவனின் சகோதரனான டாக்டர் நரேந்திரன் ஒரு புறமும் மைத்துனரான தேவதாசன் கொழும்பு சென்றும் ஜெயதேவனை மீட்கும் "முயற்சிகளில்" ஈடுபட்டனர். தமிழ்ச் செல்வன், சூசை, நடேசன், பாலகுமார் என்று பலருடன் தொடர்புகொண்டபோது, அவர்கள் கவனிப்பதாக உறுதியளித்தனர். ஆயினும் காஸ்ட்ரோவுடன் தொடர்புகொள்ள முடியவில்லை. சாந்தன், பாலசிங்கம், சீவரத்தினம் ஆகியோர், 'இது காஸ்ட்ரோ முடிவு செய்ய வேண்டியது' என்று கைகழுவிவிட்டனர்.

தமிழ் ஊடகங்கள் இது பற்றி வாயே திறக்கவில்லை. ஆனால் லண்டனில் ராம்ராஜ் நடத்தும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம்தான் செய்தியை முதலில் வெளிக் கொணர்ந்தது. அதன் பின் புலி ஆதரவாளர்களுக்கு ஓடி வெளிக்கத் தொடங்கியது. "புலிகளுக்கு நீண்ட காலமாக ஆதரவளித்த ஜெயதேவனுக்கே இந்தக் கதியா?" என்ற கேள்வி எழுந்தது.

அத்துடன் ஜெயதேவனின் நண்பரான பாராளுமன்ற உறுப்பினர் பாரி கார்டினரின் உதவியும் நாடப்பட்டது. அவரும் இரகசியமான முறையில் தலையிட்டார். முன்பு அவரின் உதவியைப் பெற்றுத்தான் ஜெயதேவன் பாலசிங்கத்திற்கு உதவி செய்திருந்தார். மனிதாபினமான அடிப்படையில் வெளிநாட்டமைச்சுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டது. கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்திற்கும் அழுத்தம் கொடுக்கப்பட்டது. தற்போது ஜெயதேவனின் உதவிக்கு வந்தவர்கள் எல்லாம் ஒரு காலத்தில் ஜெயதேவனால் 'துரோகி' எனப்பட்டவர்களே.

ஆளும் தொழிற்கட்சியின் தலையீடு வேலை செய்யத் தொடங்கியது.

ஈழபதீஸ்வரர் ஆலயம் இருக்கும் கட்டடம் முன்பு தொழிற்கட்சி அலுவலகமாக இருந்ததுடன் ஜெயதேவன்தான் அதைக் குத்தகைக்கு எடுத்திருந்தார். உடனடியாகவே சீவரத்தினம் முகப்புப் பலகையை மாற்றி 'சிவ யோகம் ட்ரஸ்டின்' பெயரைப் பொறித்தார். அங்கு வேலை செய்த ஐயர்கள் உட்பட எட்டுப் பேரை வேலை நீக்கம் செய்தார். கட்டட உரிமையாளர்கள், சீவரத்தினம் உட்பட்டவர்களுக்கு 'இந்தக் கட்டடத்தை நீங்கள் சட்டவிரோதமான முறையில் பெற்றிருக்கிறீர்கள்' என்று எச்சரித்திருக்கிறார்கள். அத்துடன் வேலை நீக்கப் பட்டவர்கள் சட்ட நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

விவேகானந்தனை லண்டன் நகரப் பொலிஸார் ஸ்கொட்லண்ட் யார்ட் விசேட பிரிவு நான்கு மணி நேரமாக விசாரித்திருக்கிறது.

மார்ச் எட்டாம் திகதி இங்கிலாந்தின் உளவு அமைப்பினர் பாலசிங்கத்தை அழைத்து எச்சரிக்கை விடுத்ததுதான் தாமதம், பாலசிங்கம் உடனடியாகவே பிரபாகரனுடன் தொடர்பு கொண்டார். தலைவரின் தலையீட்டில் 59 நாட்களின் பின்னர் ஜெயதேவன் விடுவிக்கப்பட்டார்.

வழமைபோல புலிகள் தங்கள் நாடகமாடலைத் தொடர்ந்தனர். அவருக்குப் பகிரங்க வழியனுப்பு வைபவம் நடத்தி, மீண்டும் குடும்பத்தினருடன் வன்னிக்கு வரும்படி அழைப்பும் விடுத்தனர். ஆனால் இரகசியமாக இது குறித்து மௌனமாக இருக்கும்படி எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். கொழும்பு வந்த ஜெயதேவன், புலிகளின் குழுவினர் தன்னைக் கடத்தக் கூடும் என்ற அச்சம் காரணமாக இரகசிய இடமொன்றில் தங்கியிருந்தார்.

ஜெயதேவனின் விவகாரத்தை அம்பலப்படுத்திய ரி.பி.சி. வானொலிக்கும் அதன் பணிப்பாளர் ராம்ராஜுக்கு தொலைபேசி மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.

*(பத்திரிகையாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் சண்டே லீடரில் எழுதிய கட்டுரை, லண்டன் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்திக் குறிப்புகள் மற்றும் இணையத்தளங்களில் வந்த செய்திகளின் அடிப்படையில் இந்தச் செய்திக் குறிப்பு எழுதப்பட்டது.)*


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

பின்னாளில் நான் பிரபலமாக வளர்த்த பிறகு, இதே ஜி.கே.வி. என்னை 'ரோஷக்காரண்டா, நீ' என்று வாயாரப் பாராட்டி வியந்ததுண்டு.

இந்த இடத்தில் வாசகர்களுக்கு ஒரு சின்ன விளக்கம்.

கண்ணதாசனின் கீழ்



பணியாற்றுவது கேவலம் என்று நான் எண்ணவில்லை. அது எள் முனையளவு கூட, என் முன்னேற்றத்திற்கு உதவாது என்பதால்தான் அந்த வாய்ப்பை நான் விலக்கினேன்.

ஒரு கவிஞன் தனக்கென்று ஒரு முகவரியோடு இருத்தல் மிகமிக அவசியமானது. நம்மிடம் இருக்கும் தமிழ், நயா பைசா அளவுதான் என்றிருந்தாலும்கூட..... அதை முழு ரூபாயாக்கி முன்னேற வேண்டும் எனும் முனைப்பு இல்லாது போயின் நமக்கென்று ஒரு ஸ்தானத்தை சமூகம் வழங்காது.

எனக்குத் தெரிந்து எத்துணையோ மேதைகள் Ghost writers ஆக இருக்கிறார்கள். வறுமை அவர்களது திறமையை Black Mail செய்து வைத்திருக்கிறது.

முட்டிமோதி, நாமே முன்னேற வேண்டும். இல்லையேல் இது ஒத்துவராது என்று ஒதுங்கிப் போதல் சாலச் சிறந்தது.

எப்போதுமே என்னுடைய எழுத்துத்தான், எனக்கு Visiting Card ஆக இருக்க வேண்டும் எனும் வித்யாகர்வம் மன்னிக்கக் கூடிய அளவில் உள்ளவன் நான்.

ஸ்ரீரங்கத்தில் சோற்றுக்கில்லாமல் நான் சென்னைக்கு ஓடிவரவில்லை. வீடும், நிலமும் என் தந்தை வைத்து விட்டுத்தான் வைகுந்தம் போனார். பராரியாகிப் பிழைப்பிற்கேதுமின்றி, பணம் பண்ணப் பட்டணத்திற்கு நான் வரவில்லை; பாட்டு எழுதுவதில் உள்ள அளப்பரும் ஆசையின் உந்துதலாலேயே ஊர்விட்டு ஊர் வந்தேன். இதில் ஒருத்தரிடம் உதவியாளனாக இருந்து, எந்த ஜன்மத்தில் என் பேனாவை நான் திறப்பது?

இறைவன் நிழலைத் தவிர, எவர் நிழலிலும் ஒதுங்கி ஊனை வளர்ப்பது எனக்கு உடன்பாடான விஷயமல்ல.

எம்.ஜி.ஆர். என்னை ஆதரித்தார் என்பதற்காக என் தனித்தன்மையை நான் அதன் பொருட்டு அடகு வைத்தேனில்லை. அவ்வளவு ஏன்? நான் மது அருந்தும் பழக்கம் உள்ளவன் என்பது கூட எம்.ஜி.ஆர். அறிந்ததே.

"அந்தப் பழக்கத்தைக் கைகழுவி விட்டால் உங்களுக்கும் நல்லது; தமிழுக்கும் நல்லது" - என்று ஒரே ஒரு முறை எம்.ஜி.ஆர். என்னிடம் ஒரு மூத்த சகோதரன் போல் பாசம் ததும்பப் புத்தி கூறினாரே தவிர, 'இந்தப் பழக்கத்தையெல்லாம் விட்டால்தான் உங்களுக்கு என் படத்தில் பாட்டு எழுத வாய்ப்புக் கிடைக்கும்' என்று அவர் கண்டிஷன் போட்டதில்லை. போட்டிருந்தால், உடனே மீறியிருப்பேன்.

எப்பொழுதும், என் சுதந்திரத்தை விற்று நான் சுகம் வாங்கியதில்லை.

எந்த இசையமைப்பாளரோடு நான் பணியாற்றினாலும், அவருக்கு இணையாகத்தான் நான் கௌரவிக்கப்படவேண்டும் என்பதில் கவனமாக இருப்பேன் காளமேகம் பாடியது போல, இசையமைப்பாளரின் அரியாசனத்தில் எனக்கும் சரியாசனம் இல்லையென்றால் நான் தூற்றமாட்டேன்; தூர நிற்பேன்.

சிரம நாட்களில் எனக்கு உதவிய இன்னொருவர், புகழ் வாய்ந்த பின்னணிப் பாடகரும், பன்மொழி வித்தகரும், மிகச் சிறந்த மனிதாபியுமான திரு. P.B. ஸ்ரீநிவாஸ் அவர்கள்.

கஷ்டப்பட்ட காலத்தில் அவர் காசு கொடுத்து என் இரைப்பையை நிரப்பியிருக்கிறார். நான் வறுமைக் கடலில் மூழ்கிய போதெல்லாம், என் முடியைப் பிடித்துத் தூக்கிக் கரையில் போட்டுக் காப்பாற்றியவர்.

(தொடரும்.......)



# ரோபோக்களின் குழந்தைகள்



ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் நிகழுகின்ற திருமணங்களின்போது, அதன் அடிப்படைக் காரணங்களுள் ஒன்றாகப் பாலியல் உறவுகள் அமைகின்றன. திருமண வாழ்க்கையில் இவ்வாறு பாலியல் ரீதியிலான உறவுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுவந்த போதிலும் கூட, அது ஒரு அத்தியாவசிய தேவை என்பதைத் கண்டு கொள்ளாத நபர்களும் சமூகத்தில் இல்லாமலில்லை.

இவ்வாறான நபர்களுக்காகவே, அதாவது பாலியல் ரீதியிலான உறவுகளற்ற திருமணங்களைச் செய்து கொடுப்பதற்காக சீனாவில் புதிதாக ஒரு முகவர் நிலையமொன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கம்யூனிஸ ஆட்சியைக் கொண்டிருக்கும் சீனாவில் தற்போது இவ்வாறான பல புரட்சிகள் ஏற்பட்டு வருவது இயல்பாகியுள்ளது.

கிழக்கு சீனாவில், நென்ஜிங் நகரில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி நிறுவனம் 'த கியூபிட்' என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. பாலியல் ரீதியிலான தொடர்புகளை வைத்துக்கொள்ளாமல் திருமணம் முடித்துக்கொள்வதற்கு விரும்பும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மட்டுமே இந்த நிலையம் சேவை செய்து வருகின்றது.

'த கியூபிட்' நிறுவனத்தின் உரிமையாளரான லோ ஜுன் என்பவர், இதற்கு முன் திருமண சேவைகள் நிறுவனமொன்றை நடாத்தி வந்துள்ளார். இந்த நிலையில் அவரது நிறுவனத்துக்கு வந்துள்ள இரு பெண்கள், தங்களுக்குப் பாலியல் ரீதியிலான பந்தங்கள் இல்லாத வகையில் திருமணம் முடித்துக்கொள்ளும் தேவை இருப்பதாலோ ஜுன்னிடம் கூறியுள்ளனர்.


இந்த நிலையில்தான், இவ்வாறான நிறுவனமொன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு ஏற்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக லோ ஜுன் ஒரு பத்திரிகை விளம்பரம் கொடுத்துள்ளார். இதற்குப் பல ஆண்களிடம் இருந்து உடனடியாகப் பதில்கள் கிடைத்துள்ளன.

தங்களுக்கும் இது போன்ற தேவைகள் இருப்பதாகவும், எனவே இவ்வாறான திருமணங்களைச் செய்துகொள்ளத் தாங்கள் தயாராக இருப்பதாகவும், இதற்கான துணைகளைத் தேடித் தரும்படியும் கேட்டுப் பல கடிதங்களும் லோ ஜுன்னுக்குக் கிடைத்திருந்தன.

இதன் அடிப்படையிலேதான் லோ ஜுன் இந்த 'த கியூபட்' நிறுவனத்தை ஆரம்பித்துள்ளார்.

இந்த நிறுவனத்தின் மூலம் சேவைகளைப் பெற விரும்புபவர்கள், மூன்று அமெரிக்க டொலர்களைச் செலுத்தி நிறுவனத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். இதே நேரம் தங்களது தேவைகள் தொடர்பில் தனித்துவத்தை உறுதிப் படுத்திக் கொள்வதற்காக இவர்கள் கட்டாயமாக



நிறுவனத்துக்கு வருகை தரல் வேண்டும்.

இந்த நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டுள்ளவர்களுள் மூன்றில் இரண்டு வீதத்தினர் பெண்களாவர். இதில் பெரும்பாலானவர்கள் ஏற்கெனவே திருமணம் முடித்து அதன் மூலம் பாலியலை வெறுத்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும். அதாவது அவர்கள் கணவன்மார்களால் பாலியல் ரீதியில் வெகுவாகத் துன்புறுத்தப்பட்டவர்களாவர்.

இவ்வாறான புதுமுறைத் திருமணங்கள் ஒருபுறம் நடந்துகொண்டிருக்கும்போது ஐரோப்பிய மற்றும் அமெரிக்கக் கலாசாரங்களைப் பார்க்கும்போது திருமணம் முடித்துக் கொள்ளாமலேயே குடும்பம் நடத்தி வருவது ஒரு வழக்கமாக இருந்து வருகிறது. இந்த முறை தற்போது ஆசியக் கண்ட நாடுகளிலும் காணப்படுகின்றது.

எனினும் இப்படித் திருமணமாகாமல் குடும்பம் நடத்தும் (Living together) முறையானது அதி நவீன காலத்து முறை என்று எண்ணிவிடக் கூடாது. இது மனித குலம் குணவியல்புகள் மற்றும் பண்பாடுகளைக் கொள்ளாத காலகட்டத்தில் இயல்பில் இருந்து வந்துள்ள ஒரு நடைமுறையாகும். எனினும் அறிவார்ந்த ரீதியில் வளர்ச்சி கண்டுள்ள மனிதன், பொதுவான சமூகத்தின்பாலான நன்மை கருதி, திருமணம் எனும் பந்தத்துக்கு உரிய அர்த்தத்தைக் கற்பித்துள்ளபோதிலும் வளர்ச்சி காணாத நாடுகளில் இந்த பழைய முறைமை இன்னமும் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் சட்டங்கள் தடையாகாத காரணங்களால் ஒருவனுக்கு ஒருத்தி என்கிற கட்டமைப்புச் சிதறுகின்றபோது பல்வேறு பாலியல் ரீதியிலான நோய்கள் ஏற்படுவது இயல்பாகும்.

இதே நேரம் திருமணம் முடித்துக்கொண்டுள்ள தம்பதிகள், தங்கள் ஜோடிகளை பரஸ்பரம் பரிமாறிக் கொள்கின்ற உறவு நிலைகளையும் இன்றைய உலகில் காண முடிகின்றது.

அதீத பாலியல் ரீதியிலான வேட்கைகளே இதற்கு ஒரு காரணமாகும் என சமூக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறான முறைமைகள் உலகமயமாக்கலுடன் இன்று உலகம் முழுவதும் வியாபித்து வரக்கூடிய ஒரு ஆபத்து உருவாகியுள்ளது. உலகம் சுருக்கப்பட்டதொரு நிலையில் இவ்வாறான நிலைப்பாடுகள் வியாபித்துச் செல்வதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. எனினும் இவ்வாறான நிலைகளுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் பின்னணிகள் எங்களைப் போன்ற நாட்டவர்களிடம் இல்லை என்றே கூற வேண்டும்.

பாலியல் ரீதியிலான தொடர்புகளற்ற ஒரு திருமண பந்தம் என்பது அடுத்த பரம்பரைக்கு இடமளிக்காத ஒரு தடையாகவும் கொள்ள முடியும். இப்படியான ஒரு நிலையில் குழந்தைகளை விருத்தி செய்வதற்கான நவீன ரக ரோபோக்களை உற்பத்தி செய்கின்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதாவது ரோபோக்களுக்கு உணர்ச்சிகளை ஊட்டக்கூடிய தகுதி தங்களுக்கு இருப்பதாக கொரிய நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

தென் கொரியாவில் உள்ள அறிவார்ந்த ரோபோ, இயந்திரங்களின் ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர் சிம் ஜோன்ங் - ஹ்வேன், டீ என்ரயைப் பின்பற்றி இதனைச் சாதிக்க இயலும் எனக் கூறுகின்றார்.

இவ்வாறான ரோபோக்களுக்கு இன்ப, துன்பங்கள், பசி என்பன மட்டுமல்லாது பாலியல் உணர்வுகளும் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் இருப்பதாக அவர் கூறுகின்றார்.


இன்னும் மூன்று மாதங்களில் இப் புதிய தொழில்நுட்பம் குறித்து மேலதிகத் தகவல்களை வெளியிட முடியும் என்பது அவரது நம்பிக்கையாகும்.

ரோபோ இயந்திரங்களுக்கு இவ்வாறான உணர்ச்சிகள் ஏற்பட்டால் அது மனித சமூகத்தையே பாதிக்கும் என்பது சமூக ஆய்வாளர்களது கருத்தாகும். இதற்குப் பதிலளிக்கும் மேற்படி ஆய்வு நிலையம், ரோபோக்களுக்கு மிருதுவான உணர்வுகள் மாத்திரம் ஏற்படக்கூடிய வகையில் அவை உருவாக்கப்பட்டால் பிரச்சினையே கிடையாது' என்கிறது.

-பாரூக்

# உளவாளிகள் 30

**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....**



அதோடு தேசங்களின் நிர்வாக அமைப்புகளும் விரிவடைந்து சிக்கல்கள் நிரம்பியதாக ஆயிற்று. நிர்வாக இயந்திரத்தில் கேந்திர ஸ்தானங்களில் உள்ளவர்களின் மனப்பான்மையினை அறிந்து நல்லுறவினை வளர்த்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது.

தொழில் வளர்ச்சியும் விஞ்ஞான வளர்ச்சியும் வேகமாக ஏற்பட்டபோது நாடுகளுக்கிடையே உள்ள சார்புத் தன்மையும் அதிகரித்துக்கொண்டே போயிற்று. வளர்ச்சி அடையாத நாடுகளுக்கு வளர்ச்சி அடைந்த நாடுகள் தொழில் தொடங்குவதற்கு நிதியுதவி செய்கின்ற பழக்கமும் உருவாயிற்று. அந்நிய நாடுகளின் தொழில் நுணுக்க வளர்ச்சி எந்த அளவில் இருக்கிறது என அறிய வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் விளைவாகப் புதிய பொருளாதாரத் தத்துவங்கள் தோன்றின. கார்ல் மார்க்ஸ் உருவாக்கிய கம்யூனிஸ சித்தாந்தம் செல்வாக்குப் பெற்றபோது, முதலாளித்துவ அணி என்றும் முதலாளித்துவ எதிர்ப்பு அணி என்றும் இரண்டு அணிகள் தோன்றின. ரஷ்யாவில் கம்யூனிஸ புரட்சி வெற்றிபெற்று சோஷலிஸ ஆட்சி மலர்ந்தது. அமெரிக்கா முதலாளித்துவ பொருளாதார அடிப்படையில் முன்னேறிப் பலம் பொருந்திய நாடாக உருவாயிற்று.

இரண்டாவது உலகப் போரின் போது முதலாளித்துவ அமெரிக்காவும் கம்யூனிஸ ரஷ்யாவும் நட்புறவு கொண்டு ஜேர்மனிய - ஜப்பானிய, பாசிசப் படைகளை முறியடித்து வெற்றி கண்டதன் விளைவாக உலக அரங்கில் அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் இரு பெரும் வல்லரசுகளாக அங்கீகாரம் பெற்றன.

போர் நெருக்கடியின்போது முரண்பட்ட பொருளாதாரக் கோட்பாடுகளைக் கொண்ட இரண்டு வல்லரசுகளும் ஒருங்கிணைந்து செயற்பட்டனவே தவிர, போர் முடிந்த உடனேயே இரண்டு வல்லரசுகளும் தங்களுடைய ஆதிக்க வளையங்களை விரிவுபடுத்திக்கொள்ளும் முயற்சிகளில் தீவிரமாக இறங்கின. உலகெங்கும் உள்ள நாடுகளின் மீது தங்கள் ஆதிக்கத்தை வளர்த்துக்கொள்ள இந்த வல்லரசுகள் முயற்சித்தபோது, அதற்கேற்ற வகையில் தங்களுடைய உளவுத்துறைகளையும் வலிமை மிக்கதாக ஆக்கிக் கொண்டன.

அமெரிக்க உளவு நிறுவனம் சி.ஐ.ஏ. என்றழைக்கப்படுகிறது. ரஷ்ய உளவு நிறுவனம் கே.ஜி.பி. என்றழைக்கப்படுகிறது. இன்றைக்கு உலக அரங்கில் சி.ஐ.ஏ., கே.ஜி.பி. ஆகிய உளவு நிறுவனங்களின் நடவடிக்கைகள் பரவலாகி இருப்பதன் பின்னணி இதுதான்.

வல்லரசுகள் மட்டுமின்றி ஏனைய நாடுகளும் தங்களின் சக்திக்கேற்ற வகையில் உளவு நிறுவனங்களை உண்டாக்கிச் செயற்பட்டு வருகின்றன. பிரிட்டன் எம்.ஐ - 18 என்றும் எம்.ஐ - 16 என்றும் இரு வேறு உளவு நிறுவனங்களை வைத்திருக்கிறது. அமெரிக்காவிலும் சி.ஐ.ஏ. தவிர எப்.பி.ஐ. என்கிற உளவு நிறுவனமும் உண்டு. மேற்கு ஜெர்மனி, இஸ்ரேல், பிரான்ஸ், சீனா போன்ற நாடுகளும் சக்திவாய்ந்த உளவு நிறுவனங்களை வைத்திருக்கின்றன. வளர்ந்து வரும் நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளும் உளவு நிறுவனங்களை வைத்திருக்கின்றன. இந்தியாவிலும் 'றோ' என்று சொல்லக்கூடிய உளவு நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# சங்கர மடத்துக் கிங்கரர்கள்

## 12

**சை**தாப்பேட்டை நீதிமன்றத்தில் சங்கரராமன் கொலை வழக்குத் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை நீதிமன்ற ஊழியர் பெயர்களைக் கூறி அழைத்தார்.

வழக்கம் போல் மாஜிஸ்திரேட்டு இருக்கை அருகே ஜெயேந்திரர், விஜயேந்திரர் இருவரும் சென்றனர்.

அப்போது அங்கிருந்த பொலிஸ்காரர் "கூண்டில் ஏறுங்கள்" என்றார்.

அதற்கு ஜெயேந்திரர், மாஜிஸ்திரேட்டு இருக்கை அருகே செல்வதாக சைகை மூலம் கூறினார். அதற்கு பெண் ஊழியரும் ஒரு வக்கீலும் "கூண்டில் ஏறுங்கள்" என்றனர்.

அதற்குப் பிறகு ஜெயேந்திரரும் விஜயேந்திரரும் கூண்டில் ஏறி நின்றனர். அப்போது அவர்கள் முகம் வாடிப்போய் இருந்தது.

சங்கரராமன் கொலை வழக்கில் ஜெயேந்திரர், விஜயேந்திரர் உட்பட 25 பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் ஜெயேந்திரர், விஜயேந்திரர், ஆர்.ஆறுமுகம், செந்தில்குமார், ஆர்.டி.பழனி ஆகிய ஐந்து பேர் ஜாமீனில் விடுதலையாகி வெளியே உள்ளனர். அப்ருவர் ரவி சுப்பிரமணியம் காஞ்சிபுரம் கிளை சிறையிலும், தாதா அப்பு கடலூர் சிறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர். மற்ற 18 பேரும் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் இவ்வழக்குத் தொடர்பாக 1,873 பக்கக் குற்றப் பத்திரிகையை காஞ்சிபுரம் கோர்ட்டில் ஜனவரி மாதம் 21ஆந் திகதி பொலிஸார் தாக்கல் செய்தனர்.

நீதிபதி உத்தமராஜ் வந்து தனது இருக்கையில் அமர்ந்தார். அன்றைய தினம் பிற வழக்குகள் விசாரணக்கு வந்தன.

அப்போது நீதிமன்றப் பெண் ஊழியர் எழுந்து "சுப்பிரமணி என்கிற ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் வழக்கு விசாரிக்கும்போது வந்தால்போதும். அது வரை வெளியில் இருங்கள்" என்றார். உடனே ஜெயேந்திரர் வெளியே போய் நீதிமன்ற வளாகத்தில் நின்றார். அப்போது மடத்து ஊழியர்கள் ஒரு ஸ்ரூல் கொண்டுவந்து போட அதில் ஜெயேந்திரர் உட்கார்ந்துகொண்டார். அவரைச் சுற்றி மடத்து ஊழியர்கள் நின்று அவருக்கு விசிறிக் கொண்டிருந்தார்கள். ஜெயேந்திரர் உட்கார்திருந்த இடம் வக்கீல்கள் சங்க அறைக்குச் செல்லும் வழியாகும்.

அந்த இடத்தில் மரக்கட்டையிலான தடுப்பு இருந்தது. அங்கு இருந்த கும்பலில் யாரோ அதை உடைத்துவிட்டனர். இதைக் கண்ட ஒரு வக்கீல் அங்கு வந்து "என்ன இது? நீதிமன்ற சொத்தை சேதப்படுத்திவிட்டீர்களே?"

எனக் கேட்டார். அதற்கு மடத்து ஊழியர்கள் "பெரியவா வந்து இருக்கா. அதனால நாங்க வந்தோம். நாங்க உடைக்கல" என்று கூறினார்கள். அதற்கு அந்த வழக்கறிஞர், "யார் பெரியவா? அவர் குற்றவாளி, பெரியவா என்றால் வேறு எங்கேயாவது வைத்துக்கொள்ளுங்கள்" என்றார்.

மடத்து ஊழியர்கள் வழக்கறிஞர்களிடம் ஆங்கிலத்தில் சரமாரியாகப் பேசினார்கள். இரு தரப்பிலும் ஆங்கிலத்தில் திட்டிக்கொண்டனர். "உங்களுக்கு இருக்கும் உரிமை எங்களுக்கும் உள்ளது" என மடத்து ஊழியர்கள் கூறினார்கள். அதற்கு வக்கீல்கள், இது கோர்ட்டு மடம் அல்ல உங்கள் உரிமையை காட்ட" என்றனர். அப்போது மடத்து ஊழியர் ஒருவர் தகாத வார்த்தையைக் கூறினார். இதனால் ஆத்திரமடைந்த இன்னொரு வக்கீல், திட்டிய அந்த ஊழியரைப் பிடித்துச் சென்று ஒரு அறையில் பூட்டினார். இரண்டு, மூன்று தடவை வக்கீல் அந்த ஊழியருக்குக் கன்னத்தில் அறை விட்டார். நிலைமை மோசமாவதைக் கண்டதும் மற்ற வக்கீல்கள் அங்கு வந்து அந்த ஊழியரை விடுவித்தனர்.

இந்தச் சம்பவம் நடந்தபோது ஜெயேந்திரர் மௌனமாக அனைத்தையும் கவனித்துக் கொண்டே இருந்தார். அவர் முகம் மிகவும் வாடிக் கறுத்துவிட்டது. பிறகு மடத்து ஊழியர்களைப் பார்த்து 'போய்விடுங்கள்' என்று சைகை காட்டினார். அதன் பிறகு வேனில் போய் அமர்ந்துகொண்டார்.

மகா பெரியவராக மதிக்கப்பட்ட ஜெயேந்திரரையும் அவரது பக்தர்களையும் வக்கீல்கள் மிகக் கேவலமாகத் திட்டியதைப் பார்க்கப் பரிதாபமாகவிருந்தது. எத்தனையோ பெரும் பெரும் அரசியல் புள்ளிகள், வி.ஐ.பி.க்களெல்லாம் சாஷ்டாங்கமாக ஜெயேந்திரரின் கால்களில் விழுந்து ஆசீர்வாதம் பெறுவதுண்டு. ஒரு சாதாரண மேலாளர் சங்கரராமனின் விவகாரமும் பெண் சில்மிஷக் குற்றச்சாட்டுகளும் அவரைக் கூனிக் குறுக வைத்தமையும் ஆதிசங்கரரின் திருவிளையாடலோ என்னவோ?


ஆதிசங்கரரோடு சம்பந்தப்பட்ட ஓர் ஐதீகக் கதையைச் சங்கர மடத்துப் பக்தர்கள் சொல்வதுண்டு.

"ஒருநாள் வீதிவழியே ஆதிசங்கரர் நடந்து போய்க்கொண்டிருந்தாராம். எதிர்ப்பட்டாப்பல ஒரு சண்டாளன் வந்தானாம். (சண்டாளன் என்று இங்கே குறிப்பிடப்படுவது தாழ்த்தப்பட்ட சமூகமென்று பொதுவாகக் கூறப்படும் புலையர் சமூகத்தைச் சேர்ந்தோரை) ஆதிசங்கரர் அவனைப் பார்த்து 'விலகிப் போனு' சொன்னாராம். உடனே அவன் நீங்க விலகிப் போன்னு சொல்றது என் உடம்பையா அல்லது உள்ளேயிருக்கிற ஆன்மாவையா?' என்று கேட்டானாம். அப்பதான் ஆதிசங்கரருக்குப் பொறி தட்டினாப் போல இருந்ததாம். ஆன்மாவும் அது உறைஞ்சிருக்கிற இந்த உடம்பும் வெவ்வேறல்ல என்பதை அந்தப் பகவானே வந்து தனக்கு உணர்த்தினதா புரிஞ்சிண்டாராம். இந்த அத்வைத தத்துவம்தான் சங்கர மடத்தைக் காலம் காலமாகக் காப்பாற்றி வருகிறதென்று ஒரு தடவை ஜெயேந்திரர் கூறினாராம். அதாவது பக்தர்கள்தான் மடம், மடம் தான் பக்தர்கள் என்பது ஜெயேந்திரரின் நியாயம். ஆனால் அத்தகைய இந்த மடாதிபதியின் மீது தமிழகத்தின் பிரபல பெண் எழுத்தாளர்களான அனுராதா ரமணனும், ஜோதிர்லதா கிரிஜாவும் பெண் சில்மிஷங்களில் சம்பந்தப்பட்டவரென்று அம்புகளை எடுத்து வீசியிருந்தார்கள்.

சங்கர மடத்தில் வைத்துத் தன்னோடு தகாத முறையில் நடக்க ஜெயேந்திரர் முனைந்தாரென்று அனுராதா ரமணன் குற்றஞ்சாட்டியமை பழைய விடயம். ஆனால் அனுராதா ரமணனின் இக் குற்றச்சாட்டினைக் கேலி செய்ததோடு சங்கராச்சாரியாரைப் பாதுகாக்கும் விதத்தில் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்ற ஆங்கில பத்தரிகையிலும் 'துக்ளக்' 'ஜூனியர் விகடன்' போன்ற தமிழக சஞ்சிகைகளிலும் காரசாரமாக எழுதிவந்த குருமூர்த்தியென்ற பிரபல பத்திரிகையாளர் மீது பாய்ந்திருக்கிறார் அனுராதா ரமணன். அது மட்டுமல்ல, குருமூர்த்தி மீது விஷ்ணு காஞ்சி பொலிஸ் வழக்கும் தாக்கல் செய்திருக்கிறது. சங்கரராமன் கொலை தொடர்பாகத் தெரிவிக்க வேண்டிய தகவல்களைத் தெரிவிக்க மறுத்தார், சட்டப்படி நியமிக்கப்பட்ட விசாரணை அதிகாரிகளின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல மறுத்தார், போலி ஆதாரங்களை அரசுக்கு அளித்தாரென்று மூன்று குற்றச்சாட்டுகளின் கீழ் குருமூர்த்தி மீது பொலிஸ் வழக்குத் தொடர்ந்திருக்கிறது. 'சுதேசி ஜாக்ன் மஞ்ச்' என்ற இயக்கத்தின் அமைப்பாளராகவும் பல இந்து அமைப்புகளுடன் தொடர்பினையும் கொண்டிருக்கும் குருமூர்த்தி, பொலிஸ் மீது வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக எதிர்ச் சவால் விட்டிருக்கிறார். சங்கராச்சாரியார்கள் கைதுசெய்யப்பட்டமை பற்றிக் காரசாரமாகக் கட்டுரைகளை எழுதிவரும் பத்திரிகையாளர் குருமூர்த்தி, அனுராதா ரமணன் மீது தொடுத்திருக்கும் தாக்குதல் அங்கு பெரும் சர்ச்சையையே கிளப்பியுள்ளது. "மடாதிபதிகளைக் கொலை வழக்கில் விசாரணை செய்ய ஆரம்பித்துவிட்டு, அவர்கள் மீது பெண்களைச் சம்பந்தப்படுத்தி அவதூறுகள் கிளப்பப்பட்டதேன்?" என்று கேள்வியெழுப்பியிருக்கும் குருமூர்த்தி, தனது கையை "ஜெயேந்திரர் பிடித்திழுத்தாரெ"ன்று அனுராதா நாடகமாடுகிறாரென்றும் குற்றஞ்சாட்டியுள்ளார். குருமூர்த்தியின் கேள்வி இதுதான்.

"ஜெயேந்திரர் தனியறையில் வைத்துத் தன்னோடு தவறாக நடக்க முற்பட்டாரென்று பெரும் பரபரப்பைக் கிளப்பிய அனுராதா ரமணன், எட்டேயெட்டு மாதங்களுக்கு முன்னர் சங்கர மடத்துக் கூட்டமொன்றில் ஜெயேந்திரரைப் புகழ்ந்து பேசியிருக்கிறார்" என்கிறார் குருமூர்த்தி. "காஞ்சி காமகோடி சங்கர மெடிக்கல்ஸ் அறக்கட்டளை கடந்த வருடம் மார்ச் 21ஆம் திகதி பெசன்ற் நகரிலுள்ள ரத்னகிரீஸ்வரர் ஆலயத்தில் ஏற்பாடு செய்திருந்த ஒரு கூட்டத்தில் கலந்துகொண்ட அனுராதா ரமணன் ஜெயேந்திரரைப் பற்றிப் புகழ்ந்து பேசியிருக்கிறார். பக்கவாதத்தினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த நான் இன்று நடமாடவும் உங்கள் முன் பேசவும் காரணம் ஜெயேந்திரர்தானென்று அனுராதா அந்தக் கூட்டத்தில் பேசியதைச் சமூகத்தின் உயர் மட்டத்திலுள்ள பலரும் தங்கள் காதுகளால் கேட்டிருக்கின்றனர். எட்டு மாதங்களுக்கு முன்னர் தான் மதித்த ஒரு பெரியவர் மீது திடீரென்று அந்தப் பெண்மணி அதிர்ச்சியாகக் குற்றஞ்சாட்டுகிறார் என்றால் அதன் பின்னணி என்ன? யாராவது அந்தப் பெண்ணை ஜெயேந்திரருக்கு எதிராகத் தூண்டி விட்டார்களா? கடலூர் பொலிஸ் சுப்ரீண்டன் பிரேம்குமார் பிழையான முறையில் விசாரணை நடத்துகிறார் என்பதற்கு இது போதுமே யென்று பத்திரிகைகளில் சாடியுள்ளார் குருமூர்த்தி.

இது தொடர்பாக நான் குருமூர்த்தியின் கையடக்கத் தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டேன். அப்போது மும்பையிலிருப்பதாகத் தெரிவித்த அவர், தான் எழுதியவை அத்தனையும் உண்மையென வலியுறுத்தியதோடு, அனுராதா ரமணனைக் காட்டமாகவும் சாடினார். அனுராதா பல நோய்களால் பீடிக்கப்பட்டு அவதிப்பட்டமைக்குச் சங்கர மடத்தின் சாபமே காரணமென்றும் சொன்னார். இது குறித்து விசாரிப்பதற்கு அனுராதா ரமணனோடு பலமுறை தொடர்புகொண்டேன், முடியவில்லை. ஏழாவது தடவையாக நானெடுத்த முயற்சி வெற்றிபெற்றது. முதலில் என்னை நான் அறிமுகப்படுத்திக்கொண்டேன். என்னைப் பத்திரிகையாளரென அறிமுகப்படுத்திய நான் பத்தி எழுத்தாளராகவும் உள்ளேன் என்று விளக்கினேன். இலங்கையிலிருந்து வெளிவரும் 'தினமுரசு' என்ற வாரப் பத்திரிகையில் சங்கர மடத்து விவகாரங்கள்




பற்றித் தொடர் கட்டுரையொன்றினை எழுதி வருவதாகக் குறிப்பிட்ட நான், "குருமூர்த்தி பத்திரிகைகளில் உங்களைச் சாடி எழுதியிருக்கிறாரே பார்த்தீர்களா?" என்றேன்.

சிறிது ஆத்திரமடைந்த அவர், "நீங்கள் காஞ்சிபுரம் என்றால் சங்கர மடத்தின் கையாளா?" என்று கேட்டார். நான் 'இல்லை'யென்று மறுத்ததோடு "குருமூர்த்தி உங்கள் மீது தெரிவிக்கும் குற்றச்சாட்டுகள் பற்றி எழுதப்

**அருண் கண்ணன்**

போகிறேன். ஒரு தரப்பு விடயங்கள் பற்றி மட்டும் எழுதுவது சரியல்ல. அதனால்தான் உங்களிடமிருந்தும் பதிலைப் பெற்று எழுதலாமென நினைக்கிறேன்" என்றேன்.

கடுகடுப்பான குரலைத் தளர்த்திய அனுராதா ரமணன் தொடர்ந்தார்.


சக பத்திரிகையாளனென்ற வகையில் நான் உங்களை மதிக்கிறேன். பெண்களென்றால் அதுவும் சமூகத்தில் பெயர் பெற்ற பெண்களென்றால் அவர்களைப் பற்றி இல்லாதது பொல்லாததெல்லாம் எழுதுவது சிலருக்கு வழக்கமாகிவிட்டது. என்னை நீங்கள் பத்திரிகைத் துறையோடும் எழுத்துத் துறையோடு சம்பந்தப்பட்ட பெண்மணியென்பதற்கு அப்பால் ஒரு சகோதரியாகப் பார்க்க வேண்டும். ஜெயேந்திரர் எனது கையைப் பிடித்தாரென்று கூறப்படுவது தவறு. அவரது அறைக்குள் பத்திரிகையொன்று வெளியிடுவது சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருந்தபோது, திடீரெனத் தவறாகப் பேச ஆரம்பித்துவிட்டார். 'நீயுமொரு துறவியா' வென்று திட்டிவிட்டு நான் வெளியேறிவிட்டேன் இதுதான் நடந்தது" என்றார்.

"இது நீங்கள் ஏற்கெனவே தெரிவித்த விடயம்தானே. நான் கேட்பது பத்திரிகையாளர் குருமூர்த்தி சமீபத்தில் உங்களைப் பற்றித் தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுகள் குறித்து உங்கள் பதிலென்ன? என்பதுதான்" என்றேன்.

அவர் சற்று உச்சஸ்தாயியில் பேசினார். காஞ்சிகாமகோடி சங்கரா மெடிக்கல் அறக்கட்டளை ஏற்பாடு செய்திருந்த ஆண்டு விழாவுக்குத் தலைமைதாங்க வருமாறு அவர்கள் என்னை அழைத்தது உண்மை. நான் போனது, கூட்டத்தில் பேசியதெல்லாம் உண்மை. ஆனால் நான் பேசாததைப் பேசியதாக எழுதி என்னைச் சீண்டிப் பார்ப்பதற்குக் குருமூர்த்தி முயன்றுள்ளார். என்னை எதற்காகத் தலைமை தாங்க அழைத்தார்களென்று எனக்குத் தெரியாது. இரத்த நோய், சர்க்கரை வியாதி, எலும்பு முறிவு, பைபாஸ் ஆபரேஷன், இத்தனை வியாதிகளுக்குப் பின்னாலும் நான் நல்லபடியாக இருப்பதால் ஒருவேளை அவர்கள் என்னை அழைத்திருக்கலாம். இன்று நான் உங்கள் முன்னிலையில் நின்று பேசுகிறேனென்றால், ஈசர் யோகா மையத்தில் குருநாதர் ஜக்கி வாசுதேவ் அவர்கள் மூலம் பயின்ற யோகாவும் தியானமும்தான் காரணமென்று நான் அங்கு பேசுகையில் குறிப்பிட்டேன்.

ஜெயேந்திரரை நான் புகழ்ந்து பேசவுமில்லை. ஜெயேந்திரரால்தான் எனது நோய்கள் குணமாகினவென்று நான் கூறவுமில்லை. ஐம்பது பேர் கூட அந்த நிகழ்ச்சியில் பங்குபற்றவில்லை. நான் பேசாத ஒன்றைப் பேசியதாகப் புரளி கிளப்புவது குருமூர்த்திக்குக் கைவந்த கலை.

**(தொடரும்.....)**




**ஜெயேந்திரர் தன்னோடு தவறாக நடக்க முற்பட்டாரென்று குற்றஞ்சாட்டிய அனுராதா ரமணன் அவரால் தான் தன் நோய்களெல்லாம் தீர்ந்ததாக முன்னர் கூறியிருந்தார்......**


**-குருமூர்த்தி**

## ஜெயேந்திரர் விவகாரத்தில் எழுத்தாளர் அனுராதாவும் பத்திரிகையாளர் குருமூர்த்தியும் குடுமிப்பிடி மோதல்




**ஜெயேந்திரர் தவறான நோக்கோடு என்னோடு பேசியது உண்மை. காஞ்சிபுர அறக்கட்டளை ஏற்பாடு செய்த கூட்டத்தில் நான் பேசியது உண்மை. ஆனால் ஜெயேந்திரர் நான் புகழ்ந்து பேசவில்லை. குருமூர்த்தி தொடர்ந்தும் பொய்களை எழுதி வருவாரேயானால் அவமானப்படப்போவது ஜெயேந்திரர்தான். என்னிடம் ஆதாரபூர்வமான உண்மைகள் பல உண்டு.**

**-அனுராதா ரமணன்**



தொல்லைதரும் அகப்பேயைத் தொலைக்க வேண்டும்
துணையென்று நின்னருளைத் தொடரச் செய்தே
நல்லவழி சேர்ப்பித்துக் காக்க வேண்டும்.
நமோ நம ஓம் சக்தி யென நவிலாய் நெஞ்சே!

– சுப்பிரமணிய பாரதியார்



# ஒரு அகப்பை மாவைக் கொண்டு ஊரெல்லாம் ஒரு தோசை



**பாப்பா முரசு சிறுகதை**

ஞானபுரம் என்ற ஊரில் பாண்டியன் என்ற இளைஞன் வாழ்ந்து வந்தான். பாண்டியன் தன் தாயின் மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தான். தன் தாயாரின் மறைவுக்குப் பின்னர் அன்னசத்திரம் ஒன்றினை ஏற்படுத்தி, அதன் மூலம் ஏழை மக்கள் பயனடைய வேண்டும் என்று விரும்பினான்.

தன் தாயார் பெயரில் அன்னசத்திரம் அமைப்பதற்கு தன் சொத்தின் ஒரு பகுதியினைச் செலவிடுவது என்று முடிவு செய்தான்.

உடனே அதற்கான இடத்தினைத் தேர்வு செய்து அன்னசத்திரத்தினைக் கட்டி முடித்தான்.

பாண்டியனின் அன்னசத்திரத்தினால் ஏராளமான மக்கள் பயனடையத் தொடங்கினார்கள்.

ஏராளமான ஏழை மாணவர்கள் அங்கு தங்கி கல்வி பயின்று வந்தார்கள். அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் அங்கே கிடைத்தன.

ஒரு சமயம் பாண்டியனுக்கு பெரும் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டது.

அன்னசத்திரத்திற்குப் போதுமான பணம் இல்லாமல் நெருக்கடி ஏற்பட்டது.

அந்தப் பணநெருக்கடியை எப்படிச் சமாளிப்பது என்று யோசனை செய்தான் பாண்டியன்.

திடீரென அவனுக்குப் பரமசிவன் பண்ணையாரின் ஞாபகம் வந்தது.

பரமசிவம் ஓரளவு தானம் தர்மங்கள் செய்து வருகிறார் என்று பாண்டியன் கேள்வியுற்றான். எனவே அவரிடம் சென்று தனது நிதி நெருக்கடியைத் தெரியப்படுத்தினால் நிச்சயமாகப் பண உதவியினைச் செய்வார் என்று நம்பினான்.

பரமசிவம் பண்ணையார் பக்கத்துக் கிராமமான ஆத்தூரில் வசித்து வந்தார். எனவே ஆத்தூருக்குச் சென்றான் பாண்டியன்.

பாண்டியன் பண்ணையாரின் வீட்டை வந்தடைந்தான்.

அந்த நேரத்தில் பரமசிவம், கணக்கரோடு அமர்ந்துகொண்டு தனது பண்ணைக் கணக்கு வழக்குகளை எல்லாம் சரிபார்த்துக் கொண்டிருந்தார்.

பாண்டியன் அவர் முன் சென்று வணக்கம் தெரிவித்தான்.

கணக்கர் வேறு வேலையாகச் சென்றுவிட பண்ணையார் பரமசிவம் பாண்டியனுக்குப் பதில் வணக்கம் தெரிவித்தபடி அவனை அமர வைத்தார்.

"தம்பி! உன் பெயர் பாண்டியன்தானே! நீ பக்கத்துக் கிராமத்தில் அன்னசத்திரம் நடத்துகின்றாய் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதுசரி! இப்போது எதற்காக என்னைப் பார்க்க வந்தாய்?" என்று கேட்டார்.

"ஐயா! நீங்கள் என்னைச் சரியாக அடையாளம் கண்டுகொண்டதிற்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஒரு உதவியின் பொருட்டே வந்துள்ளேன். அந்த உதவியினை நீங்கள் செய்தால் அதனால் ஏராளமானவர்கள் பயன் அடைவார்கள்" என்றான் பாண்டியன்.

"என்னால் ஏராளமானவர்கள் பயன் அடைகின்றார்கள் என்றால் எந்த உதவியும் செய்ய நான் தயாராக இருக்கின்றேன். நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்! உடனே செய்கிறேன்!" என்றார் பரசிவம்.

"ஐயா! உங்களின் தர்ம உள்ளத்தினை நான் பெரிதும் பாராட்டுகிறேன். நீங்கள் மட்டும் எனக்கு சிறிது நிதி உதவியினைச் செய்ய வேண்டும். நீங்கள் மட்டும் எனக்கு சிறிது நிதி உதவியினை செய்துவிட்டால் தள்ளாடிக் கொண்டிருக்கும் எனது அன்னசத்திரத்தை நிவாரணப் படுத்திவிடுவேன். பணப் பற்றாக் குறை காரணமாக அறக்கட்டளையில் ஒரு சில வேலைகள் முடங்கிக் கிடக்கின்றன. அதனால் பல ஏழை மக்கள் பாதிப்படையும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது" என்றான் பாண்டியன்.

"தம்பி! நீ கேட்கின்ற நிதி உதவியினை நான் தாராளமாகச் செய்கிறேன். ஆனால் இதனைப் பற்றி உன்னிடம் சில கேள்விகள் கேட்க வேண்டும் என்று விரும்புகிறேன். நான் கேள்விகளால் உன் மனதைப் புண்படுத்தப் பார்க்கிறேன் என்று எண்ணிவிடாதே! என் மனதில் தோன்றிய சந்தேகங்களையே உன்னிடம் நான் கேள்விகளாகக் கேட்கப் போகிறேன். அதற்கு நீ சரியான பதிலைச் சொல்வாய் என்று எதிர்பார்க்கிறேன்" என்றார் பரசிவம்.

"ஐயா! உலக வாழ்க்கையில் எல்லோர்க்கும் பல்வேறு விஷயங்களில் சந்தேகம் வருவது இயற்கைதானே! அதனை யாருமே ஒதுக்கிவிட முடியாது. உங்கள் மனதில் என்ன சந்தேகம் எழுந்துள்ளது என்பதைத் தெரியப்படுத்துங்கள். உங்களுக்கு உண்டான சந்தேகத்தை நான் தீர்த்து வைக்கிறேன்" என்றான் பாண்டியன்.

உடனே பரமசிவம் "நீ தனியாளாக இருந்து அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தி தொண்டு செய்து வருகின்றாயே! நீ மட்டும் இரக்க சிந்தனையோடு வாழ்ந்தால் போதுமா? உன்னைப் போன்று எல்லோரும் இரக்க சிந்தனையோடு இருக்க வேண்டுமல்லவா! நீ ஒருவன் மட்டுமே இந்த உலகத்தில் தர்மத்தை நிலை நாட்டிவிடலாம் என்று நினைக்கின்றாயா?" என்று கேட்டார்.

அதனைக் கேட்ட பாண்டியன் சிறிது நேர யோசனைக்குப் பின்னர் அவரைப் பார்த்தான். அவருக்குச் சரியான பதிலை உதாரணத்துடன் சொல்ல வேண்டும் என்று முடிவு செய்தான்.

அவன் பரமசிவத்தை சந்தித்துக்கொண்டிருந்த நேரம் இரவுப் பொழுதாகும்.

அன்று பௌர்ணமியானதால் நிலா வெளிச்சம் எங்கும் காணப்பட்டது.

"ஐயா! நான் உங்களுக்குப் பதில் சொல்ல வேண்டுமென்றால் அருகில் இருக்கின்ற அறையின் உள்ளே செல்லலாம்" என்றான் பாண்டியன்.

இருவரும் அறையின் உள்ளே சென்றார்கள்.

பாண்டியன் அறைக் கதவை அடைத்துக் கொண்டான். பின்னர் அறையில் இருந்த விளக்கையும் அணைத்துவிட்டான்.

"தம்பி! எதற்காக விளக்கை அணைத்தாய்? அறை முழுவதும் இருட்டாக காணப்படுகிறதே!" என்றார் பரமசிவம்.

பாண்டியன் உடனே அறையின் ஜன்னல் கதவினைத் திறந்தான். அப்போது அறையினுள் நிலா வெளிச்சம் தெரிந்தது.

"தம்பி! நீ விளக்கை அணைத்தாய்; இன்று பௌர்ணமியானதால் நிலா வெளிச்சம் அறையில் நன்றாகத் தெரிகிறது. அது சரி, நீ எதற்காக என்னை அறையில் வரவழைத்து விளக்கை அணைத்தாய்?" என்று கேட்டார் பரமசிவம்.

"ஐயா! அறையின் உள்ளே நிலவானது உங்களுக்கு வெளிச்சம் கொடுக்கிறது. இது உங்களுக்கு மட்டும்தான் கொடுக்கிறதா? இல்லை ஊருக்கெல்லாம் கொடுக்கிறதா?" என்று கேட்டான் பாண்டியன்.

"இந்த நிலா எனக்கு மட்டும் வெளிச்சத்தைக் கொடுக்கவில்லையே! ஊருக்கெல்லாம்தான் கொடுக்கிறது." என்றார் பரமசிவம்.

"இந்த ஒரே நிலாதானே ஊருக்கெல்லாம் வெளிச்சத்தைக் கொடுக்கிறது!" என்று கேட்டான் பாண்டியன்.

"ஆமாம்! அதில் என்ன சந்தேகம்! இந்த ஒரே நிலாதான் ஊருக்குகெல்லாம் வெளிச்சத்தைக் கொடுக்கிறது" என்றார் பரமசிவம்.

"ஐயா! இந்த ஒரே நிலா தனி ஒரு ஆளாக இருந்துகொண்டு ஊருக்கெல்லாம் நன்மை செய்கின்றதே! இதனைப் போன்றுதான் நானும்! தனி ஒரு ஆளாக இருந்து ஊருக்குகெல்லாம் தர்மம் செய்யும் முயற்சியினைச் செய்து வருகிறேன். நிலாவால் எல்லோரும் பயனடையும் போது என் உதவியால் எல்லோரும் பயனடைவார்கள் என்று நம்புகிறேன்; நான் தர்மம் செய்வதைப் பார்த்து இன்னொருவர் இதனைச் செய்யலாம்! அதனைப் பார்த்து மற்றொருவர் செய்யலாம்! இப்படியே சங்கிலித் தொடர் போன்று இந்த தர்மத்தின் வளர்ச்சியானது தொடர்ந்து கொண்டேயிருக்கும்" என்றான் பாண்டியன்.

பாண்டியனின் விளக்கங்கள் பரமசிவத்திற்கு புத்துணர்ச்சியினை ஏற்படுத்தின.

உடனே அவர் பாண்டியனை நோக்கினார்.

"உன்னிடம் தர்ம சிந்தனையோடு தெளிவான புத்திசாலித்தனமும் இருக்கின்றது. உன்னுடைய புத்திசாலித்தனத்தால் எனக்கு நல்லதொரு விளக்கத்தையும் கூறிவிட்டாய். நீ கூறிய விளக்கத்தில் நியாயம் இருப்பதாக உணர்கின்றேன். எனவே உனக்கு வேண்டுமளவுக்கு நிதி உதவினை நான் அளிக்கிறேன். நீ உன்னுடைய அறக்கட்டளையை மிகவும் சிறப்பாக நடத்தலாம்." என்றார்.

அதனைக் கேட்ட பாண்டியன் அளவிலா மகிழ்ச்சியடைந்தான்.

# ஆத்திசூடி

## அரவம் ஆடேல்

நீ ஆபத்தை விளைவிக்கும் நச்சுப் பாம்போடு விளையாடாதே. ஆபத்தை விளைவிக்கும் செயல்களிலும் ஈடுபடாதே.

-ஔவையார்


நிரஞ்சலா, கண்டி.

# உங்கள் பொது அறிவு எப்படி?

## சில தரவுகள்

| | |
|---|---|
| 1. பந்தயக் குதிரை ஒரு பாய்ச்சலில் தாண்டும் தூரம் | - 30 அடி |
| 2. நாய் எத்தனை மாதங்களில் குட்டியீனும் | - 9 அல்லது 20. |
| 3. சிலந்திக்கு எத்தனை கண்கள் | - எட்டு |
| 4. மாடப்புறா ஒரு தடவையில் எத்தனை முட்டையிடும் | - இரண்டு |
| 5. முதலை ஏன் வசிப்பதில்லை | - உப்பு நீராயிருப்பதால் |
| 6. இலங்கையின் பிரதமர் யார் | - மஹிந்த ராஜபக்ஸ |
| 7. இலங்கையின் நிதியமைச்சர் | - சரத் அமுனுகம |
| 8. இலங்கையின் தனி நபர் வருமானம் | - 330 அமெரிக்க டொலர். |
| 9. ஐ.டி.ஏ என்பது | - சர்வதேச அபிவிருத்திச் சங்கம் |
| 10. ஏ.டி.பி. என்பது | - ஆசிய அபிவிருத்தி வங்கி |

# அதிசய உலகம்




இராமாயணத்தில் அனுமன் எல்லா மலைகளையும் விட்டுவிட்டு சஞ்சீவி மலையைத் தேடிச் சென்றதன் காரணம் தெரியுமா?

அங்குதான் எந்த மலையிலும் கிடைக்காத நான்கு முக்கிய மூலிகைகள் உள்ளனவாம்.

**மிருத சஞ்சீவினி** : இது இறந்தவரைக் கூடப் பிழைக்க வைக்கும் சக்தி கொண்டது.

**சந்தான கரணி** : போரில் கை, கால் இழந்தவர்களின் உறுப்புக்களை மீண்டும் ஒட்டி வைக்க இந்த மூலிகை பயன்படுகிறது.

**விசல்யகரணி** : வீரர்கள் போரிடும்போது ஏதாவது கத்தி, அம்புகள் போன்றவற்றின் நுனிகள் உடைந்து உடலில் புகுந்திருந்தால் அவற்றைக் கரைத்து உடற்கோளாறு இல்லாது செய்துவிடுமாம் இந்த மூலிகை.

**சாவர்ண கரணி** : காயங்கள் ஆறிவிட்டாலும் காயமான இடத்தில் நிற வேறுபாடுகள் தோன்றலாம். இந்த நிறவேறுபாட்டை இம் மூலிகை நிவர்த்தி செய்கின்றது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **30.03.2005.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 589**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 587

**பரிசுக்குரியவர்:**
**ரா.திவ்யா,**
**175, லோவர் வீதி, பதுளை.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம்.ஐ.எம். அஸ்லம், 116, ஓடாவியார் வீதி, ஏறாவூர் - 2C | இரா. அருந்ததி, தரம் 6C, பூண்டுலோயா த.ம.வி. வடக்கு பூண்டுலோயா, பூண்டுலோயா. |
| ம.மேனகன், பாலர் பாடசாலை, கருமாரி மோட்டாஸ், மருதடி பிரதான வீதி, பருத்தித்துறை. | க. கிரித்திகன், தரம் 1, விபுலாந்தாக் கல்லூரி. பண்டாரிகுளம், வவுனியா. |
| அ.அசோக் பிரதீஸ், 21, தாமரை கேணி வீதி, மட்டக்களப்பு. | சா.ஸ்ரீஹஜன். 'ஸ்ரீ தேவி கோயில்' கொம்மாதுறை, செவங்கலடி. |
| சுகன்யா சுதாகர், தரம் 2, ஸ்ரீ முத்துமாரியம்மன் தமிழ் மகா வித்தியாலயம், கம்பளை. | உமாஜயனி கருணநாயகம், செட்டிபாளையம் மா.வி, மட்டக்களப்பு. |
| குமுதினி யோகநாதன், சைவமங்கையர் வித்தியாலயம், வெள்ளவத்தை. | கா. சஜ்ஜி, தரம் 3, களுவோகன் த.வி, மத்துகம. |

# பல்பலம்







சீனாவின் வியாங்ஜியில் லீ குவோஷீன் பல்லின் பலத்தைப் பற்றி நாம் புதிதாக எதையும் சொல்லத் தேவையில்லை. படத்தைப் பார்த்த மாத்திரமே ஊகித்திருப்பீர்கள். ஆம்..... இவர் மனிதர்களை ஏற்றிய வான் ஒன்றைத் தனது பற்களால் எந்தச் சிக்கலும் இல்லாமல் சுலபமாக இழுத்துச் சென்ற காட்சியே இது.

## ஓடும் வசிப்பிடம்

இது போன்ற பாரம்பரிய மாளிகைகளை நீங்கள் பெரும்பாலும் கண்டிருப்பீர்கள். ஆனால் இது போன்ற மாளிகை உலகிற்கே இருப்பது ஒன்றே ஒன்று. விசாலமான நான்கு தோட்டங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள இம்மாளிகையின் சிறப்பு யாதெனில் சில்லுகளைப் பொருத்தி இதனை இடத்திற்கு இடம் மாற்றக் கூடிய வசதி இருப்பதேயாகும்.





## வண்டியும் கடலில் ஓடும்....

இது ஒரு விபத்து என்று எண்ணத் தோன்றுகிறதா? இல்லவே இல்லை. கடந்த மார்ச் முதலாம் திகதி காலை 9.30 மணியளவில் கரையொதுங்கிய 'டொயாட்டா ஹை ஏஸ்' வான் ஒன்றே இது! ஆச்சரியமாக இருக்கிறதா? 2004ஆ ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி அழையா விருந்தாளியாக வந்த சுனாமி, திரும்பிச் செல்ல உதவிய வாகன இதுதான். நம்ப முடியவில்லை அல்லவா? சரி விடயத்திற்கு வருவோம். அன்று ஆழிப் பேரலையால் அடித்துச் செல்லப்பட் இந்த வான் அலைகளில் சிக்குண்டு, கற்பாறைகளில் மோதிச் சிதைவுற்ற நிலையில் 2 மாதம் 5 நாட்களுக்குப் பிற காலி, கட்டுகொட றுகுனு சீமெந்துத் தொழிற்சாலைக்கு முன்னால் கரையொதுங்கியது. இதில் மற்றொரு முக்கி அம்சம் என்னவென்றால், மனித உடலின் சிதைவுற்ற பாகங்களும் முன் பக்கத்தின் இடது புறத்தில் காணப்பட்டதாக கூறப்படும் ஆதாரம்தான்.

நன்றி :- சண்டே ரைம்ஸ்






## குட்டிச் சுட்டி

இச் சீனக் குழந்தையின் வயது இரண்டு மாதங்கள் மாத்திரமே. ஆனாலும் இக் குழந்தை பேசுகிறது. இக் குட்டிக்குப் பசியெடுக்கும்போது சீன மொழியில் "அம்மா....அம்மா....." என்று அழைப்பதோடு, சீன மொழியில் பாலுக்குச் சொல்லும் "நாயி" என்ற வார்த்தையைக் கூறிப் பால் கேட்டு அருந்துவதாகவும் கூறப்படுகிறது.

## தந்தைப் பாசம்

'நியோபோலிடன் பிலு மஸ்டிப்' என்ற இனத்தைச் சேர்ந்த இந்த நாய்த் தந்தையும் அதன் குட்டிகளும் தற்போது லண்டன் பத்திரிகைகளுக்குத் தீனி போடும் தலைப்பாக மாறியுள்ளன. காரணம் என்னவெனில், இத் தந்தைக்கு 24 நாய்க்குட்டிகள் பிறந்துள்ளன. அதில் 4 குட்டிகள் இறந்துள்ளன. ஏனையவை 20 குட்டிகளும் சுகமாக இருக்கின்றன.







சுவாதி

**ப**யங்கரப் பாம்பை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 'அனகோண்டா' படம் உலகம் முழுவதும் பரபரப்பாக ஓடிப் பல கோடி ரூபாயை வசூல் செய்து சாதனை புரிந்தது. அதைத் தொடர்ந்து வந்த 'அனகோண்டா - 2' படமும் உலகம் முழுவதும் வசூலை வாரிப் பொழிந்தது. தற்போது பாம்பை மையமாக வைத்து தயாரிக்கப்பட்ட 'டேஞ்சரஸ் பாரஸ்ட்' என்ற படம் தமிழில் 'டேஞ்சரஸ் பாரஸ்டில் அனகோண்டா - 3' என்ற பெயரில் மொழிமாற்றம் செய்யப்படுகிறது.

அடர்ந்த காடு ஒன்றில் அதிசயமான யானை ஒன்று இருப்பதை அறிந்த 12 பேர் கொண்ட குழு ஒன்று ஆராய்ச்சிக்காக அந்தக் காட்டுக்குள் போகிறது. அப்படிப் போனவர்களில் ஒருவர் இலட்சக்கணக்கில் பூரான் இருந்த புற்றுக்குள் விழுந்துவிட பூரான்கள் அவரைக் கடித்தே கொன்றுவிடுகின்றன. அதே மாதிரி தேள் புற்றுக்குள் ஒருவரும், சிலந்திப் புற்றுக்குள் ஒருவரும், கறையான் புற்றுக்குள் ஒருவரும் சிக்கி உருத்தெரியாமல் கொல்லப்படுகிறார்கள்.

அதற்குப் பிறகு சுமார் 40 அடி கொண்ட ராட்சஸ பாம்பிடம் மாட்டி ஐந்து பேர் இறந்துவிட கதாநாயகனும் கதாநாயகிகள் இருவரும் எப்படித் தப்பிப் பிழைக்கிறார்கள் என்ற கதையை பயங்கரமான திகிலுடன் படமாக்கியுள்ளனர்.



அனகொண்டா 3

**ம**லேரியா காய்ச்சலில் நடுங்கிக்கொண்டிருந்த சிநேகா, ஆனாலும் தொழில் பக்தியோடு சரவண சுப்பையாவின் 'ஏபிசிடி' படத்திற்காக ஷாமோடு நடித்துக்கொண்டிருந்தார். நாம் அந்தப் பக்கமாகப் போனபோது சிநேகாவின் சின்ஸியாரிட்டியை மொத்த யூனிட்டும் பாராட்டிக்கொண்டிருந்தது. அதே படத்தில் நடிக்கும் அபர்ணாவைப் பற்றியும் ஒரே புகழாரம்தான். 'அதைக் கொண்டா இதைக் கொண்டா' என புரொடியூஸரை டென்ஷன் பண்ணுவதில்லையாம் அபர்ணா. அபர்ணாவுக்குத் தேவையான இளநீர், ஜூஸ் அயிட்டம், சாப்பாடு, ஐஸ் வாட்டர் என எல்லாத்தையும் வீட்டிலிருந்தே கொண்டு வருகிறார் அவரின் அம்மா. ஏதாவது வேணுமா மடம் என வலியப் போய்க் கேட்டாலும் வேண்டவே வேண்டாம் எனச் சொல்லிவிடுகிறார் அபர்ணா!

இதுமட்டுமில்லை. அபர்ணாவுக்குச் சொந்தமாக ஒரு ஏஸி கேரா வேனையும் வாங்கித் தர முடிவு செய்திருக்கிறார் அபர்ணாவின் அம்மா!

**அ**ஜித், விஜய்யுடன் பல படங்களில் நாயகியாக நடித்த சுவாதி, தற்போது தெலுங்கில் ஒரு சில படங்களில் நடித்து வருகிறார். ஜெகபதிபாபு, ஸ்ரீகாந்த்துடன் இரண்டு படங்கள் நடிக்கிறார்.

அவரிடம்....

"டி.வி. பக்கம் போவீர்களா?" என்றால்.....

"ஏன்....? இப்போது என்ன அவசரம். தேவை இல்லை" என்கிறார்.

"தெலுங்கில் தொடர்ந்து நடித்து வருகிறேன். ஜூலை வரை டேட்ஸ் இல்லை. தொடர்ந்து படப்பிடிப்பு இருக்கிறது. பிறகு கன்னடப் படமொன்றிலும் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறேன். அப்புறம் எதுக்கு டி.வி. பக்கம் வரணும்" என்றும் படபடவென்று நம் மையே திருப்பிக் கேட்க....எஸ்கேப் ஆனோம்!



கனா கண்டேன்
ஸ்ரீகாந்த் - கோபிகா

**ஊ**ருக்கெல்லாம் பெயரை மாற்றி வைத்துவரும் நேமியாலஜிஸ்ட் சி.வி.ராஜராஜன் அசத்தல் அரங்கம் என்ற புதிய நிகழ்ச்சியை பொதிகை சேனலுக்காக நடத்தி வருகிறார். வெள்ளிக்கிழமை தோறும் ஒளிபரப்பாகும் இந்த அரங்கத்தில் சமூகத்தின் பல்வேறு பிரச்சினைகளையும் அலசுகிறார்கள்.



ஸ்ரீகாந் - கோபிகா
கனா கண்டேன் முகப்பில் சந்தியா



கனா கண்டேன்
ஸ்ரீகாந்த் - கோபிகா

'**கா**தல்' படம் மூலம் எல்லோரையும் வசீகரித்த சந்தியாவை, உடனடியாக கேரளாவும் அள்ளிக்கொண்டுவிட்டது. 'அலீஸ் இன் ஒண்டர்லேண்ட்' என்ற மலையாளப் படத்தில் தொடர்ந்து 35 நாட்களாக நடித்து வருகிறார் சந்தியா. ஊட்டியில் நடித்துக்கொண்டிருந்த சந்தியாவை டெலிபோனில் கலாய்த்தோம்.

"இந்தப் படத்தில் வினீத்திற்கு ஜோடியா நான் நடிக்கிறேன். ஜெயராம் எனக்கு அண்ணனா வர்றார். ஒவ்வொரு காட்சியையும் அழகாகச் செதுக்கிறார் டைரக்டர். சிபிமலையில் குளிர்காயக்கூட நேரமில்லாம நடிச்சுக்கிட்டிருக்கேன்."

"காதல் படம் பரபரப்பா அமைஞ்சும் தமிழ்ல அடுத்தடுத்து புக்காகக் காணோமே?"

"வரிசையா படங்கள் வந்தது. ஆனா நல்ல கதை, நல்ல இயக்குநர், நல்ல பேனர் எனத் தேர்வு செய்து நடிக்கிறேன். என் வளர்ச்சியில் ரொம்ப அக்கறையா இருந்து உறுதுணையா இருக்கிறார் என்னோட அம்மா. கிடைக்கிற அட்வான்ஸை எல்லாம் வாங்கிப் போட்டுக்கொண்டு தப்பான படங்களில் நடித்துப் பெயரைக் கெடுத்துக்கொள்ளமாட்டேன். அடுத்து நான் தமிழில் ஆஸ்கார் பிலிம்ஸின் 'டிஸ்யூம்' படத்தில் நடிக்கிறேன். அதற்கப்புறம்தான் மற்றப் படங்கள்."

"பரத் உங்களுக்கு ரெகமண்ட் செய்கிறாராமே?"

"அய்யய்யோ....நான் சின்னப் பொண்ணு. இன்னும் கொஞ்சம் பெரிய பொண்ணா ஆன பின்னாடி கிசுகிசுக்களை எழுதுங்க சாமி...."

என சிணுங்கினார் சந்தியா!

**அ**ரசியல் கட்சி ஒன்றை நடத்தி இப்போது பி.ஜே.பி.யில் இருக்கும் காமாட்சி நாயுடு தற்காலிகமாக அரசியலைத் தள்ளிவைத்துவிட்டு சினிமாவுக்கு வந்திருக்கிறார். பிரபல நாவலாசிரியர் ஜே.டி.ஆர். இயக்கத்தில் இவர் தயாரிக்கும் படம் 'பக்கம் 15'!

"அதென்ன டைட்டில்....?"


"வித்தியாசமான கதை என்பதால், அதற்கு பொருத்தமான டைட்டிலை வைத்திருக்கிறேன்."

"அப்படியென்ன கதை?"

"காதலைச் சொல்லாத அதே சமயம் காதல் இருக்கிற கல்லூரிக் கதை!"

"குழப்புறீங்களே?"

"நாங்க குழப்பலை. எங்க சினிமாக்காரங்கதான் குழப்புறாங்க. காலேஜ் ஸ்ருடண்ட்ஸ்னாலே வயசுப் பொண்ணை இழுத்துக்கிட்டு ஓடுற மாதிரி காட்டுறாங்க. ஒரு சிலர் அப்படியிருக்கலாம். உண்மையிலேயே மாணவர்கள் சக்தி என்ன? அவர்கள் திறமை என்ன என்பதை இந்தப் படம் சொல்லும். இந்தப் படத்திற்காகத் தமிழ் பேசத் தெரிந்த நாயகன், நாயகியைத் தேடிக்கொண்டிருக்கிறோம். உலகின் எந்த மூலையில் உள்ள தமிழ் பேசத் தெரிந்தவர்களும் எங்களைச் சந்திக்கலாம். திறமையிருந்தால் நிச்சயமாக அவர்களை நடிக்கவைப்போம்" என்கிறார் காமாட்சி நாயுடு.



# சினி விசிட்



முரளி, சிம்ரன் ஜோடியாக நடித்த 'கனவே கரையாதே' படத்தை இயக்கிய கௌதமன், ஜெயகாந்தனின் 'சினிமாவுக்குப் போன சித்தாளு' கதையை டெலிபிலிமாகப் பண்ணினார். 'மகிழ்ச்சி' என்கிற படத்தை இப்போது இயக்கவிருக்கிறார். இதில் விசேஷம்...ஹீரோவாகும் டைரக்டர்கள் வரிசையில் கௌதமனும் சேர்கிறார். எப்படியோ....தயாரிப்பாளர் மகிழ்ச்சியடைந்தால் சரிதான்!

---

இந்த வருடத்திற்குள் பிரசாந்திற்கு திருமணம் செய்துவிட எல்லா ஏற்பாடுகளும் ஜரூராக நடந்துகொண்டிருக்கின்றன.

---

பஞ்சு அருணாசலம் தயாரிக்கும் சேரன் நடிக்கத் தயாராகவிருக்கிற படம் 'பொக்கிஷம்'. தற்போது பஞ்சு அருணாசலத்தின் பி.ஏ.ஆர்ட்ஸ் பேனரில் தயாரிக்காமல், செல்லமே செலுலாயிட்ஸ் என்கிற புதிய கம்பெனியை உருவாக்கி அதன் கீழ் தயாரிக்கிறார்.

---

தமிழீழம் பற்றி வித்தியாசமான படமொன்றை எடுக்கும் முயற்சியில் இருக்கிறார் பாரதிராஜா. இதற்காக இலங்கையில் லொக்கேஷனெல்லாம் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்.




சின்னா
அர்ஜுன் - ஸ்நேகா

---

'சீற்பி' படத்தில் தருணா என்கிற சின்னப் பெண் நாயகியாக அறிமுகமாகிறார். "இந்தக் கவர்ச்சி போதுமா, இன்னும் கொஞ்சம் வேணுமா"ன்னு கேட்டுக் கேட்டு அள்ளி வழங்குவதில், ஷூட்டிங் ஸ்பொட்டே ஜொள் மழைதான்!

---

'செல்லமே' விஷால், தன் அப்பா ஜி.கே.ரெட்டி தயாரிக்கும் படத்தில் நடிக்கிறார். இதை இயக்கப் போவது லிங்குசாமி!



ராம்
ஜீவா - கஜாலா

விஜய் நாயகனாக நடித்து வரும் 'சச்சின்' படத்தின் ஜெனீலியாவோடு மும்பை மோகினி பிபாசாபாசுவும் நடிப்பது தெரியும். அந்த நடிகை அடிக்கிற கூத்து தெரியுமா? பிபாசாபாசு சென்னை ராயல் லீ-மெரிடியன் ஹோட்டலில்தான் தங்கியிருக்கிறார். அம்மணி தினமும் ஹோட்டல் பாரில் விதவிதமாய் சரக்கடித்ததில் தாணுவுக்கு பிரஸர் வருகிற அளவுக்கு பில் எகிறிவிட்டது. பிபாசா போதையில் பண்ணிய உய்யலாலாவைப் பொறுக்க முடியாத தாணு, "உனக்கு என்ன சரக்கு வேணுமோ சொல்லு...தினமும் ஒரு ஃபுல் பாட்டில் வாங்கித் தந்திடுறேன்" என்று சொன்னதோடு, தினமும் வாங்கிக் கொடுத்துக்கொண்டும் இருக்கிறார். இதனால் பில் தொகை குறைந்திருக்கிறது.

---

## மாமா.....மாப்பிள்ளை

தெலுங்கில் வெற்றிபெற்ற 'ஆரியா' படம் இப்போது தமிழில் தனுஷ் நடிக்கத் தயாராகவிருக்கிறது. ரஜினிக்கு சில செண்டிமெண்ட்ஸ் உண்டு. கதை விவாதத்தில் பஞ்சு அருணாசலம், நடனத்தில் புலியூர் சரோஜா பங்கெடுத்தால் வெற்றி என்கிற செண்டிமெண்ட்தான் அது. தன் மருமகன் தனுஷின் இந்தப் புதிய படத்திலும் இருவரையும் பங்கெடுக்கச் சொல்லியிருக்கிறார் ரஜினி.

---

## புதுசு கண்ணா புதுசு

சின்ன பட்ஜெட் படங்களை மட்டுமே தயாரித்து, இயக்கி வந்த வி.சேகர், 'ஏய்...'என பிரம்மாண்ட படத்தை தயாரித்தார். ஆனாலும் நஷ்டம். முள்ளை முள்ளால் எடுப்பது மாதிரி இந்த பிரம்மாண்ட தோல்வியை ஒரு பிரம்மாண்ட வெற்றியால் எடுக்க முடிவு செய்தார். அர்ஜுன் நடிக்கிறார். படத்துக்குப் பெயர் 'ஆதி'. டைரக்டர் வெங்கடேஷ் இயக்குவதாக இருந்தது. இப்போது அந்தப் படத்தை வி.சேகரே இயக்குகிறார்.



சந்திரமுகி
பிரபு - ஜோதிகா

ரஜினியின் 'சந்திரமுகி' படத்தின் பாடல் கேசட் வெளியீட்டு விழா, ரொம்ப சுவாரஸ்யமாகவே இருந்தது. இந்த விழாவில் பிரபு, சிவாஜி சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் எம்.எஸ்.விஸ்வநாதனுக்கு பரிசும் மரியாதையும் செய்யப்பட்டது. ராம்குமார், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, பி.வாசு, வித்யாசாகர், வாலி, விஜய் உட்படத் திரையுலகினர் பலரும் கலந்துகொண்டார்கள். சீஃப் கெஸ்ட் பிரபல ஹிந்திப் பாடகி ஆஷாபோன்ஸ்லே. விழாவின் தொடக்கத்திலேயே தயாரிப்பாளர் ராம்குமார் 'சந்திரமுகி' சர்ச்சைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார். "செய்தியாளர்கள் இந்தப் படத்தின் கதையைக் கேட்டுச் சர்ச்சையைக் கிளப்பாதீர்கள். இது திருடப்பட்ட கதையல்ல. வாசுவின் சொந்தக் கதை" என்றவர், எம்.எஸ்.வி.யைப் பற்றி ஒரு சுவாரஸ்யமான தகவலைச் சொன்னார். மெல்லிசை மன்னர் முதலில் நடிப்பதற்குத்தான் வந்தார். ஆனால் இசை அவரை வசீகரித்துக் கொண்டது.

விழாவின் சீஃப் கெஸ்ட்டான ஆஷாபோன்ஸ்லே, சுமார் 50 வருடங்களுக்கு முன் சிவாஜி பிலிம்ஸ் ஹிந்தியில் தயாரித்த 'அமர்தீப்' படத்தில் ஒரு பாடலைப் பாடினார். அதிலிருந்து சிவாஜி குடும்பத்துக்கு ஆஷா சகோதரிகள் நெருக்க மானார்கள். விழாவில் பேசி ஆஷா.....

"சந்திர முகியிலும் ஒரு பாடல் பாடியிரு க்கிறேன். நானும் மராட்டியர், ரஜினியும் மராட்டியர். தமிழில் பாடுவது ரொம்பப் பிடிக்கும்" என இப்படிச் சில தகவல்களைச் சொன்னார்.

வாலி பேச்சுதான் ஜாலியாக இருந்தது. "தமிழை நேசிக்கலாம், ஆனால் தமிழ் வெறி கூடாது. சந்திரமுகி என்பது வடமொழிச் சொல்தான். இதை தமிழ்ப்படுத்தினால் நிலாமூஞ்சி என வரும். இப்படி ஒரு டைட்டில் வைக்க முடியுமா? நான் ஆரம்ப காலத்தில் பாட்டு எழுதிக்கொண்டிருந்தேன். நான் எழுதிய வரிகளுக்கு வருமானம் கிடைத்தது. எம்.எஸ்.வி.யிடம் பாட்டெழுத ஆரம்பித்த பிறகுதான் வருமானத்துக்கு வரி கட்டுகிறேன்.

வாசு, கதையைத் திருட வேண்டிய அவசியமில்லை. அவர் மூளை உள்ளவர். 'சின்ன ராசாவே சித்தெறும்பு கடிக்குது' பாட்டைக் கேட்டுவிட்டு சிங்கப்பூரிலிருந்த சிவாஜி "இந்த வாலிப் பயல ஒதைக்கணும். சினிமாவைக் கெடுக்கிறான்" என கமெண்ட் அடித்தார். சினிமாவில் மூன்றெழுத்து எப்போதுமே புகழோடு இருக்கும். எம்.ஜி.ஆர்., சிவாஜி இப்போது கூட விஜய், அஜித், தனுஷ் என மூன்றெழுத்துதான். மாமாவுக்கும் மூன்றெழுத்து மாப்பிள்ளைக்கும் மூன்றெழுத்து" என்று பேச ரஜினி முகத்தில் மின்னலாய் ஒரு புன்னகை.

"இப்போது நான் எதுவும் பேசப்போவதில்லை. 'சந்திரமுகி' வெற்றிவிழாவில் நிறைய பேசப்போகிறேன். வீரனாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் கோழையாக இருக்கக் கூடாது. நான் குதிரை. யானை சறுக்கி விழுந்தால் எழுவதற்குச் சிரமம். நான் குதிரை, சட்டடென எழுந்துவிட்டேன் என உற்சாகமாய் பேசினார் ரஜினி.



செவ்வேல்
ராஜ்கிரண்

---

"அவ உன்னையேதான் பார்க்கிறா, அவளை எப்படியாவது காதலி" என நண்பர்களின் உற்சாகத் தூண்டுதலின் பேரில் விளையாட்டாக முளைக்கத் துவங்கும் காதலானது, கடைசியில் விபரீதமான சூழ்நிலைகளைச் சந்திக்க நேரிடும் என காதலைப் புதிய கோணத்தில் சொல்ல வரும் படம் '18 வயதில் நான்'. புதுமுகங்கள் நடிக்கும் இந்தப் படத்தை இயக்குவது டி.ஏ.ஆனந்த்.

---

மதுரை அமுதசுரபி கலைமன்றம் நடிகர் ஸ்ரீகாந்திற்குப் பிறந்தநாள் பரிசாக வெள்ளியில் செய்த வீரவாள் ஒன்றைக் கொடுத்திருக்கிறது.



நேஹா




# தோற்றுப்போன மனிதம்

நூல்கள் சுமந்த
நிம்மதி மூச்சுக்கள்,

கல்விச் செறிவினால்
உஷ்ணம் தணியாத
அருட்டல் மூளைகள்,

பட்டாம் பூச்சிகளான
சிந்தனைப் பறவைகள்,

கரை தெரியாக் கடலான
வாழ்வுக் கனவுகள்,

சுயம் சுயம் என்று
நீட்டி மீட்டிய
நரம்புத் தந்திகள்,

வயதுப் பயணத்தில்
காலாவதியான
கல்விக் காலங்கள்.

தகைமை கொண்டவனாய்
பதவி மட்டம்
சொன்ன தீர்ப்பு,
நடைமுறைக்கு வந்த
வாழ்வு மண்டலம்.

பாலைவனத்திற்கு
ஒருபடி மேல் சென்ற
பாறாங் கற்கள்,
கபத்தினுள் அடங்கிப்போன
கொதிப்பிழந்த மூளை.

சிந்தனை மரத்திட
தங்கி நிற்க
இடம் தேடி
வந்து குவிந்த
வசைப் பாக்கள்,

பல்லிளிக்கும்
பட்டப் பெயர்
சூட்டிய நாமத்தை
ஏப்பமிட,
காணாமல் போயின
இளமைப் பதிவுகள்

புதியவை புகுத்த
தரிப்பிடம் தேடி
கடுகதியில் கால்வைத்து
தோற்றுப் போனது
பேதை மனிதம்.

*-எம்.ஐ.எம்.அஸ்ரப்,*
*சாய்ந்தமருது - 07.*

# சீர்குலைவில் ஓர் உலகம்

ஓயாமல்
உலகம் சுழல்கிறது
சிலருக்கு
ஒன்றும் புரியாமலே
காலம் கழிகிறது!

இதயம் துடிக்கிறது
பலருக்கு -
இரவு விடியாமலே கிடக்கிறது!

பூக்கள் பிறக்கின்றன....
பொய்யானதோர் வாழ்வுடன்
போராடுகின்றன!

நாட்கள் நகர்கின்றன...
நாங்களும்
நாளையை இன்றே
தொடங்குகின்றோம்!

வானம் பரந்து பட்டது
ஆனாலும்
நீலம் குறைந்துவிட்டது!

உலகம் விசித்திரமானது
அதை
உணராதவர்களுக்கு
அதுவே....
தரித்திரமானது!

இயற்கை
இயந்திரமயமானது
செயற்கை சேர்ந்தே....
இவ் வாழ்வு
சீர்குலைந்தது!

இவ்,
விந்தை உலகின்
நிந்தை புரியாதவர்களால்
நொந்து போனதோ..
பூமிப் பந்து?

*-முகைசிரா முகைடீன்,*
*பாலையூற்று.*

# கொடுமை

இந்தத் தனிமை
ஆணியடிக்கின்றது
என்
உயிரணுக்களில்

உன்
தெருப்புழுதிக் காற்றை
சுவாசித்தபடி
வலம் வருவது
எத்தனை சுகமானது
இந்த மாலை நேரத்தில்

கிணற்றடியில்
சிரித்தபடி நிற்கும் - உன்
முகத்தெழிலைக் காண
எத்தனை முறை வருவேன்
குண்டுங்குழியுமான
உன் தெருக்களில்

மூச்சுக்காற்றுப் போன்ற
நினைவுகளையும்
முகஞ்சிரித்து நிற்கும்
நிழற் படத்தினையும்
எத்தனை முறை
மீட்டினாலும்
நீ
கண்சிமிட்டிப் போகும்
அந்த
நேரடி நிமிடங்களாகுமா?

என்னதான் சொல்!
பாதம் பதிந்த
பூமிப் புழுதியும்
கொதிக்கும் வெயில்
கொண்டுவரும் - உன்
குளிர்ந்த புன்சிரிப்பும்
தரும் ஆறுதல் - இல்லை
இந்தத் தனிமையில்.

*-அ.ற.அன்ஸார், தோப்பூர்.*

# நினைவலைகள்



நிமிடவேளை
நிசப்தத்திலும்
மனதினை
நிறைத்துக் கொள்ளும்
உனது
நினைவலைகள்.



நிஜங்களில் உனது
நினைவுகளை
நிவர்த்திக்க
பிரயத்தனப்படுகிறேன்;
கனவில் நீயும்
வருவதாலே
கண்ணுறக்கம்
மறக்கிறேன்;
கனவுதனையும்
வெறுக்கிறேன் -
உள்ளத்தை
வருத்தும் உனது
நினைவுகளை
தவிர்த்திடவே....!

*-நஸீஹா சம்சபாத், ஏத்தாலை.*

# உலகம் மறையட்டும்

உலகம் மறையட்டும்
உருவம் மறையட்டும்

பருவங்கள் காலங்கள்
போவது தெரியாமல்
குடிக்கக் கொடு.

தலைகீழாய் நடக்கத்
தெரியும்
தடுமாறிச் சிரிக்கத்
தெரியும்
வெறிக்கத் தெரியும்
மயக்கத் தெரியும்
தயங்கத் தெரியும்
சிரிக்கத் தெரியும்
மறக்கத் தெரியும்
மதிக்கத் தெரியும்
துதிக்கத் தெரியும்
மகிழத் தெரியும்
நெகிழத் தெரியும்
நூலாட்டம் ஆடத்
தெரியும்
நுனியாட்டம் ஆடத்
தெரியும்

உலகம் மறையட்டும்
உருவம் மறையட்டும்
பருவங்கள் காலங்கள்
போவது தெரியாமல்
குடிக்கக் கொடு
ஒரு கோப்பையிலே
என் குடியிருப்பு -
எனக்கு மதுவிலே
ஒரு கோப்பை
கொடு.

*-விஜய் - கெல்சன் கிர்ஹன், மேர்ந்து ஜெர்மனி.*

# அறியாமை!

காக்கைகளின்
கூடுகள்
பிழையானவை
என்று
கிளிகளிடம்
குயில்கள்
முறைப்பாடு
செய்கின்றன.

கிணற்றைச்
சுற்றி வந்த
தவளை
ஏழ் கடலைப்
பற்றிய
வரலாற்றை
எழுதுகிறது.

*-அ.கா.மு.றிஸ்வின்,*
*மூதூர் - 01.*

# பனித்துளி

புல்லின் நுனியில்
இரவில் முளைக்கும்
வெள்ளித் தலைகள்

இலைகள்
தலை குளிக்க
இறைவன்
அள்ளித் தந்த
இரகசியத் துளிகள்

வைகறையில் மின்னும்
பூமித் தாரகைகள்.

சூரியக் காதலனின்
வெளிச்சக் கண்பட்டு
உருகிப் போகும்
தண்ணீர்க் காதலிகள்.

தேன் குடிக்கும்
வண்டினங்கள்
வாய் கழுவ
பூக்கள்
வாங்கி வைத்த
பன்னீர்த் துளிகள்.

வேரில் உறிஞ்சியதை
வியர்வையாக்கும்
தாவரங்களின்
மார்கழி வித்தை.
என்றெல்லாம்

எண்ணிக் கொண்ட
எனக்கு, நானுன்னைக்
கண்டபின் தானே
புரிகிறது என் மகனே...!

தொட்டில் பூவில்
கண்கள் மூடி
கைகள் பொத்தி
அழகாய் உறங்கும்
நீயும் கூட
பனித்துளி தானென்று!

*-மெய்யன் நட்ராஜ், டோஹா - கட்டார்.*



# வாழாமலும் சாகாமலும்

எண்ணங்களைக்
கைது செய்த
உன் கன்னக் குழிகளை
நான் கவிதைகளால்
களவாடுவேன்!

உன் -
காதல் சிறையில்
அடைபட்டுக் கிடக்கும்
என் -
உணர்ச்சிகள்
எத்தனை நாட்களுக்கு
ஏமாற்றுக் கம்பிகளை
எண்ணிக் கொண்டிருப்பது?

பேனாக்களின்
வலிமையால்
மனக் காயங்களை
எழுத்தில் ஆற்றுகிறேன்.

நித்திரை விரதம்
இருக்கும்
எனது விழிகளில்
நீரும் காய்ந்து விட்டது.

உதிரந்தான்
உன்னை
உசுப்புமென்றால்
நான் காதலுக்காக
உயிரையும்
அர்ப்பணிப்பேன்.
ஆனால்,
நீ உயிரோடிருக்கும்
போது
நான் எப்படிச்
சாவது?

கொல்லாமல்
கொல்லும்
உன்
கொள்கையை
முதலில்
கொளுத்திவிடு;
வாழாமலும்
சாகாமலும்
இருக்க என்னால்
முடியாது!

*-வி.எஸ்.ஏ.ரவிசங்கர், ஆறுமுகத்தான் குடியிருப்பு.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

கவிதை பற்றி உலகப் புகழ் பெற்ற கவிஞரான பாப்லோ நெரூடா சொல்லியிருப்பது :"(கவிதை) இருளில் நடந்து செல்ல வேண்டும்; மனிதர்களின் இதயங்களை எதிர்கொள்ள வேண்டும்; பெண்களின் விழிகளை, தெருக்களில் இருக்கும் அறிமுகமற்ற மனிதர்களை, நட்சத்திரங்கள் ஒளிரும் இரவின் நடுவில் அல்லது அதிகாலையில் மெல்லிருட்டில் இருப்பவர்கள் கவிதையின் ஒரே ஒரு வரியேனும் வேண்டும் என உணர வேண்டும்...நாம் அறிந்திராதவற்றுக்குள் நாம் மறைந்து போக வேண்டும். அவர்கள் திடீரென்று நம்முடைய ஒன்றைக் கண்டெடுக்க வேண்டும்; தெருவிலிருந்து, மண்ணிலிருந்து, அதே காடுகளில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வீழ்ந்துகொண்டிருக்கும் இலைகளிலிருந்து...நாம் உருவாக்கிய ஒரு பொருளை அவர்கள் கண்டெடுக்க வேண்டும்...அப்போதுதான் நாம் கவிஞர்கள். அந்தப் பொருளில் கவிதை வாழும்....".

மறைந்த கவிஞர் ஆத்மாநாமின் குறுங் கவிதைகள் சில இந்த வாரத்திற்கு.....



### சில எதிர்கால நிஜங்கள்

அரிசி மூட்டையிலிருந்து சிதறிய
அரிசி மணிகள் போல்
தப்பித் தவறி திசை தடுமாறி ஓடி வந்த
சின்னஞ்சிறு சிற்றெறும்பு போல்
மொசைக் தரையில் தவறிப் போன
ஒற்றைக் குண்டூசி போல்
இவற்றைப் போன்ற இன்னும்
ஆயிரக்கணக்கான போல்கள்

### பதில்

குற்றுகர முற்றுகரச் சந்திகளை
சீர் சீர் ஆய்ப் பிரித்து
தளை தளையாய் அடித்து
ஒரு ஒற்றை வைத்து
சுற்றிச் சுற்றி வந்து
எங்கும் மை நிரப்பி
எழுத்துக்களை உருவாக்கி
பொருளைச் சேர்த்து
வார்த்தைகள் ஆய்ச் செய்து
ஒவ்வொரு வாக்கியத்திற்கும்
கமா மற்றும் முற்றுப்புள்ளி வைத்து
ஏதாவது சொல்லியாக வேண்டும்
நமக்கேன் வம்பு

### காரணம்

எதிர்த்து வரும்
அலைகளுடன் நான் பேசுவதில்லை
எனக்குத் தெரியும் அதன் குணம்
பேசாமல்
வழிவிட்டு ஒதுங்கி விடுவேன்
நமக்கு ஏன் ஆபத்து என்று
மற்றொரு நாள்
அமைதியாய் இருக்கையில்
பலங்கொண்ட மட்டும்
வீசியெறிவேன் கற்பாறைகளை
அவை மிதந்து செல்லும்
எனக்குப் படகாக.

### ஐயோ

சொன்னால் மறக்கிறார்கள்
எழுதினால் நிராகரிக்கிறார்கள்
தாக்கினால் தாங்குகிறார்கள்
சும்மா இருந்தால் தாக்குகிறார்கள்
அற்புத உலகம்
அற்புத மாக்கள்

### சும்மாவுக்காக ஒரு கவிதை

உங்கள் நண்பர்களைச் சொல்லுங்கள்
நீங்கள் யாரென்று சொல்லுகிறேன்
என்றார் ஒரு பேரறிஞர்
நான் சொன்னேன்
நீங்கள் யாரென்று சொல்லுங்கள்
உங்கள் நண்பர்களைச் சொல்லுகிறேன்
முழித்த முழி முழியையே முழுங்கும் போல
நீங்கள் யாரானால் என்ன
நான் யாரானால் என்ன
அனாவசியக் கேள்விகள்
அனாவசிய பதில்கள்
எதையும் நிரூபிக்காமல்
சற்று சும்மா இருங்கள்

### செடி

சாக்கடை நீரில் வளர்ந்த
ஒரு எலுமிச்சைச் செடி
போல் நான்
அளிக்கும் கனிகள்
பெரிதாகவும் புளிப்புடனும்
தானிருக்கும்.
கொஞ்சம் சர்க்கரையை
சேர்த்து அருந்தினால்
நல்ல பானகம் அல்லவோ!

### புதுக் குறளில் அற்புதப் பால்

அந்த
இரட்டைத் தென்னை மரங்களின்
இடை
மேலுயரும்
பளிச்சிடும் வெள்ளி
எதற்குச் சொந்தமது?

### நன்றி நவிலல்

இந்தச் செருப்பைப் போல்
எத்தனை பேர் தேய்கிறார்களோ
இந்தக் கைக்குட்டையைப் போல்
எத்தனை பேர் பிழிந்தெடுக்கப்படுகிறார்களோ
இந்தச் சட்டையைப் போல்
எத்தனை பேர் கசங்குகிறார்களோ
அவர்கள் சார்பில்
உங்களுக்கு நன்றி
இத்துடனாவது விட்டதற்கு.


### புத்தம் புதிய

என் பேனாவை
ஒரு குழந்தையிடம்
கொடுத்தேன்
ஒரு கோட்டோவியம்
ஒரு கவிதை
ஒரு காவியம் எழுதி
என்னைப் பார்த்துச் சிரித்தது
அற்புதத்திற்கும் அப்பாற்பட்ட படைப்பு
என்னை அழைத்தது.


### இவள்

என் மனமேடையேறி
கற்பிழந்த மங்கையர்
மணமாகிச் சிறையான பின்
என் மணமேடை நாயகி
எவன்
மன மேடைக் காதலியோ?


# பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : எம். செல்வி
வயது : 19
முகவரி : 974, அம்பாள் வீதி, திருகோணமலை.
பொழுதுபோக்கு: ரி.வி., பத்திரிகை.



பெயர் : எம். செந்தூரன்
வயது : 16
முகவரி : சமரபாகு, கரணவாய் வடக்கு, வல்வெட்டித்துறை.
பொழுதுபோக்கு : பத்திரிகை.



பெயர் : அ. ஸ்ரீதரன்.
வயது : 20
முகவரி : 47, கோணேசபுரம், உவர்மலை, திருகோணமலை.
பொழுதுபோக்கு : பத்திரிகை, கிரிக்கெட்.




பெயர் : சி. அன்ஸார்.
வயது : --
முகவரி : 48, R.D.S. வீதி, ஹிஸ்புல்லா நகர், ஏறாவூர்.
பொழுதுபோக்கு : பத்திரிகை.




# விடுமுறையில் செல்வதற்கு முன்....

**வி**டுமுறையில் வெளியே செல்வது என்றாலே அனைவரும் பரபரப்புடன் மகிழ்ச்சியாக இருப்பது வழக்கம். இந்த நிலையில் சில தேவையான பொருட்களில் கவனம்



செலுத்தாமல் போய்விட வாய்ப் புண்டு. இதைத் தவிர்க்க முன்னெச் சரிக்கையாகப் பட்டியலைத் தயாரிப் பது நல்லது. நீங்கள் பட்டியல் போடக் கீழே உள்ள சில முக்கிய குறிப்புகள் உங்களுக்கு உதவும் :-

1. காஸ் அடுப்பைச் சரிபாருங்கள்.
2. குழாய்களையும் லைட்களையும் சரிபாருங்கள்.
3. உங்கள் செல்லப் பிராணி களையும் செடிகளையும் பராமரிக்க ஏற்பாடு செய்யுங்கள்.
4. தேவையான மருந்துகளையும், அவை முடிந்துவிட்டால் அவற்றை வாங்குவதற்கு மருத்துவர் கொடுத்த சீட்டையும் வைத்துக்கொள்ளுங்கள்.
5. குப்பைத் தொட்டிகளையும் அழுக்கான பாத்திரங்களையும் சுத்தம் செய்யுங்கள். நீங்கள் வீட்டில் இல்லாதபோது பூச்சிகள் வளர்வதை இது தடுக்கும்.
6. ஜன்னல்கள், பாத் ரூம் கதவுகள் இவை எல்லாம் மூடி இருக்கின்றனவா என்று சரிபாருங்கள்.
7. மிதியடிக்குக் கீழ் அல்லது பூந் தோட்டங்களில் வீட்டின் மற்றொரு சாவியை மறைத்து வைத்திருந்தால் அதை அங்கிருந்து நீக்குங்கள்.
8. பக்கத்து வீட்டாரிடம் நீங்கள் செல்வதைப் பற்றிக் கூறி, வீட்டைப் பார்த்துக்கொள்ளும்படி கேளுங்கள்.
9. பயணச் சீட்டு, தேவையான அளவு பணம் ஆகியவற்றை மறக்கா மல் எடுத்துக்கொள்ளுங்கள்.
10. வழியில் செல்லும்போது சாப்பிடத் தேவையானவற்றையும் தண்ணீரையும் எடுத்துக் கொள்ளுங் கள்.
11. குழந்தைகள் இருந்தால் அவர்களுக்குத் தேவையான உணவும் விளையாட்டுப் பொருட்களும் மாற்று உடைகளும் வைத்துக்கொள்ளுங்கள்.
12. இறுதியாக, கிளம்புவதற்கு முன் வெளியில் திறக்கும் அனைத்துக் கதவுகளும் சரியாகப் பூட்டப்பட்டுள் ளனவா என்று சரிபாருங்கள்.

# அழகுக்கு மேலும் அழகு சேர்க்க......

கால் பகுதி கிழிந்த ஜீன்ஸ் பேண்ட்டை முழங்காலுக்கு மேல் வெட்டி அதை ஷோர்ட்ஸாக மாற்றலாம்.

கிளாஸ் அணிவது வெறும் ஃபேஷன் என்று நினைத்து, கண்டதை அணிந்துவிட வேண்டாம். கண்ணுக்கே உலை வைத்துவிடக் கூடும்.





குர்தா பொதுவாக முழங்காலுக்கு மேல் 4 முதல் 5 அங்குலம் உயரம் இருக்க வேண்டும். ஆனால் உங்கள் இடுப்புப் பகுதி யின் அளவு அதிகமாக இருந்தால் குர்த் தாவை சற்று நீட்டமானதாக்கி கொள்வது நல்லது.

கூலிங் கிளாஸ் அணிந்து கண்ணாடியில் பார்த்தால் கண்கள் தெரியக் கூடாது. அப்படித் தெரிந்தால், அந்த லென்ஸ் உங்கள் கண்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்காது.

உடைகள் வாங்கும்போது கவனம். இறுக்கமான உடைகள் உங்களைக் குண்டாக காட்சியளிக்க வைக்கும். சரியாகப் பொருந்தும் உடைகளே சிறந்தவை.

மெல்லிய நெடுக்குக் கோடுகள் போட்ட உடைகள் உங்களுக்கு மெலிந்த தோற்றத்தைத் தரும்.

பழைய 'டாப்ஸ்' அல்லது 'சல்வார் கமீஸை' புதியதாக மாற்ற எளிய வழி, புதிய பட்டன், லேஸ் அல்லது எம்பிராய்டரி சேர்த்தால் புது உடை ரெடி!

ஆக்ஸிடைஸ்ட் நகை கள் எந்த விதமான உடை யோடும் அழகாகத் தோன் றும். தங்க நகைகள் போல் இல்லாமல் இவற்றை மார்டன் உடைகளோடும், அதிக அளவிலும் அணிய லாம்.


கோடை காலத்தில் எப்பொழுதும் 'பேஸ்டல்' நிற உடைகளை அணி யுங்கள்.

புதிய ஃபேஷன் குட்டையான அல்லது கையில்லாத 'ஸ்லீவ் லெஸ்' உடை.

பழைய ஃபேஷன்: நீண்ட கை வைத்த உடைகள்.

# அழகு டிப்ஸ்

**ப**ற்கள் பளபளப்பாக இருக்க எலுமிச்சை சாற்றுடன் உப்புக் கலந்து பிரஷ் செய்யவும்.



***குளிப்பதற்கு*** முன்பு மஞ்சள் பொடியையும் நல்லெண்ணெயையும் கலந்து முகத்தில் தடவி 5 நிமிடம் காயவிடவும். அதன் பிறகு வெதுவெதுப்பான தண்ணீரால் முகத்தைக் கழுவவும். முகம் பளபளக்கும்.

***உங்கள்*** கூந்தல் பளபளப்பாகவும் கருமையாகவும் இருக்க உங்கள் உணவில் எலுமிச்சை சாற்றைச் சேர்த்துக்கொள்ளவும்.

***உடற்பயிற்சி*** வாரம் 5 முறையாவது தவறாமல் செய்ய வேண்டும். உடற்பயிற்சியால் கொழுப்பு கறைகிறது, எடை குறைகிறது, பல நோய்களிலிருந்தும் பாதுகாப்புக் கிடைக்கிறது.

***உதடுகளின்*** வடிவத்தை லிப் லைனரைக் கொண்டு வரைந்து, அதன் பிறகு அதற்குள் லிப்ஸ்டிக்கால் நிறத்தை நிரப்புவது நல்லது. லிப்ஸ்டிக் உதட்டை விட்டு வெளியே பரவுவதை இது தடுக்கும்.

***ஆரஞ்சு*** ஜூஸ் முகத்தில் தடவி 20 நிமிடம் கழித்து முகம் கழுவினால் முகம் பளபளப்பாகப் பொலிவுடன் தோன்றும்

***கசகசா*** ஊற வைத்து அரைத்து முகத்தில் தடவவும். காய்ந்ததும் கழுவினால் முகத்தில் சுருக்கம் விழாமல் பாதுகாக்கலாம்.



***பப்பாளி*** ஜூஸ் தடவினால், வியர்க்குரு, கொப்பளங்கள் மறைந்து முகம் பளபளக்கம்.

***கொத்துமல்லி*** இலையை அரைத்துப் பூசினால் முகம் வசீகரமாக மாறும்.

***எல்லா*** பழங்களும் முகத்துக்கு நல்லது. அவற்றை மசித்து முகத்தில் பூசினால் முகம் உடனுக்குடன் சுத்தமடைந்து பளபளப் பாய் காட்சி தரும்.

***தக்காளிச் சாறு*** : சருமத்தை மிருதுவாக்கி ஒளிரச் செய்யும்.

***பப்பாளி*** : மூகத்தில் சுருக்கம் விழுவதையும் தற்காலிகமாக ஒத்திப்போடும்.


***சிட்ரஸ் பழங்கள் : ப்ளீச்சிங்*** ஏஜெண்ட், சருமத்தின் எண்ணெய்ப் பசையைக் கட்டுப்படுத்துகின்றன.

***உருளைக் கிழங்கு*** : கண்களுக்கு அடியில் வீக்கம் இருந்தால் உருளைக் கிழங்குகள் துண்டுகளை கண்ணுக்கடியில் வைக்கவும். வீக்கம் குறையும்.

***உங்கள்*** முடி சுருட்டையானதாக இருந்தால் சீப்பு உபயோகிப்பதை தவிர்க்கவும். சீப்பு உபயோகித்தால் நீங்கள் விரும்பும் வகையில் முடியை ஸ்டைல் செய்ய முடியாது.

***குளித்தவுடன்*** புருவத்தை ஷேப் செய்தால் வலி தெரியாது. அல்லது வெந்நீரில் பஞ்சை நனைத்து, புருவத்தின் மேல் தடவிய பிறகும் ஷேப் செய்யலாம்.

***ப்ளஷ்*** எங்கே தடவ வேண்டும் என்று சந்தேகம் இருந்தால், அதைச் சுலபமாகத் தீர்க்கலாம். 1/2 மணி நேரம் உடற்பயிற்சி செய்த பிறகு முகத்தைக் கண்ணாடியில் பார்க்கவும்.



கன்னங்களில் சிவந்திருக்கும இடத்தில்தான் ப்ளஷ் தடவ வேண்டும்.


***மேலே*** பார்த்தவாறு ஒரு விரலால் உங்கள் புருவத்தை மேல் நோக்கித் தள்ளவும். அதன் பிறகு கீழே பார்த்தவாறு மேல் கண் இமையில் மஸ்காரா தடவவும்.

***உங்கள்*** புருவங்களை குளித்த பிறகு ஷேப் செய்யவும். இல்லையென்றால் வெந்நீரில் நனைத்த



துணியைப் புருவத்தின் மேல் சில நிமிடங்கள் வைக்கவும். இது வலியைக் குறைத்து புருவத்திலுள்ள முடிகளை எடுப்பதை சுலபமாக்கும்.

***தலை*** முடியை ஷாம்பு போட்டுக் கழுவிய பிறகு, ஒரு டீஸ்பூன் வினிகரை ஒரு மக் நீரில் கலக்கி அதைக் கொண்டு தலையை ஒரு முறை கழுவுங்கள்.



உங்கள் தலை முடி மிருதுவாகவும் பட்டுப் போன்றும், பளபளப்பாகவும் இருக்கும்.

***காதில்*** போடும் கம்மல், மூக்குத்தி ஆகியவற்றால் காது அல்லது மூக்குத் துளைகளில் புண் ஏற்படுகிறதா? கவலை வேண்டாம். பெருங் காயத்தைத் தண்ணீரில் கரைத்து அந்தத் தண்ணீரைக் கொண்டு புண்களைக் கழுவினால், புண் விரைவில் குணமாகும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது —ஷோபா—*

## போணீஸ்

***தேவையான பொருட்கள் :-*** ***30 – 40 துண்டுகள்***

மாஜரீன் - 2/3 கப்
சீனி - 1 1/4 கப்
கன்டோஸ் சொக்ளட் - 40 கிறாம்
முட்டை - 2
தேன் - 1/2 கப்
சிறிதாக வெட்டிய கஜு - 100 கிறாம்
மா - 1 1/2 கப்
கொக்கோ - 2 மே.க. (நிரப்பி)

***செய்முறை :-***

மாவுடன் கொக்கோ கலந்து 5 முறை அரித்துக்கொள்க.

மாஜரீனையும் சீனியையும் சேர்த்து சீனி ஓரளவாகக் கரையும் வரை அடித்துக் கொள்க.

கன்டோஸ் சொக்ளட்டை 4 மேசைக் கரண்டி வெந்நீர் விட்டுக் கரைத்து வைக்குக.

முட்டைகளை உடைத்துப் பாத்திரத்திலிட்டு நுரை பொங்கும் வண்ணம் அடித்துக் கொள்க.

மாஜரீன் கலவையில் முட்டையைச் சிறிது சிறிதாகச் சேர்த்து அடித்தபின், தேன், கஜு என்பவற்றையுமிட்டு அடித்து, மாவைச் சிறிது சிறிதாகத் தூவிச் சேர்த்துக் கொண்டபின், ஓயில் பேப்பர் பரவி மாஜரீன் பூசிய தட்டிலூற்றி 345°F வெப்பநிலையில் 30-35 நிமிடங்கள் பேக்செய்து, ஆறியபின் துண்டுகளாக வெட்டி சொக்ளட் கரைத்த கலவையை மேலே சிறிதளவு ஊற்றி, விரும்பினால் பாதிக் கஜுவைப் பதித்த பின் பரிமாறலாம்.

# சிகை அலங்காரங்கள்


## KNOT STYLE

**தலையைவாரி Poney tail ஆகக் கட்டுக.**

**பின்பு Poney tail தலைமுடியை சிறு சிறு பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியையும் நன்றாக முறுக்கியபின் Curl பண்ணி வைத்துக் குற்றிக்கொள்க. இவ்வண்ணமே ஓர் வட்டவடிவில் Curl களை**



**ஒழுங்காக அமைத்துக் கொள்க.**



“ஆமாம் சேர்த்திருக்கலாமே?”
“எனக்கு அதில் நம்பிக்கை இல்லை. எங்கள் குடும்பம் நோர்வே நாட்டிலிருந்து வந்தது. அந்த இரத்தம் என் உடம்பில் ஓடுவதால் ஒரு பிடிவாதம். கஷ்டம் ஏற்பட்டால் எதிர்த்து நிற்க வேண்டுமே தவிர, ஓட்டம் பிடிக்ககூடாது என்பது என் அபிப்பிராயம். பிஜானை வளர்ப்பது அப்படியொன்றும் கஷ்டமாகவும் இல்லை. புத்திசாலிப் பையன். வீட்டில் தச்சு வேலைகள் செய்கிறான். நன்றாகச் சாப்பிடுகிறான். ஹாஸ்ய உணர்ச்சி இருக்கிறது. கார் ஓட்டக் கூடக் கற்றுக்கொண்டு வருகிறான். டாக்டர், பாங்க் டைரக்டர் என்று பெரிய பெரிய வேலைகளுக்கு அவன் போக முடியாது. ஆனால் வாழ்க்கையைச் சமாளித்துக் கொள்வான்....”

ராத்திரியில் க்ளோவை ஏன் தனியாக அனுப்பினீர்கள் என்று திட்டுகிறாள்”
“டானா உங்களைக் குற்றம் சொல்வது நியாயமில்லை” என்று பேஜ் குறுக்கிட்டாள். “உங்கள் மீது தப்பில்லை. விதியின் மீதுதான் தப்பு அல்லது அந்த மற்றக் காரை ஓட்டி வந் தாளே, செனெட்டர் பெண்டாட்டி லாரா ஹட்சின்ஸ். அவள் தப்பாகவும் இருக்கலாம்....”
அப்போது அவர்களை நோக்கி எலும்பு முறிவு சர்ஜன் வந்தார். க்ளோவுக்கு ஆபரேஷன் செய்தவர்.
“க்ளோ எப்படி இருக்கிறாள்?” என்று இருவரும் ஒரே குரலில் கேட்டார்கள்.


**சென்ற வாரம்**
விபத்தில் இறந்த பீலிப்பின் தந்தை சாப்மன் தன் பிள்ளை இறந்தது பற்றி வைத்தியரிடம் வினவிக்கொண்டிருக்கிறார். அவர் ஒரு நல்ல சட்டத்தரணி. சில சட்டங்களை வைத்து டாக்டரிடம் தன் பிள்ளையின் மரணம் குறித்து விசாரணை நடத்துகிறார். பேஜ் இப்போது சிறிதளவு ஆறுதலடைந்து இருக்கிறாள்.

# ஒரு தாய் மகள் 24

தாரென்ஸன் சொல்லிக்கொண்டிருக்கையில், பேஜ் தன் கணவனைப் பற்றி நினைத்துக் கொண்டாள். பிஜான் மாதிரி ஒரு குழந்தை பிறந்திருந்தால் பிராடு தாக்குப் பிடித்திருக்க மாட்டார். ஓட்டம் பிடித்திருப்பார்...
அவர்கள் பேசிக்கொண்டிருந்த போது பொழுது விடிந்து மணி எட்டாகி விட்டது.
“லண்டனுக்குப் போன் போட்டு டானாவுக்கு விஷயத்தைச் சொல்லி விட்டு வருகிறேன்” என்று எழுந்து கொண்டான் தாரென்ஸன்.
“நானும்தான் பிராடுக்குப் போன் செய்ய வேண்டும். அவரோடு வேலை செய்கிற ஒருத்தர் இருக்கிறார். அவரிடம் கேட்கலாம். இன்னும் கொஞ்ச நேரம் ஆகட்டும் என்று பார்க்கிறேன். நீங்கள் முதலில் போய்விட்டு வாருங்கள்.” என்றாள் பேஜ்.

“ஆபரேஷன் நல்லபடி முடிந்து விட்டது.” என்று அந்த டாக்டர் சொல்லும்போதே தாரென்ஸனின் கண்ணிலிருந்து கரகரவென்று கண்ணீர் வழிந்தது.
“இரத்தம் ரொம்பக் கொட்டி விட்டது பாவம். இடுப்பு எலும்பு, தொடை எலும்பு எல்லாம் சரிபண்ணி விட்டோம். எலும்பு முறிவுக்காக எல்லா இடத்திலும் கம்பிகளும் ஊசிகளும் செருகியிருக்கிறோம். இரண்டொரு வருஷம் கழித்துத்தான் அதையெல்லாம் எடுக்க வேண்டும். அதன் பிறகு அனேகமாய் அவள் கால்கள் சரியாகி தானாக நடக்க முடியும். நிச்சயமாய்ச் சொல்ல இன்னும் சில வாரங்கள் போக வேண்டும்...” என்றார் டாக்டர். அவர் குரலில் சந்தோஷமும் திருப்தியும் வெளிப்பட்டன.

மகன்களும்?”
“ஆமாம்” என்று தாரென்ஸன் சொன்னதும், சர்ஜன் சொன்னார் “நீங்கள் வீட்டுக்கு போய் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டு சாயந்தரமாய் வாருங்களேன்? அதற்குள் உங்கள் பெண் ஐஸியுவுக்கு வந்து விடுவாள். எப்படியும் ஒரு மாத காலம் அவள் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டியி ருக்கும். இப்போது இருந்தே ஏன் கஷ்டப்படுகிறீர்கள்? கவலைப் படாமல் வீட்டுக்குப் போய்விட்டு வாருங்கள்.
சர்ஜன் திரும்பிச் சென்று விட்டார். கொஞ்சம் நேரம் வீட்டுக்குப் போய் இருந்து விட்டு வரலாம் என்றுதான் தாரென்ஸனுக்கும் தோன்றியது. ஆனால் ஆலிஸனைப் பற்றி இன்னும் தகவல் வராதபோது பேஜைத் தனியே விட்டு விட்டுப் போக மனம் வரவில்லை.



எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

டானாவைப் பிரிந்து வாழ்க்கை நடத்தும்போதிலும் அவளுக்குத் தகவல் சொல்லவேண்டும் என்ற கடமையுணர்வு தாரென்ஸனிடம் இருப்பதை எண்ணி அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.
சற்றைக்கெல்லாம் தாரென்ஸன் திரும்பி வந்தான்.
“டானா கிடைத்தாளா?” என்று கேட்டாள்.
“கிடைத்தாள். விடுமுறைக்காக வெளியூர் போய்விட்டு இப்போதுதான் லண்டன் திரும்பினாளாம். க்ளோ விஷயத்தைக் கேட்டு ரொம்ப அதிர்ச்சி அவளுக்கு. எல்லாம் என் தப்பு என்கிறாள்

“நான் போய்ப் பார்க்கலாமா?” என்றான் தாரென்ஸன் ஆர்வத்துடன்.
“இல்லை. பகல் வரையில் அவள் ஆபரேஷன் அறையில் இருப்பாள். பிறகு இன்டென்ஸிவ் கேர் யூனிட்டுக்கு அழைத்து வருவோம். அங்கே ஒரு வாரம் இருக்க வேண்டியிருக்கும். அதன் பின் அவளை வார்டுக்குக் கொண்டு வருவோம். இன்று சாயந்தரம் இரத்தம் செலுத்த வேண்டும். க்ளோவின் இரத்த குரூப்தானே நீங்களும் உங்கள்


“வெயிட்டிங் ரூமில் கொஞ்சம் நேர் படுத்திருக்கிறேன். நீ போய் பிராடைப் பற்றி விசாரித்து விட்டு வா” என்றான்.
பிராடுடன் வேலை பார்க்கும் பாலன்ட்டின் என்பவரைப் பேஜ்'க்குத் தெரியும். அவருடைய போன் நம்பரும் கைவசம் இருந்தது.
பாலன்ட்டினிடமும் அவர் மனைவியிடமும் விவரத்தைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, “உங்கள் கம்பெனி பிரசிடெண்ட்டைப் பார்ப்பதற்காகப் பிராடு கிளீவ்லந்துக்குப் போயிருக்கிறார். அவருடன் இன்று கால்.'.ப் விளையாடப் போவதாய்ச் சொன்னார்.

(தாய் தொடர்வாள்.....)

## செக்ஸியான சைவ அழகி



சைவ உணவுப் பழக்கத்தை ஊக்கப்படுத்தும் வகையில் ‘பீட்டா’ என்ற விலங்குகள் நல அமைப்பு உலகின் செக்ஸியான அழகி மற்றும் அழகன் போட்டியைச் சமீபத்தில் நடத்தியது. இதில் நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டனர். இறுதியில் கொரீலியஸைச் சேர்ந்த மிக்கே ரீஸ்க் என்ற 20 வயதான இளம் பெண் செக்ஸியான சைவ அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் வெர்ஜீனியா காமன் வெல்த் பல்கலைக்கழக மாணவி ஆவார். ஆண் அழகனாக கார்ல் என்ற 23 வயதான வாலிபர் தேர்ந்தெடுக்கப்பட்டார். படத்தில் ‘சைவ அழகி’ பட்டம் வென்ற மாணவி மிக்கே ரீஸ்க்கைக் காணலாம்.




## நிர்வாண பாதிரியார்


அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பாதிரியார் ரொபர்ட். இவர் பிரிஸ்பேன் என்ற இடத்தில் தனியாக சபை நடத்தி வருகிறார். இவரது சபையில் வாரந்தோறும் ஆராதனைக் கூட்டம் நடைபெறுகிறது. இதில் வினோதம் என்னவென்றால் பாதிரியார் ரொபர்ட்டும் அவரது சபைக்கு வருபவர்களும் ஆடை அணிவதே இல்லை. ஆண்களும் பெண்களும் நிர்வாணமாக ஆராதனை கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர். இது குறித்துப் பாதிரியார் கூறுகையில், “நாங்கள் செக்ஸ் எண்ணம் கொண்டவர்கள் அல்ல இயற்கையோடு ஒத்து வாழ்வதற்காக நிர்வாணக் கோலம் பூண்டுள்ளோம்” என்கிறார். படத்தில் பாதிரியார் ராபர்ட்டைக் காணலாம்.

## அதிகம் சம்பாதிக்கும் சீன நடிகை

சீனாவைச் சேர்ந்த பிரபல நடிகை ஜியாங் ஜிவீ. இவர் 'குரோச்சிங் டைகர் ஹிட்டன் டிராகன்' (பாயும் புலி பதுங்கும் நகரம்) என்ற படத்தின் மூலம் உலகளாவிய புகழ் பெற்றார். தற்போது உலகப் புகழ் பெற்ற ஸ்பீல்பெர்க்கின் ஹாலிவுட் படம் ஒன்றில் ஜியாங் ஜிவீ நடித்து வருகிறார். சமீபத்தில் 'போர்ப்ஸ்' இதழ் சீனாவில் அதிகம் சம்பாதிக்கும் நட்சத்திரங்களின் பட்டியலை வெளியிட்டது. இதில் சீனாவின் பிரபல கூடைப்பந்து வீரர் யா மிங் முதலிடம் பிடித்தார். இவர் ஆண்டுக்கு 225 கோடி ரூபா சம்பாதிக்கிறார். இவருக்கு அடுத்து சீன நடிகை ஜியாங் ஜிவீ 2ஆம் இடத்தைப் பிடித்திருக்கிறார். இவர் ஆண்டுக்கு ரூபா 45 கோடி சம்பாதிக்கிறார். சீன நடிகர்களை பின்னுக்குத் தள்ளிவிட்டு ஒரு நடிகை அதிகம் சம்பாதிப்பது அந்தநாட்டுச் சினிமா இரசிகர்களிடையே பரபரப்பாகப் பேசப்படுகிறது.



## உரிமை மடல்... 3



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

*மலை தடை கடந்து*
*புயலிடை எழுந்து*
*உங்களுக்காக*
*ஓர் உரிமை மடல்!*

*உண்மை எதுவென உரத்த குரலெடுத்து*
*உன்னத வழிகாட்டி எழுதும்*
*உரிமை மடல்!*

*இது*
*செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள்*
*இடர் படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்*
*தொடர் மடல்!...*

***அன்பான எம் தேசத்து மக்களே!***

உங்களுக்கு வணக்கம்!.... மறுபடியும் ஒரு உரிமை மடலோடு உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி!

நேரிலே வந்து உங்கள் அனைவரோடும் கைகுலுக்கிக்கொள்வதே எனது விருப்பம்!... உங்களது அவலங்களை நேரில் வந்து அறிந்து அதற்குத் தீர்வு காண்பதே எனது விருப்பம்!.. அதற்கு சூழ்நிலை என்னைத் தடுக்கிறது. ஆனாலும் உங்களது குறைகளும் குரல்களும் என் காதுகளில் தினமும் விழுகின்றன.

முப்பது வருடங்களுக்கு மேலாக உங்களது அரசியலுரிமைப் போராட்டத்தில் இடையறாது நானும் பங்கெடுத்து வருபவன் என்ற வகையில்.....

ஜனநாயக அரசியல் களத்தில் நின்று மக்களாகிய உங்களது நலன்களுக்காகப் பெரும் சவால்களை எதிர்கொண்டு வரும் ஒரு கட்சியின் செயலாளர் நாயகம் என்ற வகையில்...

மக்களாகிய உங்களோடு மனம் திறந்து பேசுவதில் எனக்கு மகிழ்ச்சி!

இதே வேளை மக்களாகிய உங்களது மகிழ்ச்சி எது என்பதும் நாம் தெளிவாகத் தெரிந்துகொண்ட ஒன்றுதான்!

போர் நடந்த எங்கள் பாச பூமியில் சமாதானம் பூப் பூக்க வேண்டும்!.... புயலடித்த எம் தாயக தேசம் ஒரு அழகிய அமைதிப் பூங்காவின் இருப்பிடமாக வேண்டும்!.... அங்கே உரிமைகளோடு நீங்கள் முகமுயர்த்தி எழுந்து நிற்க வேண்டும்!..... சுதந்திரமாக நீங்கள் பேச வேண்டும்!... எழுத வேண்டும்!....தீர்மானம் இயற்ற வேண்டும்!....

இதில்தான் உங்களது மகிழ்ச்சியும் தங்கியுள்ளது என்பதை நான் உணர்கின்றேன்!

நீங்கள் விரும்பும் சமாதானம் என்பது எமது தாயக தேசமெங்கும் மலர்ந்து செழிப்பதற்கான சந்தர்ப்பங்கள் கடந்த காலங்களில் நிறையவே வந்து போயிருக்கின்றன. ஆனாலும் குறுகிய அரசியல் நோக்கங்களால்... விவேகமற்ற அரசியல் வழிமுறையின் தாக்கங்களால் மக்களாகிய உங்களது சமாதானக் கனவுகள் அவ்வப்போது உடைத்தெறியப்பட்டன.

இப்போது மறுபடியும் ஒரு சமாதான சூழ்நிலை கனிந்து வந்திருக்கிறது. உங்களது துயரங்களுக்கு முடிவுரை எழுதும் சந்தர்ப்பம் ஒன்று தேடி வந்திருக்கிறது.

அண்மைக் காலங்களில் அடிக்கடி என்னைத் தேடி வந்து சந்தித்து வரும் உங்களில் சிலர் சமாதானம் வருமா என்ற ஆதங்கத்தில் என்னுடன் மனம் திறந்து பேசினார்கள்!

சமாதானம் மலர வேண்டும் என்றால் நாம் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்க வேண்டும் என்று பதிலளித்திருந்தேன்!.....

உரிமைகளைப் பெற வேண்டும் என்றால் கடந்து வந்த அனுபவங்களை மறுபடி மறுபடி எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கூறியிருந்தேன்!.....

எந்த இடத்தில் நாம் தவறு விட்டோமோ அந்த இடத்தில் இருந்து தவறுகளைப் படிப்பினைகளாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எடுத்துரைத்தேன்!...

இந்த இடத்தில் எமது ஆயுதப் போராட்டம் என்ற வடிவத்தை மாற்றியமைப்பதற்குப் பிரதான காரணியாயிருந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எண்ணிப் பார்க்கிறேன்!..

எமது அரசியலுரிமைகளை வென்றெடுப்பதற்கு சர்வதேச நாடுகளின் அங்கீகாரத்துடன் முதன்முதலாகத் தலையிட்டிருந்த ஒரு மூன்றாந் தரப்பின் முயற்சியினை எண்ணிப் பார்க்கின்றேன்!

இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்பது எமக்கு கிடைத்த ஒரு பொன்னான வாய்ப்பு!...அதை சம்பந்தப்பட்டவர்கள் ஏன் சரிவரப் பயன்படுத்தியிருக்கக் கூடாது என்று கேட்கின்றேன்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு முழுமையாகத் தீர்வு காணும் அம்சங்களை இலங்கை - இந்திய ஒப்பந்தம் கொண்டிருக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டும் இங்கே உண்டு!

சில குறைபாடுகள் இருந்தாலும் அதை ஒரு முன்னோக்கிய நகர்வின் படிக்கற்களாக ஏற்று நடைமுறைப்படுத்தியிருக்கலாம் என்றுதான் நான் கூற வருகின்றேன்!

உரிமைகள் என்பது ஒரே நாளில் பெற்றுவிடும் அதிர்ஷ்டலாபம் அல்ல!.. கட்டம் கட்டமாகத்தான் எமது இலக்கை எட்ட முடியும் என்றால் அதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்!

சோவியத்திலும், சீனாவிலும், வியட்னாமிலும் நடந்தது போல் எமது தேசத்திலும் நடக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. சப்பாத்துக்கு அளவாக எமது கால்களை வெட்டிவிட முடியாது!... ஆகவே எமது கால்களுக்கு அளவான சப்பாத்தையே நாம் தெரிவு செய்ய வேண்டும்!

நாம் போராடுவது மக்களுக்காக என்றால் முதலில் மக்களது கருத்தை அறிய வேண்டும்! சூழ்நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும்!.... எமது சூழ்நிலைக்கு எது பொருத்தமான நடைமுறையோ அதை நாம் கடைப்பிடித்திருக்க வேண்டும்! மாறிவரும் உலகத்தின் போக்கைக் கருத்தில் கொண்டு அதற்கேற்ற வகையில் எமது விடுதலைக்கான பயணத்தைத் திட்டமிட வேண்டும்!

அன்றைய யதார்த்த சூழலைப் புரிந்துகொண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு அதைச் சரிவர நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்று நாம் சுதந்திரத்தை நடைமுறையில் முழுமையாக அனுபவித்திருக்க முடியும்!

அமைதி காக்க வந்த இந்தியப் படையை வரிந்து கட்டி சண்டைக்கு அழைத்ததால் அந்த யுத்தத்தில் மக்களாகிய நீங்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட வேண்டியிருந்தது. பழி வாங்கப்பட்டீர்கள்!... குடும்பம் குடும்பமாக காணாமற் போனீர்கள்!.... கடலிலே தொலைந்து போனீர்கள்!...

இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவெடுப்பதற்கு முன்பு சகல இயக்கங்களிலிருந்தும் ஆயுதம் ஏந்திப் போராடி மரணித்த போராளிகளின் தொகை நூற்றுக் கணக்கானவை மட்டும்தான். ஆனால் இன்று ஆயிரங்களைத் தாண்டி அந்தத் தொகை பதினெண்ணாயிரத்தை எட்டி நிற்கிறது.

அந்த ஒப்பந்தத்திற்குப் பின்பு ஆயுதம் ஏந்திய யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் புலிகளாக இருக்கலாம்!... புலித் தலைமையால் தவறாக வழிநடத்தப்பட்டவர்களாக இருக்கலாம்! ஆனால் அவர்களும் எமது தேசத்து இளைய தலைமுறைதான். அவர்களும் மக்களாகிய நீங்கள் பெற்றெடுத்த பிள்ளைகள்தான்!

யுத்தத்தால் ஏற்பட்ட மனிதப் பலிகளும் சொத்துக்களின் இழப்பும் இலங்கை - இந்திய ஒப்பந்த முறிவுக்குப் பின்புதான் பல மடங்கு அதிகமானது!

ஆகவே அந்த ஒப்பந்தத்தைச் சரியாகப் பயன்படுத்தியிருந்தால் இந்த இழப்புக்கள் ஏற்பட்டிருக்காது!.... ஆயுதம் ஏந்திய யுத்தத்தில் கொல்லப்பட்ட உங்களது பிள்ளைகளின் தொகை நூற்றுக்கணக்காகவே இருந்திருக்கும்!

இந்தியப் படையை யுத்தத்திற்கு வரிந்து கட்டி இழுத்தவர்கள்தான் இதற்கான பதிலைக் கூற வேண்டும்! இழப்புகளுக்கான பொறுப்பை அவர்கள்தான் ஏற்க வேண்டும்!

இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் நான் இந்தியாவில் தங்கியிருந்தேன். அதனால் துரதிர்ஷ்டவசமாக அதன் நன்மை, தீமைகள் சாதக பாதகங்கள் எதிலும் என்னால் பங்கெடுக்க முடியாமல் போய்விட்டது என்பதையும் நான் இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும்!

அந்த ஒப்பந்தம் முறிவடைந்து பல வருடங்களுக்குப் பின்பு புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கூறிய கருத்தையும் நான் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்!

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றகரமான நல்ல அம்சங்கள் இருந்ததாகக குறிப்பிட்டிருந்தார்.

காலம் கடந்த ஞானங்கள் அர்த்தமற்றவை! ஆனாலும் அந்த ஞானங்களால் இனி வரும் காலங்களை நாம் வென்றெடுக்க உதவ முடியும் என்றால் அதையும் சம்பந்தப்பட்டவர்கள் முயன்று பார்க்க வேண்டும்!

இன்றைய சமாதான சூழ்நிலையைச் சரிவரப் பயன்படுத்தாமல்..... அர்த்தமற்ற நிபந்தனைகளைக் கோரிக்கைகளாகக் கிளப்பி, அதன் மூலம் ஒரு யுத்தம் நிகழுமென்றால்..... மக்களாகிய நீங்கள் கடந்த காலங்களை விட இன்னும் பல மடங்கு அழிவுகளைச் சந்திக்க வேண்டி வரும்!

பல வருட அழிவுகளின் பின்பு வெறும் மயான பூமியில் நின்று 'இன்றைய புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதானத்திற்கான ஒரு வாய்ப்பாக இருந்தது' என்று இனியும் ஒரு தடவை காலம் கடந்த ஞானத்தை உபதேசம் செய்வதில் பயனில்லை!

சமாதானத்திற்கான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வர வேண்டும் என்று மக்களாகிய உங்கள் சார்பாக நான் பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றேன்!

எம் இனிய மக்களே!.... மௌனங்களை உடைத்து நீங்கள் முகமுயர்த்தி எழுந்து நிற்க வேண்டும்! ஒரு காலத்தில் நீதியான யுத்தத்தை நடத்த வீதிக்கு வந்தவர்கள் நீங்கள்!...

இப்போது யுத்தத்தைத் தடுக்கவும்.... அழிவுகளிலிருந்து உங்களைக் காக்கவும்.... அவலங்களைத் துடைத்தெறியவும்..... உங்கள் துயரங்களுக்கு முடிவுரை எழுதவும்.... நீங்கள் தயாராக வேண்டிய சந்தர்ப்பம் இது!

மக்களாகிய உங்களது விருப்பங்கள் எவையோ.... உங்களது கனவுகள் எவையோ.... நலன்கள் எவையோ...அவைகளுக்காக ஈ.பி.டி.பி. என்றும் உங்களோடு கைகோர்த்து உறுதியாக எழுந்து முகமுயர்த்தி நிற்கும்!...

*திட்டங்கள் எங்களது!..... தீர்மானம்*
*உங்களது!.....*
*தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!*
*என்றும் நாம் மக்களுக்காக!...*

*பிரியமுடன்*
*செயலாளர் நாயகம்*
**தோழர் டக்ளஸ் தேவானந்தா!**

**நன்றி :- இதய வீணை**

# 48 ஒரு பெண்ணின் வாழும் வரலாறு



## ஹிலாரி கிளின்டன் எழுதுகிறார்

**1973 வசந்த** காலத்தில் சட்டக் கல்வி நிறைவு பெற்றதன் பின்னர் பில்லுடன் எனது முதலாவது ஐரோப்பியப் பயணத்தை மேற்கொண்டேன். நாம் லண்டனில் தரையிறங்கியதன் பின்னர் தான் எத்தகையதோர் வழிகாட்டி என்பதனை பில் நிரூபித்துக் காட்டினார். நாம் பல மணித்தியாலங்களை வெஸ்ட்மினிஸ்டர் அபே, டேட்களரி, பிரித்தானியா பாராளுமன்றம் ஆகியவற்றில் செலவழித்தோம். பச்சைப் பசேல் என்ற வேல்ஸின் மலைகளில் நடந்து திரிந்தோம். எங்களால் இயன்ற அளவு கிறிஸ்தவ தேவாலயங்களுக்குச் சென்றோம்.

வரைபடப் புத்தகத்தின் துணையுடனேயே பல இடங்களையும் சுற்றிப் பார்த்தோம். நாம் வளைந்த பாதைகளில் செலிஸ்பரியிலிருந்து லிங்கானுக்கும், அங்கிருந்து துர்ஹமுக்கும், அங்கிருந்து யோர்க்குக்கும் சென்றோம். குரொம்வெல் துருப்பினரால் அழித்தொழிக்கப்பட்ட மன்னர் ஆட்சிகளைப் பார்த்தோம். அங்கிருந்த பெரிய கிராமியத் தோட்டங்களைக் கண்டு ஆச்சரியப்பட்டோம்.

என்னர்டேல் வாவிக் கரையில் இயற்கை எழில் மிகு சூழலில் வைத்து நாம் "திருமணம் முடிப்போமா?" என்று பில் என்னிடம் கேட்டார். நான் அவரை மனப்பூர்வமாக விரும்பினேன். ஆனால், எதிர்கால வாழ்வைப் பற்றிய ஒரு குழப்பம் என்னுள்ளத்தில் சதா இருந்தது. ஆகவே, "இல்லை இப்போதல்ல" என்று நான் கூறினேன். எனக்கு ஓர் அவகாசம் தாருங்கள் என்பதே அதன் அர்த்தமாகும்.

எனது தாய், தனது பெற்றோர் விவாகரத்துப் பெற்றதனையிட்டு அதிகம் வருந்தினார் என்பது எனக்கு நன்கு தெரியும். அவரது கவலையும், தனித்து விட்ட சிறு பராயமும் எனது உள்ளத்தில் பதிந்து போயிருந்தது. நான் திருமணம் முடிப்பதாயிருந்தால் அது காலாகாலத்திற்கு நீடித்து நிலைத்திருக்கக் கூடிய திருமணமாக இருக்க வேண்டும் என்று எப்போதோ நான் தீர்மானித்துக்கொண்டேன். பின்னோக்கிப் பார்க்கும் போது, பொது மக்களின் அபிப்பிராயங்களையிட்டும், பில்லினது தீவிரத்தினையிட்டும் நான் எவ்வளவு பயந்து போயிருந்தேன். என் மீதான பில்லின் காதல் இயற்கையின் பலவந்தம் என்றே நான் எண்ணினேன்.

விடா முயற்சி இல்லாவிட்டால் பில்லிடம் ஒன்றுமே இல்லை என்றே கூறுவேன். அவர் பல வெற்றிகளைக் கண்டுள்ளார். நானும் அவற்றில் ஒன்றாவேன். அவர் பல தடவைகள் தன்னைத் திருமணம் முடிப்பதற்கு சம்மதிக்குமாறு வேண்டினார். நானும் 'இப்போதில்லை' என்றே பதிலுரைத்தேன். "சரி இனிமேல் எப்போதும் என்னை திருமணம் புரியுமாறு நான் உன்னிடம் கேட்க மாட்டேன் . என்றாவது என்னை மணக்க வேண்டும் என்று நீ விரும்பினால் என்னிடம் கூறு" என்று அவர் முடிவாகக் கூறினார்.

அவர் எனக்காகக் காத்திருந்தார். ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு நாம் நாடு திரும்பிய உடனேயே பில் என்னை வேறொரு இடத்திற்கு அழைத்துச் சென்றார். அந்த இடத்தினை அவர் தனது 'வீடு' என்று குறிப்பிட்டார்.

ஜுன் மாதக் கடைசிப் பகுதியில், கோடை கால விடியலின்போது பில் என்னை ' லிட்ல் ரொக்' பிரதேச விமான நிலையத்தில் வரவேற்றார். விக்டோரியன் வீடுகள், ஆளுநரின் மாளிகை ஆகியன அமைந்துள்ள தெருக்களால் என்னை அவர் மாநிலத்தின் தலை நகருக்கு அழைத்துச் சென்றார். ஆர்கண்ஸாஸுக்கு செல்லும் வழியில் ஆற்றுப் படுக்கையில் வளர்ந்திருந்த மெக்னொலியா மரங்களை நாம் இரசித்தோம். ஓகிட் மலைகளுக்கு ஊடாகப் பயணித்து கிராமத்துக் கடை வீதியில் தரித்தோம். பில் அங்குள்ள மக் களிடம் என்னை அறிமுகப்படுத்தினார். அவர் நேசித்த இடங்களைக் காட்டினார் . கடைசியில் நாம் ஆர்கன்ஸாஸில் அமைந்துள்ள ஹொட்ஸ்பிரிங் பகுதிக்கு வந்து சேர்ந்தோம்.

நானும் பில்லும் முதன்முறையாகச் சந்தித்தபோது ஹொட்ஸ்பிரிங்கைப் பற்றி என்னிடம் கூறியிருந்தார். பல நூற்றாண்டு காலமாக செவ்விந்தியர்கள் குளித்த வெந்நீர் ஊற்றுகள் இங்கே இருந்தனவாம். அதனை 1541 இல் ஹர்ணந்டோ டி சோடோ என்பவரே கண்டுபிடித் தாராம் . அதனை இளைஞர்களின் நீர் ஊற்று என்று அழைத்தனராம் . இங்கே பில் வளர்ந்த காலத்தில் பல சிற்றுண்டிச்சாலைகளில் சூது விளையாடும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டன பல இரவு விடுதிகள் உருவாகின . 1950களில் பெகிலீ, டேனி பெனட், லிபரேஸ், பெட்டி பேஜ் போன்ற கலைஞர்கள் உருவாகினர் . சென்ட்ரல் அவென்யூவிலுள்ள பெரிய ஹோட்டல்கள், குளியல்_இல்லங்கள் ஆகியவற்றில் வியாபாரமாக நடத்தப்பட்ட சட்டத்திற்கு முரணான சூதாட்ட நடவடிக்கைகளினை அப்போதைய சட்டமா அதிபரான ரொபட் கென்னடி தடைசெய்தார். இந்த நகரம் மீளமைக்கப்பட்டது. இதன் வெதுவெதுப்பான காலநிலையும், நீர்த் தடாகங்களும். இயற்கை அழகும் பலரின் மனதைக் கவர்ந்திழுத்தது. ஆகவே, பலர் இங்கே குடியேறினார்கள்.

பில்லின் தாயார் ஆர்கன்ஸாஸிலுள்ள பொடகோவ் எனும் இடத்தில் பிறந்தார் . 'ஹோப்' எனும் இடத்தில் குடியேறினார் . அது தென்மேற்கில் 80 மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ளது. 2ஆம் உலக யுத்த காலத்தில் அவ் லூசியானாவில் உள்ள தாதிமார் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றார். அங்கேதான் அவரது முதலாவது கணவரான வில்லியம் ஜெபர்ஸன் ப்ளைதியினைச் சந்தித்தார். யுத்தத்தின் பின்னர் அவர்கள்

**பில்லின் தாயாரான வெர்ஜீனியா, பில்லை சுமந்த கர்ப்பிணியானபோது ஹோப் பகுதியிலுள்ள வீட்டுக்குச் சென்று பிள்ளை பிறக்கும் வரை காத்திருந்தார். அவரது கணவர் 1946 மே மாதம் அவரைப் பார்ப்பதற்காக வந்துகொண்டிருந்தபோது மிஸ்ஸோரியில் விபத்திற்குள்ளானார். 1946.08.19 ஆம் திகதி பில் பிறந்த போது தாயாரான வெர்ஜீனியா 23 வயதே நிரம்பிய விதவையாக இருந்தார்.**

சிக்காகோவின் வட பகுதிக்கு இடம் பெயர்ந்தார்கள். அதற்கு அண்மையில்தான் எனது பெற்றோரும் வசித்தனர்

பில்லின் தாயாரான வெர்ஜீனியா, பில்லை சுமந்த கர்ப்பிணியானபோது ஹோப் பகுதியிலுள்ள வீட்டுக்குச் சென்று பிள்ளை பிறக்கும் வரை காத்திருந்தார். அவரது கணவர் 1946 மே மாதம் அவரைப் பார்ப்பதற்காக வந்துகொண்டிருந்தபோது மிஸ்ஸோரியில் விபத்திற்குள்ளானார். 1946.08.19 ஆம் திகதி பில் பிறந்த போது தாயாரான வெர்ஜீனியா 23 வயதே நிரம்பிய விதவையாக இருந்தார்.

நியு ஓர்லீஸுக்குச் சென்று பயிற்சி பெற்று தாதியாக வேண்டும் என்று அவர் தீர்மானித்தார் . அது தனக்கும், மகனுக்கும் உதவியாக இருக்கும் என்று அவர் கருதினார் அவர் பில்லை தனது பெற்றோருடன் பாதுகாப்பாக விட்டுவிட்டு பயிற்சிக்குச் சென்று பட்டம் பெற்றதன் பின்பு ஹோப்புக்குத் திரும்பி தாதி தொழிலில் ஈடுபட்டார்.

1950 ல் அவர் ரொஜல் கிளின்டனை மணம் முடித்தார். அவர் ஓர் குடிகார வாகன வியாபாரி, 1935 இல் தன் கணவருடன் பில்லின் தாய் ஹொட் ஸ்பிரிங்கில் குடியேறினார்.

மது அருந்துவதன் காரணமாக ரொஜரினது நிலை மோசமடைந்தது. பல வருடங்களாகத் தேவையற்ற விதத்தில் பில்லின் தாயாரை நையப் புடைத்தார். பில்லுக்கு 15 வயதானபோது தனது சிற்றப்பனுடைய கொடுமையிலிருந்து தாயாரை மீட்பதற்கு அவரால் முடிந் தது. குறைந்த பட்சம் பில் அருகில் இருக்கும்போது ரொஜினால் பில்லின் தாயார் மீது கை வைப்பதற்கு முடியாமல் போனது. 10 வயதே நிரம்பிய தனது சகோதரரான ரொஜரையும் அவர் கண்காணித்துக்கொண்டார். புற்றுநோய் காரணமாக பாரிய போராட்டத்தின் பின்னர் ரொஜர் கிளின்டன் இறந்து போனார். 1967 இல் மீண்டும் வெர்ஜீனியா விதவையானார்.

1972இன் வசந்த காலத்தில் வெர்ஜீனியா, பில்லை சந்திக்க வந்திருந்தபோதுதான் நாம் ஒருவரையொருவர் சந்தித்தோம். நாம் ஒருவரையொருவர் ஈர்த்துக்கொண்டோம்.

(தொடரும்....)

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

## மட்டக்களப்பு சிறையிலிருந்து தப்பத் திட்டம்.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் முன்முயற்சியினாலும் பார்த்தசாரதியின் இராஜதந்திர நடவடிக்கையினாலும் உத்தேச சர்வகட்சி மாநாட்டில் நம்பிக்கை கொண்ட அமிர்தலிங்கம், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்., கருணாநிதி ஆகியோருடனும் தமிழீழ இயக்கங்களின் முக்கியஸ்தர்களுடனும் கலந்துரையாடல்களை நடத்தினார். 1983ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் அமிர்தலிங்கம் இந்த ஆலோசனைக் கூட்டங்களை நடத்திய வேளையில், மட்டக்களப்புச் சிறையை உடைத்துக்கொண்டு தப்பிய முக்கிய தமிழ் அரசியல் கைதிகள் பலர் தமிழகத்துக்குத் தப்பி வந்து சேர்ந்திருந்தனர். தற்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமாகவும் அமைச்சராகவுமுள்ள கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள், ஈ.என்.டி.எல்.எப்.பின் தலைவரான பரந்தன் ராஜன் என்றழைக்கப்படும் ஞானசேகரன், வவுனியாவில் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட புளொட் மாணிக்கதாசன், டேவிட் ஐயா உட்படப் பலர் தமிழகத்துக்கு வந்திருந்தனர். டக்ளஸ் தேவானந்தா, வரதராஜப் பெருமாள் போன்ற இளம் தலைவர்களையும் அமிர் சந்தித்துப் பேசினார்.

1983ஆம் ஆண்டு ஜூலை இனக் குழப்பம் ஆரம்பித்துச் சரியாக அறுபது நாட்கள் கடந்த பின்னர் மட்டக்களப்புச் சிறையுடைப்பு இடம்பெற்றது. ஜூலை 23ஆம் திகதி இனசங்காரம் ஆரம்பமானது. செப்டெம்பர் 23ஆம் திகதி மட்டக்களப்புச் சிறையுடைப்பு இடம்பெற்றது. இலங்கையில் அரசியல் கைதிகள் சிறையிலிருந்து தப்பிச்

**1983ஆம் ஆண்டு ஜூலை இனக் குழப்பம் ஆரம்பித்துச் சரியாக அறுபது நாட்கள் கடந்த பின்னர் மட்டக்களப்புச் சிறையுடைப்பு இடம்பெற்றது. ஜூலை 23ஆம் திகதி இன சங்காரம் ஆரம்பமானது. செப்டெம்பர் 23ஆம் திகதி மட்டக்களப்புச் சிறையுடைப்பு இடம்பெற்றது. இலங்கையில் அரசியல் கைதிகள் சிறையிலிருந்து தப்பிச் சென்ற இரண்டாவது சம்பவம் இதுவாகும். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் கைதுசெய்யப்பட்டு சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த என்.எம்.பெரேரா, லெஸ்லி குணவர்த்தனா, எட்மண்ட் சமரக்கொடி உட்படப் பல சமசமாஜக் கட்சித் தலைவர்கள் சிறையிலிருந்து தப்பியோடி இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். இந்த முதலாவது சம்பவம் உண்மையில் சிறை உடைப்பல்ல.**

சென்ற இரண்டாவது சம்பவம் இதுவாகும். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் கைதுசெய்யப்பட்டு சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த என்.எம்.பெரேரா, லெஸ்லி குணவர்த்தனா, எட்மண்ட் சமரக்கொடி உட்படப் பல சமசமாஜக் கட்சித் தலைவர்கள் சிறையிலிருந்து தப்பியோடி இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். இந்த முதலாவது சம்பவம் உண்மையில் சிறை உடைப்பல்ல. சமசமாஜக் கட்சித் தலைவர்களின் தேசாபிமானப் போக்கினால் கவரப்பட்ட ஒரு சிறைக் காவலர் சிறைக்

(அரசியல் தொடர்)

கதவுகளைத் திறந்து இவர்களை வெளியே தப்பிச் செல்ல அனுமதித்தார். அந்தச் சிறைக் காவலர் தமிழரென்பதும் குறிப்பிடத் தக்கது. இச் சம்பவம் நடைபெற்று 35 வருடங்கள் கழிந்த பின்னர் மட்டக்களப்புச் சிறையுடைப்புச் சம்பவம் இடம்பெற்றது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஜூலை மாதம் 25ஆம் திகதியும் 27ஆம் திகதியும் சிங்களக் கைதிகளால், சிறை அதிகாரிகள் மற்றும் பேரினவாத அரசியல்வாதிகளின் அனுசரணையோடு நடத்தப்பட்ட தாக்குதலில் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொல்லப்பட்டனர். உயிர் தப்பிய தமிழ் அரசியல் கைதிகளைப் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றுமாறு டக்ளஸ் தேவானந்தா, பனாகொட மகேஸ் வரன், பரந்தன் ராஜன் ஆகியோர், சிறைச்சாலை சுப்ரிண் டனிடமும் விசாரணை நடத்தச் சென்ற நீதிபதியிடமும் வலியுறுத்தியதையடுத்து எஞ்சிய 19 தமிழ் அரசியல் கைதிகளும் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர். இதேவேளை மகஸீன் சிறைச்சாலை, நீர்கொழும்பு சிறை ஆகியவற்றிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளும் மட்டக்களப்புச் சிறைக்கு மாற்றப்பட்டிருந்தனர். கடவுச் சீட்டு மோசடி, போலி ஆவணங்கள் சமர்ப்பித்து வேறு நாடுகளுக்குக் குடியேற முனைந்த குற்றச்சாட்டுப் போன்றவற்றின் பேரில் கைதானவர்களே நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களாவர். ஏற்கெனவே பஸ் எரிப்புச் சம்பவங்கள் போன்றவற்றில் சம்பந்தப்பட்டவர்களென்ற




**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம் + அம்பி மகன்**

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் மட்டக்களப்புச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு சுமார் எழுபத்தாறு தமிழ்க் கதைிகள் அங்கிருந்தனர். இவர்களில் கிட்டத்தட்ட அறுபது பேர் அரசியல் கைதிகளாவர்.

ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட், ஈரோஸ், ரெலோ, குட்டிமணியோடு சேர்ந்து செயற்பட்டவர்கள், பரந்தன் ராஜன், பனாகொட மகேஸ்வரன் போன்றோரின் ஆட்களும் உள்ளேயிருந்தனர். பெரும்பாலான இளைஞர்கள் ஈ.பி.ஆர்.எல்.எப்.பைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். குச்சவெளிப் பொலிஸ் நிலையத் தாக்குதல் முயற்சியின்போது பனாகொட மகேஸ்வரன் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவரோடு கைதுசெய்யப்பட்ட மேலும் மூன்று பேரும் மட்டக்களப்புச் சிறையில் இருந்தனர். பரந்தன் ராஜனின் ஆட்கள் இரண்டொரு பேரே இருந்தனர். சத்துருக்கொண்டானில் வரதராஜப் பெருமாள் அரசியல் வகுப்பு நடத்திக்கொண்டிருந்தபோது பொலிஸார் நடத்திய திடீர் வேட்டையில் கைதுசெய்யப்பட்ட பதினெட்டு இளைஞர்களும் இருந்தனர். நீர்வேலி வங்கிக் கொள்ளை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட யோகராஜா என்ற இளைஞர் உட்படப் பலரும் அங்கு அடைக்கப்பட்டிருந்தனர்.

தமிழ் அரசியல் கைதிகள் சிறையின் மேல் மாடியிலும் கீழ் மாடியிலும் தங்க வைக்கப்பட்டிருந்தனர். மேல் மாடியில் 36 தமிழ் இளைஞர்கள் ஒரு பெரிய மண்டபத்துக்குள் சிறைவைக்கப்பட்டிருந்தனர். இவர்களனை வரும் தண்டனை பெறாத கைதிகளாவர். வன்முறை களில் ஈடுபட்டவர்களென்ற குற்றச்சாட்டின் பேரிலும் சந்தேகத்தின் பேரிலும் கைதுசெய்யப்பட்டவர்கள் இங்கே தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். பெரும்பாலானவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களாவர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டனை பெற்ற தமிழ் அரசியல் கைதிகள் கீழே அடைக்கப்பட்டிருந்தனர். சுமார் எட்டுச் சிறையறைகள் கீழேயிருந்தன. ஒவ்வொரு சிறையறைக்குள்ளும் மூன்று அல்லது நான்கு பேர் வீதம் அடைக்கப்பட்டிருந்தனர். மேலேயுள்ள மண்டபத்துக்குள்தான் டக்ளஸ் தேவானந்தா, வரதராஜப் பெருமாள், மாணிக்கதாசன், பரந்தன் ராஜன், டேவிற் ஐயா, மு.நித்தியானந்தன், போதகர்கள் ஜெயலதிகராஜா, ஜெயகுலராஜா போன்றோர் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்தத் தமிழ் அரசியல் கைதிகளில் சிலர் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட தினம் முதல் எப்படிச் சிறையை உடைத்துத் தப்பிச் செல்வதெனத் திட்டமிட்டுக்கொண்டிருந்தனர். ஒருபுறத்தில் டக்ளஸ் தேவானந்தா, யோகராஜா, தட்சணாமூர்த்தி போன்றோர் இது பற்றிச் சிந்தித்துச் செயலாற்றத் தொடங்கியிருந்தனர்.

(தொடர்ந்து வடியும்....)




வணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!!

ஒவ்வொரு வாரமும் அரசியல் பிரச்சினையோ, படுகொலையோதான் ஹைலைட்டாக இருப்பதுண்டு. இவ்வாரமும் அவற்றுக்கெல்லாம் குறைவில்லை. என்றாலும் சற்று வித்தியாசத்திற்காக இவ்வார ஹைலைட் விசேஷமாக கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனின் திருமணச் செய்தியை எடுத்துக் கொள்ளலாம். அந்த வகையில் திருமண பந்தத்தில் இணைந்துகொண்டுள்ள முரளிதரன் - மதிமலர் தம்பதிகளுக்கு எங்களதும் முரசு வாசகர்களதும் திருமண வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

***சின் :-** கிரிக்கெட்டின் சாதனை வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு தவறான தீர்ப்பை வழங்கியதாக நடுவர் ஸ்ரீவ் பக்னர் நிருபர்களிடம் தெரிவித்துள்ளாரே!*

**மன் :-** கிரிக்கெட் எண்டு ஆரம்பிச்சதும் முரளியைப் பற்றித்தான் திரும்பவும் ஆரம்பிக்கிறீரோ எண்டு நினைச்சிட்டன். சச்சின் கிரிக்கெட் உலகின் சாதனை வீரர்தான். அதில எந்தச் சந்தேகமுமில்லை. டெஸ்ட் ஆட்டத்தில் அதிக சதங்களை எடுக்கும் முதல் வீரர் எண்டதையும் நம்பிக்கையோடு சொல்லலாம். பாகிஸ்தானுடன் ஆடிய முதல் டெஸ்டில் 97 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இரண்டாவது டெஸ்டில 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இந்த 53 ஓட்டங்களோட ஆட்டமிழந்தது தான் இப்போ பிரச்சினை. துடுப்பில பட்டு விக்கெட் காப்பாளரிடம் பிடி கொடுத்ததாகப் பக்னர் தெரிவித்துவிட்டார். இந்தத் தவறான தீர்ப்பால் தனது சதமடிக்கும் கனவைக் கலைத்துவிட்டதாக உணர்ந்த சச்சின், நடுவரின் தீர்ப்புக்கு வழங்கிய கௌரவம்தான் அவரை மேலும் உயர்ந்த ஸ்தானத்துக்கு உயர்த்தியுள்ளது. அது மட்டுமல்ல, சச்சினுக்குத் தவறான தீர்ப்பை வழங்கியதற்காக வருந்துவதாக பக்னரும் தெரிவித்துள்ளார். இதுதான் பெருந்தன்மை. அது மட்டுமல்ல, பக்னர் நடுவராக நூறாவது டெஸ்ட் போட்டியில் பணியாற்றுகிறார் எண்டதும் குறிப்பிடத் தக்கது. அதற்கான வாழ்த்தைக் கூறியவர்களில் முதன்மையானவர் சச்சின்தான்.

***சின் :-** ஆக தவறுகளை ஏற்றுக்கொள்வது, அதைத் திருத்திக்கொள்வது. அதை மன்னிப்பது என்று பல நடைமுறைகளுக்கு இச் சம்பவம் நல்ல சான்றாக அமைந்துள்ளது என்கிறீர்கள். இந்த மனப் பக்குவம் நாட்டில் அனைவருக்கும் ஏற்படுமாக இருந்தால் இந்த வன்முறைகள் இல்லாமல் இருந்திருக்கும். அதுசரி,*

*கனடாவில் புலிகளைத் தடைசெய்ய இது உகந்த தருணமல்ல என்று பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் தெரிவித்திருக்கிறார்களே!*

**மன் :-** தடைசெய்ய வேண்டாம் எண்டு சொல்லயில்லையே! அதற்கான சந்தர்ப்பம் வரட்டும் என்கின்றனர். இதிலிருந்து என்ன தெரிகிறது? தற்போதைய எதிர்க்கட்சிக்கும் ஆளும் கட்சிக்கும் புலிகள் குறித்த கொள்கையில் வேறுபாடு இல்லை, அவ்வளவுதான். இது விளங்காமத்தான் அம்மாவை விட ஐயா மேல் எண்டு புலிகளின்ர மாயாஜாலம் நடக்குது.

***சின் :-** அப்பிடியெண்டால் தருணம் வந்தால் தடை மட்டுமில்லை. பெரிசா உருட்டி ஒரு சடையும் வைப்பினம் எண்டிறியள்.... பொதுக் கட்டமைப்பில் புலிகளை உள்வாங்க வேண்டிய அவசியமில்லை எண்டு சங்கரி ஐயா சொல்லி இருக்கிறாரே!*

**மன் :-** உண்மையில சனத்துக்குத் தேவை பொதுக் கட்டமைப்பும் இல்லை. வலுக் கட்டமைப்பும் இல்லை. சும்மா ஒரு ஒப்பாசாரத்துக்கு அரசும் - புலிகளும் சர்வதேச சமூகத்தின்ர வாசிப்புக்கு ஆடுகினம். புலிகள் ஆயுதமுனையில நிண்டுகொண்டு மக்களின்ர விருப்பு வெறுப்புக்கு இசைவாக நடந்துகொள்ளமாட்டினம். அதால ஒரு சிவில் அமைப்புமுறைதான் அவசியம் வேணும். இதைச் சொன்னால் என்னையும் துரோகி எண்டுவாங்கள். ஏன் பொல்லாப்பு? தடியெடுத்தவன் தண்டல்காரன் எண்ட கணக்கா “என்னையும் சேர்த்துக்கொள். இல்லாட்டில் யுத்தம்தான்” எண்டு விரட்டிற புலியை தாஜா பண்ணிறதுக்காக நோர்வே போடும் தப்புக் கணக்குத்தான் இந்தப் பொதுக் கட்டமைப்பு. சங்கரி ஐயா சொல்லிறது வெளிக்குதோ இல்லையோ எண்டதப் பொறுத்திருந்து பாரும். அதுமட்டுமில்லை. அவற்ர அறிக்கைய திரும்பத் திரும்ப வாசியும்.

***சின் :-** வாசிச்சனான். தங்கட கட்டுப்பாட்டுப் பகுதிகளான கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதியையே இலங்கை அரசின்ர உதவியில்லாமல் பராமரிக்க முடியாத கையாலாகாத நிலையில, தனிநாடு கேக்கினம் எண்டிறார். ஐயா நீங்க இப்பிடிக் கேள்வி கேட்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலையும் உங்கட திருமலை நண்பர், தான் கேட்க முடியாததை நீங்கள் கேட்கிறீங்கள் எண்டு புழுக்கத்தில இருக்கிறாராம். என்னதான் இருந்தாலும் பழைய நட்பு நட்புத்தான் எண்டு நிரூபிச்சுப்போட்டார்.... இந்தச் செய்தி தெரியுமே? கொள்கலன்களைச் சோதனையிடுவதில் மீண்டும் கடற்படைக்கும் சுங்க அதிகாரிகளுக்கும் முறுகல் தோன்றியுள்ளதாமே......?*

**மன் :-** தெரியும். சுங்க அதிகாரிகள் தமது வேலைக்கு கடற்படையினர் ஆப்பு வச்சுப் போடுவாங்கள் எண்டு நினைக்கினமாக்கும். இதற்கு முந்தி சுங்க அதிகாரிகள்தான் சோதனையிட்டவை. அப்பவெல்லாம் சுத்து மாத்துப் பண்ணி பல மோசடிகள் நடந்திருக்கு. அதுவும் சுனாமி நிவாரணம் எண்ட பேரில பல மோசடிகள் நடந்திருக்கு. நடந்துகொண்டிருக்கு. அதுகளைத் தடுக்க கடற்படை சோதனையிடுவதும் தப்பில்லைப் போலத்தான் தெரியுது. ஆனால் இந்தச் சோதனைகள் தாமதத்தை ஏற்படுத்தக் கூடாது. இதுதான் இறக்குமதியாளர்களின்ர வேண்டுகோளாகவும் இருக்குது.

***சின் :-** ஒண்டுக்கு இரண்டு தடவை சோதனையிடுவது நல்லதெண்டிறியள். இதால நன்மை எண்டால் ஏன் அவையள் முறுகிக் கொள்ள வேணும்..... பொலநறுவையில் கருணா குழுவின்ர முகாம் ஒண்டு இருப்பதாக ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டது. அது உண்மையோ?*

**மன் :-** உண்மையோ பொய்யோ எண்டு சொல்லேலாது. இல்லையெண்டு இராணுவப் பேச்சாளர் சொல்லிறார். சொல்லி அடுத்தநாள் அந்த முகாமை பிரபா அணிப் புலிகள் தாக்கியதாகவும் அதில் நாலு பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இல்லாத ஒரு முகாமை எப்படித் தாக்க முடியும்? ஆங்கிலப் பத்திரிகையாளர் புலிகளின்ர புலனாய்வுத்துறையை விடவும் கெட்டிக்காரர் எண்டதை நிரூபிச்சிருக்கிறார். வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.

***சின் :-** அப்ப முகாமோ அல்லது கருணா குழுவின்ர தங்குமிடமோ, ஏதோ ஒண்டு குறிப்பிட்ட இடத்தில இருந்தது உறுதியாகியிருக்குது.....*

*அதிருக்கட்டும். பொதுக் கட்டமைப்பு தொடர்பில இரண்டு வாரங்களுக்குள்ள முன்னேற்றம் ஏற்படுமென்று கனடாவினுடைய செனட்டர் ஒருவர் நம்பிக்கை தெரிவிச்சிக்கிறாரே! நடக்குமா.....?*

**மன் :-** பொதுக் கட்டமைப்பு எண்டதே குரங்கிடம் சிறுநீர் கேட்ட கதையாத்தான் இருக்குது. முன்னேற்றமா இல்லையா எண்டதை அரசும் புலிகளும்தான் சொல்ல வேணும். நம்பிக்கையை யாரும் தெரிவிக்கலாம். சம்பந்தப்பட்டவையள் என்ன பொஸிஸனில இருக்கினம் எண்டதுதான் பிரதானம். ஜனாதிபதியோடை ஒரு உடன்பாட்டுக்கும் வருவதில்லை எண்ட கணக்கிலதான் புலிகள் நிற்கினம். இந்த இலட்சணத்தில பொதுக் கட்டமைப்பாம் பொதுக் கட்டமைப்பு.

***சின் :-** என்னப்பா ஏதாவது நம்பிக்கையைத் தருவீங்கள் எண்டு பார்த்தன். இப்பிடி நம்பிக்கை இழந்து பேசுறீங்களே! ஏதோ இன்னொரு சுனாமி வாறதுக்கு முன்னம் வந்து போன சுனாமியின்ர தடங்களைச் சரிசெய்வினம் எண்டு நம்புவோமாக....*

**மன்னவரும் சின்னவரும்**

# நிரப்ப முடியாத பாத்திரம்

**பே**ராசை பற்றி சூ.ஃபி இலக்கியத்தில் ஒரு பிரபலமான கதை உண்டு!

ஒரு முறை அரசர் ஒருவர் தனியாக நகர்வலம் போய்க்கொண்டிருந்தார். அப்போது பிச்சைக்காரன் ஒருவன் எதிர்ப்பட்டு அரசரிடம் பிச்சை கேட்கிறான். "என் அமைதியைக் கெடுக்காதே" என்று அரசர் விரட்ட, பிச்சைக்காரன் சிரிக்கிறான்! "அரசே! உங்கள் அமைதி கெடக்கூடிய நிலையில் இருந்தால் அதற்குப் பெயர் அமைதியே கிடையாது!"

'எதிரிலிருப்பவன் வெறும் பிச்சைக்காரன் இல்லை...யோகி' என்பதை அரசர் உடனே புரிந்துகொண்டு "துறவியே.....உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள். கொடுக்கிறேன்!" என்று சொல்ல, துறவி மீண்டும் சிரிக்கிறார். "அரசே! உங்களால் முடியாததை எல்லாம் கொடுக்க முடியும் என்று சத்தியம் செய்யாதீர்கள்."

இப்போது அரசருக்குக் கோபம் வந்துவிட்டது. நகர்வலத்தைப் பாதியிலேயே நிறுத்திவிட்டுத் துறவியை அழைத்துக்கொண்டு அரண்மனைக்கு வந்தார். துறவி தனது பிச்சைப் பாத்திரத்தை நீட்டி," இது நிறைய எனக்குப் பொற்காசுகள் கொடுங்கள்!" என்று கேட்க, "பூ! இவ்வளவுதானா?"...... என்று அரசர் கைதட்ட பெரிய தாம்பாளத் தட்டில் பொற்காசுகள் வந்தன.

அரசர் அதைத் துறவியின் பிச்சைப் பாத்திரத்தில் எடுத்துப் போடப் போட...பிச்சைப் பாத்திரம் அதை விழுங்கிக்கொண்டே இருந்தது. தனது கஜானாவில் இருந்த பல மூடை பொற்காசுகளைக் கொட்டிய பிறகும் அந்தப் பிச்சைப்பாத்திரம் நிரம்பவில்லை. கடைசியில் கர்வம் விட்டு அரசர், துறவியின் காலடியில் விழுந்தார்.

அப்போது துறவி சொன்னார் : "அரசே! இந்தப் பிச்சைப் பாத்திரத்தை உங்களால் மட்டுமல்ல....எந்தச் சக்ராதிபதியாலும் நிரப்ப முடியாது! காரணம், இது சாதாரண பிச்சைப் பாத்திரம் அல்ல! பேராசைகளுடன் வாழ்ந்து செத்துப்போன ஒரு மனிதனின் மண்டை ஓடு!


ஆகவேதான் சொல்கிறேன்...பக்கத்து வீட்டுக்காரனைப் பார்த்துப் பார்த்து பெருமூச்சுச்செறிந்தபடி வாழ்வதை நிறுத்திவிட்டு, உங்களுடைய சொந்த விருப்பங்களைப் பூர்த்திசெய்துகொண்டு சக்திக்கு உட்பட்ட வகையில் வாழ முயலுங்கள். குடும்பத்தில் பாதிச் சண்டைகள் காணாமற் போய்விடும்! நீங்களும் சந்தோசத்தின் உச்சியில் சென்று உட்கார்ந்துகொள்ளலாம்.

எக் காரணம் கொண்டும், உங்கள் குடும்பத்துக்கு என்ன வேண்டும் என்பதை உறவினர்களோ, அக்கம் பக்கத்தில் வசிப்பவர்களோ தூண்டிவிடுவதற்கு இடம் கொடுக்காதீர்கள்.

குடும்ப வாழ்க்கையில் மட்டுமல்ல, மற்ற வாழ்க்கையிலும் நாம் பேராசையை வெல்ல வேண்டியது அவசியம்!

பேராசையைப் பற்றி நகைச்சுவையான ஒரு கதை இருக்கிறது!

பேராசையின் மறு உருவம் என்று வர்ணிக்கத் தகுந்த ஒரு நபர்! தனக்கு வாழ்க்கைப்படப் போகிறவளுக்கு அழகு, அறிவு, நல்ல குணம் என்று எதுவுமே தேவையில்லை; பணம் ஒன்று மட்டும் இருந்தால் போதும் என்ற எண்ணம் கொண்டவன். இவன் குணம் அறிந்த



ஊர்க்காரர்கள் யாரும் பெண் தர முன்வரவில்லை. எனவே தனக்குப் பெண் தேடி தொலைதூரத்தில் இருக்கும் வேறு ஊர் சென்றான்.

அங்கே ஒரு பணக்காரரின் அறிமுகம் கிடைத்து, அவர் மகள்களில் ஒருத்தியைத் திருமணம் செய்துகொள்ளும் வாய்ப்பும் இவனுக்குக் கிடைத்தது.

அவர் சொன்னார் :

"எனக்கு இருபது வயதில் ஒரு பெண் இருக்கிறாள். அவளை நீ திருமணம் செய்துகொண்டால் ஐந்து இலட்சம் ரூபாய் வரதட்சணையாகக் கொடுக்கிறேன். இருபத்தைந்து வயதில் ஒரு பெண் இருக்கிறாள். அவளைத் திருமணம் செய்துகொண்டால் பத்து இலட்சம் ரூபாய் வரதட்சணை தருகிறேன். முப்பது வயதில் இன்னொரு பெண் இருக்கிறாள். அவளைத் திருமணம் செய்துகொண்டால் வரதட்சணை பதினைந்து இலட்சம்..."

வயதையும் தொகையையும் ஒருசேர அந்தச் செல்வந்தர் ஏற்றிக்கொண்டே போக...நம் ஆள் ஆர்வத் துடிப்பில் கேட்டான் - "உங்களுக்கு ஐம்பது வயதில் திருமணமாகாத பெண் உண்டா?"

பணம், பொருள், செல்வம் - இதெல்லாம் வெறும் கருவிகள்தான்! பணம் என்பது சந்தோஷம் கிடையாது. பணத்துக்கு அர்த்தம் சந்தோசம் என்றால் பணம் இருப்பவர்கள் அனைவரும் சந்தோசமாக இருக்க வேண்டும். ஆனால், நிஜ வாழ்க்கையில் அப்படி இல்லையே. சரி...சந்தோசம் எப்படிக் கிடைக்கும்? பணம், பதவி, செய்யும் வேலை....முதலியவற்றுக்கும் நாம் கொடுக்கும் அர்த்தத்தில்தான் சந்தோசம் இருக்கிறது.

இதை விளக்க மற்றொரு சின்னக் கதை....

மும்பையின் ஜுஹு கடற்கரையில் சந்நியாசி ஒருவர் ஹாயாகக் கைகால் நீட்டிப் படுத்திருப்பதை வியாபாரி ஒருவன் பார்த்து,

"ஒவ்வொருவரும் காற்றாகப் பறந்து வேலை செய்துகொண்டிருக்க, நீ மட்டும் ஏன் வெட்டியாகப் படுத்துக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்கிறான். அதற்குச் சந்நியாசி, "வேலை செய்தால் என்ன பயன்?" என்கிறார்.

"வேலை செய்தால் பணம் கிடைக்குமே...."

"பணம் கிடைத்தால்....?"

"வீடு மற்றும் வசதிகளைத் தேடிக்கொள்ளலாம்."

"வீடு வசதிகள் கிடைத்தால்...."

"கை - கால் நீட்டி நிம்மதியாகப் படுத்துத் தூங்கலாமே!"

"சிரித்துக்கொண்டே சந்நியாசி சொன்னார் : சரிதான்...இப்போதும் நான் அதைத்தானே செய்துகொண்டிருக்கிறேன்!"

இந்தக் கதையை நிறையப் பேர் தப்பாக அர்த்தம் செய்துகொள்வார்கள்! 'உழைக்காமல் சோம்பேறியாக இரு' என்று போதிப்பதற்காகச் சொல்லப்பட்ட கதை அல்ல இது!

சந்தோசமும் நிம்மதியும் பணத்தாலும், வீடு வசதிகளாலும் மட்டும் கிடைப்பதில்லை! சந்தோசம் என்பது நமது பார்வையில்தான் இருக்கிறது என்பதை விளக்கிச் சொல்வதுதான் இந்தக் கதை!

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 112க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

ஜீ.ஏ. நிரோஷன், 158, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. கே.எம்.எஸ். ஆப்தீன், 36, போல்ஸ் வீதி, நகர சபை விடுதி, புத்தளம்.
2. அ. விமலா, மகிந்த பிளேஸ், கொழும்பு 05.
3. எம்.ஜே.எப். ரிஸ்தா, 90, ஹெம்மாத்தகம வீதி, மாவனல்லை.
4. க. நிரோஷிதா, இராமகிருஷ்ண வீதி, களுதாவளை - 3, களுவாஞ்சிக்குடி.
5. மீ.மு. காமில் ஜாவித், 33, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர் - 2.
6. எம். மங்களேஸ்வரன், நீதிமன்ற வீதி, திருகோணமலை.
7. தா. சலசலோசன், வெளிவட்ட வீதி, நீர்ப்பாசன விடுதி, வவுனியா.
8. க. கமால்தீன், புன்னைக்குடா வீதி, ஏறாவூர் - 03.
9. ர. ரெங்கநாதன், 190, புவக்கொட, பதுளை.
10. ஏ. வாசவி, 620, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 114

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | | 7 | 8 | 9 |
| 10 | | 11 | 12 | 13 |
| | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | | 21 |
| 22 | 23 | 24 | | |

### இடமிருந்து வலம்

1. தேவர் தலைவன் (குழம்பியுள்ளது).
7. கோபம் (குழம்பியுள்ளது).
11. வெட்டுவதற்குப் பயன்படும் ஆயுதம் (குழம்பியுள்ளது).
14. தசரதன் புத்திரர்களில் ஒருவன் (குழம்பியுள்ளது).
18. பெண் குரங்கு (குழம்பியுள்ளது).
22. இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட மகாத்மா.

### மேலிருந்து கீழ்

1. உழுந்தில் தயாரிக்கப்படும் உணவு வகை ஒன்று.
3. இந்தியாவில் அதிகம் விற்பனையாகும் பத்திரிகை.
4. ரசிகை - எதிர்ப் பால்.
5. நரியிடமுள்ள விசேட குணம் (குழம்பியுள்ளது).
14. வரிசை/ஒழுங்கு (குழம்பியுள்ளது).
18. பெரிய என்றும் பொருள்படும்.

**குறுக்கெழுத்துப் போட்டி 112 விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| கா (1) | வ (2) | லூ (3) | ர் (4) | |
| வி (5) | தை (6) | | | மி (7) |
| ம் (8) | | டு (9) | ட் (10) | ஆ (11) |
| ய (12) | ஓ (13) | வி (14) | ம் (15) | |
| | ம் (16) | தி (17) | ப (18) | |
| தை (19) | | லை (20) | ட (21) | வி (22) |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 29.03.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-114
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

88

பெயர்:.......................
முகவரி:.......................
.......................
தொழில்:.......................
கையொப்பம்:.......................

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 29-03-2005

அனுப்ப வேண்டிய முகவரி-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு சேலை?**
**உயிலங்குளம் வாசகிக்கு அதிர்ஷ்டம்!**

86

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**லூ. கரோலின்**
நொச்சிக்குளம், உயிலங்குளம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

# முது விருட்சம்

-சிவனு மனோஹரன், ஹட்டன்.



கனவுகளும் இலட்சியங்களும் எந்த வித தடங்களுமே இல்லாமல் இதயம் நனைந்து போகுமானால் வாழ்க்கை ருசிக்காது என்ற சிந்தனையில் மனம் அவ்வளவாய் தோயப்படவில்லை. அதனால்தானோ என்னவோ, மனம் ஒன்றை நாடும்போது வெகு தீவிரமாய் விஸ்வரூபம் எடுத்துவிடுகிறது. வாழ்க்கையில் நடக்கும் நாளாந்த நிகழ்வுகளுக்கெல்லாம் நம்மால் விளக்கம் தர முடிவதில்லை. விரும்பியோ விரும்பாமலோ சில நியதிகள் போடும் வட்டங்களுக்குள் வட்டமடிக்க வேண்டிய தேவைப்பாடு ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. நான் மட்டும் என்ன விதிவிலக்கா.....

சராசரி மனித வாழ்க்கை வடிவமைப்புகள் சில நேரங்களில் சொர்க்கத்தைக் காட்டிவிடுவது போல பல நேரங்களில் நரகத்தையும் காட்டத்தான் செய்கிறது. இது அளவைத் தாண்டும்போதுதான் நிலை தளர்ந்து போகிறோம். அப்போதெல்லாம் எங்கெல்லாமே சுற்றித் திரியும் மனம் வெறுமையாகி மீண்டும் தொடக்கப் புள்ளியைத்தான் தொட வேண்டியிருக்கிறது.

மின்னல் காயங்களுக்காய் உலகை வசைபாடி வாழ்க்கை நகர்வுகளில் தீவிரம் காட்டாத மனங்கள், வெற்றியின் இலக்கை அடைய முடியாது என்பதை அப்போது நான் உணர்ந்திருக்கவில்லை. அதனால்தான் சின்னச் சின்ன விடயங்களுக்கெல்லாம் மனம் சங்கடப்பட்டுக்கொண்டது.

ஒவ்வொரு மனிதனுக்கும் குறிப்பிட்ட சில காலப் பகுதிகளை மறக்க முடிவதில்லை. கால மாற்றங்களால் கூடக் கரைக்க முடியாத இமய நினைவுகள் அவை. அது நிலாக் காலம். இன்ப நுகர்ச்சிகளால் என் நுரையீரல் மலர்ச்சி பெற்ற காலம். உறவுகளின் உன்னதங்களில் தோயப்பட்ட மனம் உறவின் தாற்பரியங்களுக்காகவே வாழத் தலைப்பட்ட காலம்.

பவித்ரா என் எண்ணங்களுக்கும் சிந்தனைகளுக்கும் உருவம் தேடித் தந்த உன்னத உறவு. ஏதாவது ஒரு விடயம் எம் மனதை ஆழமாய் கீறிக் காயப்படுத்திவிடும்போது அதுவே எம் முன் சில நம்பிக்கை நாற்றுகளை நட்டுவிட்டுச் செல்வது நடைமுறை வாழ்க்கையில் ஒன்றும் புதினமன்று. எதிர்பார்க்கைகள் அதிகமாய் சிதறடிக்கும்போதுதான் மனம் சிந்தனைகளைக் கூர்மைப்படுத்தி தத்துவார்த்த அணுகுமுறையில் பயணத்தைத் தொடங்குகிறது. நானும் கூட அப்படித்தான். பருவம் எய்திப் பல வருடங்கள் ஆகியும் பிறவிப் பயனை அடைய முடியாத நிலையில் உழன்று, உடலை, உயிரை வருத்தி வாழும் பவித்ராவின் நடைமுறை வாழ்க்கையில் சந்தோஷங்களும் வசந்தங்களும் நிரந்தரமாய் விலகி விடைபெற்றுப் பல வருடங்கள் ஆயிற்று.

ஒவ்வொரு மனிதர்களுக்கும் ஒவ்வொரு விதமான எண்ணங்கள். எல்லாம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமானதன்று. இருந்தாலும் திருமணம் மட்டுமே வாழ்க்கையில்லை. அதையும் தாண்டி வாழ்க்கையில் எவ்வளவோ விடயங்கள் இருக்கின்றன. ஏன் ஒரே கோணத்தில் வாழ்க்கை பற்றிய சிந்தனை வட்டமடித்து நிற்கிறது என்று வயதைத் தாண்டி அடிக்கடி அவரை வழிப்படுத்தியிருக்கிறேன். பாவம் அவர் வழிபடுவதாய் இல்லை. இன்று என் கவிதைகளையும் சிறுகதைகளையும் ஓரளவுக்காவது இலக்கிய இதயங்கள் திரும்பி பார்க்கிறது என்றால், அதற்குக் காரணமே பவித்ராதான். என் படைப்புகளுக்குக் கிடைத்த முதல் வாசகி பவித்ரா. சாதாரணமான என் வார்த்தை ஜாலங்களுக்குக் கவிதை அந்தஸ்துக் கொடுத்தவர் அவர்தான். அதுதான், அந்தப் பின்னூட்டல்தான் என்னையும் ஒரு படைப்பாளனாய் பரிணமிக்கச் செய்திருக்கிறது.

என் சுக துக்கங்களில் எல்லாம் பங்கேற்று வளர்த்துவிட்ட பவித்ர உறவு, என்னையும் என் உணர்வுகளையும் வாழ்வித்து எங்கோ ஒரு மூலையில் கனத்த கனவுகளுடன் காலம் கடத்துவதுதான் கொடுமை. தொழில் நிமித்தம் அவரைக் காணச் சென்று பல நாட்களாயிற்று. நீண்ட இடைவெளிகளுக்குப் பிறகு இன்றுதான் செல்கிறேன்.

வழமையான உபசரிப்புகள், புதின விசாரிப்புகள் என்று உரையாடல் நீண்டு கொண்டே போனது. இடைநடுவில் இதயம் அரிக்கும் என் உணர்வுகளையும் கொட்டித் தீர்த்தேன்.

“பவித்ரா! சில முடிவுகளில்தான் அநேகரின் வாழ்வு தொடக்கம் பெறுகிறது. இன்னுமே நடந்ததை எண்ணி நாட்களை நகர்த்துவதில் ஏதாவது இலாபம் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை. உலகத்திலேயே மிகப் பயங்கரமான விடயம் என்ன தெரியுமா? தனிமைதான். இந்த சீவப் போராட்டம் இன்னும் எத்தனை நாட்களுக்கு....உங்கள் பிடியில் தளர்ச்சி என்பதே கிடையாதா.......“. என்ன மாதேஷ்! எப்ப இப்படியெல்லாம் பேசக் கத்துக்கிட்டீங்க? நான் மட்டும் என்ன பிரமச்சாரிய விரதம் காப்பதில் விடாப்பிடியாக இருக்கிறேன் என்றா நினைக்கிறீங்க? நோ! எனக்கான வர்வுகள் இன்னும் என் வசம் வரவில்லை. அவ்வளவுதான். உங்களுக்கு ஒன்று தெரியுமா? என் வாழ்க்கையின் பிடியினைத் தேடித் தேடி அம்மா கூடக் களைத்து நோயாளியா கிவிட்டார். எனக்கான வரன்களைத் தேடுவதில் எனக்கு மட்டுமல்ல, என் அம்மாவுக்கும் கூடச் சக்தி கிடையாது. நிஜங்களை விடக் கற்பனைகளில்தான் மனம் அதிகமாக ஆனந்தித்துக்கொள்கிறது. உங்கள் கவிதைகளில் எத்தனை முதிர்கன்னிகள் விடுதலை பெற்று விரைந்திருக்கின்றனர். அந்த ஆழ்ந்த அர்த்தங்களில் மூழ்கிக் கிடைக்கும் ஆனந்தமே எனக்குப் போதும். ஏனெனில், இப்போதெல்லாம் அதிகமாகக் கனவுலகில்தான் சஞ்சரித்துக்கொள்கிறேன். ஏன் தெரியுமா? அங்குதான் என் எண்ணமெல்லாம் ஏற்றம் பெறுகிறது. கடந்த வாரக் கவிதை ‘கரையைத் தொடாத அலைகள்’ படித்தேன். ரொம்ப நல்லா இருந்தது. அதில் சில வரிகள் உயிரை நனைத்துப் போனது.

“வந்தவனெல்லாம் வதனம்
பார்க்கிறான்
வாட்டம் கொள்கிறான்” என்ற வரிகள் பிரமாதம். இது எல்லாவற்றையும் விட கவிதையை நிறைவு செய்திருந்த விதமும் நன்றாக இருந்தது.

“புதுமைப் பிரியனாய் ஒருவன்
வந்தான்
வாழ்வில் வசந்தத்தை அள்ளி
வீசிச் சென்றான்.” மாதேஷ்! தமிழில் எனக்குப் பிடித்த வார்த்தை என்ன தெரியுமா? கவிதை. உலக நடைமுறைகளுக்கு அப்பாலும் கூடத் தைரியமாகச் செய்தி சொல்லும் அதிகாரம் அதற்கு உண்டு. இவை எல்லாவற்றையும் விட மரபுகள் மீறி மனிதங்களை நனைக்கும் மாட்சிமையும் கூடக் கவிதைக்குதான் உண்டு.

உங்கள் கவிதை நாயகனுக்கான காத்திருப்புப் பட்டியலில் இந்தப் பவித்ராவும் இணைந்துவிட்டாள். எனக்கும் கூட இப்போது கவிதைகள் வருகிறது என்றால் பாருங்களே....கவிதை படைப்புக்கான கன்னி முயற்சியாக உங்கள் கவிதைக்கான முடிவுரை எழுதியிருக்கிறேன். விரும்பினால் கேட்கலாம்.

“கரையேறாக் கன்னியரின்
கனவுகளை
கவிதையிலாவது கரையேற்று
என்கிறாள்
கல்யாணக் கனவுடன் காலம்
கடத்தும்
அன்புச் சகோதரி” என்று என்னை எதிர்கொள்கிறாள் பவித்ரா. வார்த்தைகள் இழந்து வாயடைத்து அவளிடம் இருந்து விடைபெற்றுத் திரும்புகிறேன், வெறுமையான மனதுடன்....

# காதல் சொல்ல வந்தேன்

குளிரும் சுடும், வெயிலும் குளிரும். கூட இருந்தாலும் தூரம் சென்றாலும் காதலும் சுடும். வாகனங்களின் அவசர பயணத்தின் ஒலி மட்டுமே பேசிக்கொண்டிருந்தது. கார்த்திக்கின் மனதில் இருதலையாகச் சிந்தனை ஓடியது. விஜிதாவின் கண்களைத்தான் கண்ணீருடன் கதை பேசின.

“விஜிதா! முதல்ல கண்ணை துடைச்சிக்கோ. யாரும் பார்த்தா... வேண்டாம். கண்ணைத் துடைச்சிக்கோ... அழுகிறதால எதுவும் நடக்கப் போறதில்ல... நீ சின்னவ. இப்ப உனக்கு ஒண்டும் புரியாது...”என்று சொல்லி முடித்தான் கார்த்திக்.

“நீங்க சொல்லுவீங்க. ஆனா எனக்குதான் தெரியும் உங்கள நெனச்சி படுற கஷ்டம்...”

“விஜிதா! முதல்ல நீ படி. அதுக்குப் பிறகு காதல், கல்யாணம், கத்தரிக்கா எல்லாம் பார்ப்போம். எனக்கு ஒரு முடிவை எடுக்க முடியாம இருக்கு பிளீஸ்.”

“நான் படிக்க முடியாதுன்னா சொல்றேன்? இல்லையே! என்ர காதல ஏத்துக்குங்க...நீங்க இல்லாம ஒரு நாள் கூட எனக்கு வாழப் பிடிக்கல்ல.... உங்களுக்கு தெரியாது, என்னை காதலிக்கிறதா எத்தன பேர் லெட்டர் குடுத்தாங்கன்னு. ஆனா எனக்குப் புடிக்கல்ல. உங்கட மனசை பிடிச்சிச்சி, உங்கட அவசர கோபம் பிடிக்குது. உங்கட அன்பு, நல்ல மனசு பிடிக்குது. ஏன்....நான் அழகில்லையா? ஏன்...இப்படி என்னை துன்பப்படுத்துறீங்க.... உங்களுக்கு இதயமில்லையா?” மீண்டும் விஜிதா அழுதாள்.

“விஜிதா......நீ....ஏ.எல் படிக்கிற. முதல்ல முடி.....வாழ்க்கைய நாசமாக்காத. ஏற்கெனவே நான் வேதனைப்பட்டவன். மீண்டும் வேதனைப்பட முடியாது. இப்ப உனக்கு முடிவு சொல்ல முடியாது....கொஞ்சம் யோசிக்கணும்.”

“இப்ப....நீங்க சொல்ல முடியாத முடிவு இனி எப்ப சொல்லப் போறீங்க? என்னை சமாதானப்படுத்தவா? பொம்பளங்க எப்போதும் உண்மையா காதலிக்கிறாங்க. ஆனா ஆம்பளயிங்க எங்கள போலி காதல்ல வேதனைப்படுத்துறாங்க” என்றாள் விஜிதா.



“விஜிதா! லேட்டாகுது. இண்டைக்கு நைட் கொழும்பு போறேன். அங்க செமினார் திரும்ப அடுத்த வீக் சந்திப்போம். யோசிக்காத வாறேன்.” என்று அவளது பதிலை வாங்காமலே புறப்பட்டான்.

விஜிதா அவனைப் பார்த்தபடியே நின்றாள்.

விஜிதா உயர்தரம் கலைப் பிரிவில் படிக்கிறாள்....கார்த்திக், விஜிதாவின் அண்ணன் பிரபுவின் நண்பன். விஜிதா சாதாரண தரம் முதல் முறை சித்தியடையாதபோது அவளுக்குக் கணித பாடம் சொல்லித்தர வந்தவன். ஆனால் பாடம் படித்ததோடு விஜிதா அவனின் மீது வெறித்தனமாகக் காதல் கொண்டாள். கார்த்திக் நில அளவைத் திணைக்கள எழுதுவினைஞன்.

கொழும்பில் கருத்த ரங்கில் இருந்தபோது அவனுக்கு விஜிதாவின் நினைவு வாட்டியது. தான் விரும்பும் ஒருத்தியை விடத் தன்னை விரும்பும் ஒருத்தியே தனக்கு பொருத்தம் என்ற முடிவுக்கு வந்தான். விஜிதாவின் சுட்டித்தனம், மௌன மொழி என்பன கார்த்திக்கின் உள்ளத்திலும் காதலை ஊட்டியது. ஆனால் நண்பனுக்குத் துரோகம் பண்ணுவதா? விஜியின் காதலை ஏற்பதா? என்ற பட்டிமன்றம் நடாத்தி விஜியின் காதலை ஏற்பது என்ற முடிவுக்கு வந்தான்.

கொழும்பில் இருந்து ஊர் வந்த கார்த்திக் அன்று தன் காதலைச் சொல்ல விஜியின் வீடு தேடி போனான். அங்கு வெள்ளைக் கொடி தொங்கியது. அங்கே விஜிதா எனும் சிவப்பு ரோஜா வெள்ளை ரோஜாவாக உயிரை விட்டுவிட்டது. கார்த்திக் கதறினான்...

இறுதிக் கிரியை முடிந்தது.

அன்று அவனுக்கு வந்த கடிதத்தைப் பார்த்தான். அதில்

காதலென்பது காளைகளுக்கு
விளையாட்டு.
கன்னிகளுக்கு வாழ்க்கை.
என்னுயிர் காதலைக் கேட்டது
உன்னிடம்.
நீ உதாசீனப்படுத்தினாய்.
உண்மை காதல்கள் கண்ணீரில்.
உன் நினைவோடு போகிறேன்
என்னைப்போல
இன்னுமொரு விஜியையும்
வேதனைப்படுத்தாதே!

-உன் விஜிதா.

கார்த்திக் காதல் சொல்ல வந்தான். காதல் அவனுக்கு விடை சொல்லிவிட்டது. காதல் என்பது கற்று மறக்க வேண்டியது. காதல் காத்திருந்தால் கைகூடும் காதலிகள் கண்ணீரில் மிதக்க வேண்டியதல்ல.

ஒரு விஜியை இழந்தேன்
அவசரத்தால்
இன்னொரு விஜியை இழக்க
மாட்டேன்
காளைகள்
உண்மைக் காதலியைக்
கைவிட்டு
கவர்ச்சியில் மயங்கி
வாழ்வை அழிக்கின்றனர்
இன்னொரு விஜிதாவின்
வருகைக்காக
காத்திருப்பு.

-கார்த்திக்-

-எஸ்.பி.பாலமுருகன்

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## ஏற்றத்தாழ்வுடன் எதையும் நோக்காதீர்!

எதை நீங்கள் பார்க்க முயலுகிறீர்களோ அதைப் பாருங்கள். 'இதைப் பாருங்கள் என்று மற்றவர்கள் கூறுவதைக் கவனியாதீர்'.

எதைக் கூர்ந்து கவனிக்கின்றீர்களோ அவற்றைக் கவனியுங்கள். வாழும் வாழ்க்கை, பொருட்கள், உங்களைச் சுற்றியுள்ளவர்கள் ஆகியவைகளைப் பயம், மற்றவர்கள் விமர்சனம் செய்தல் மற்றும் ஏற்றத்தாழ்வு எண்ணங்கள் ஊடே பார்க்காதீர்கள். மாறாக நேரடியாகப் பாருங்கள்.

மற்றவர்களோடு விவாதம் செய்வதை விட்டு, அவர்களை உங்கள் பக்கம் திருப்புங்கள். யாரையேனும் ஒருவரை உங்கள் பக்கம் மெல்லத் திசை திருப்பும்பொழுது, தீய எண்ணத்துடனான பொய்கள் எல்லாம் வெளிப்பட்டுவிடும்; பாசாங்கு செய்வது போன்ற செய்கைகளெல்லாம் தெரிந்துவிடும்; சிக்கலான விடுகதைகளுக்கெல்லாம் எளிதில் தீர்வு கிடைத்துவிடும்.

பிறர் செய்யும் செயற்பாடுகளில் நிறையச் சிக்கல்களும், தாங்க முடியாத அளவிற்குக் கடினமானதாக இருக்கும்போதும், அவரின் புத்திசாதுரியமான பேச்சுக்கள் தன்னைச் சுற்றியுள்ளவர்களிடையே வலம் வரும்போதும், அவரை சாதாரணமான நிலையில் திரும்பச் சொல்லி உங்கள் பக்கம் பார்வையைச் செலுத்தச் சொல்லுங்கள்.

**"ஓஷோவின் பொன் மொழிகள்" என்ற நூலிலிருந்து....**

**அரசியல்வாதிகளின் வெற்றிக்கு, மக்களின் குறுகிய ஞாபக வளம்தானே முக்கிய காரணம்?**

-நா.பிரியா, மொறகொல்ல.

பத்திரிகைக் கட்டுரையாளர்களின் மக்களைச் சுரண்டும் எழுத்து வியாபாரத் திற்கும் அதுதான் காரணம்.

**புது வரவான சிந்துதுலானி எப்படி?**

-கே.ரி.பிரியன், தம்பிலுவில்.

இளைஞர் மனங்களைத் துழாவி எடுக்கின்ற துணி(குறை)ச்சல்காரி!

**உங்களுக்கு வாய்ப்பான கேள்விகளையே நீங்கள் தேர்வு செய்வதாகத் தெரிகிறதே?**

-எம்.எஸ்.ஏ. ஏறாவூர்.

தனக்குத் தேவையானதைத் தேர்வு செய்வதில் அவரவர் மனது கடைப்பிடிக்கும் தந்திரத்தை எவரால் மீற முடியும்...! ஒரு சம்பவம் இதோ : கிழவன் ஒருவன் தெருவில் திடீரென்று மயக்கமாகி விழுந்துவிட்டான். அவனைச் சுற்றிக் கூட்டம் கூடிவிட்டது. ஆளாளுக்கு அனுதாபத்துடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அவனை எப்படி மயக்கத்திலிருந்து தெளிய வைப்பது என்ற ஆலோசனைகளையும் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ஒரு பெண் "அவருக்குக் கொஞ்சம் விஸ்கி கொடுங்கள். எல்லாம் சரியாகிவிடும்" என்றாள்.

ஆனால், கூட்டமோ, அப்படிச் செய்ய லாம், இப்படிச் செய்யலாம் என்று தர்க்கம் செய்துகொண்டே இருந்தது. ஒருவர் சொல் வதை ஒருவர் மறுத்துப் பேசிக்கொண்டி ருந்தார்களே. தவிர உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை.

சிறிது நேரம் சென்றது. கிழவன் தன் கண்களைச் சிறிது திறந்தான். தலையை இலேசாகத் தூக்கி, மெல்ல, "எல்லோரும் கொஞ்சம் வாயை மூடிக்கொண்டு, அந்தப் பெண் சொன்னதைச் செய்யுங்கள்" என்றான்.

**ஜனாதிபதி ஆட்சியதிகார முறையை ஒழிக்க வேண்டியது அவசியமா?**

-க.கமால்தீன், ஏறாவூர்.

அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் வானளவு அதிகாரங் களைப் பார்க்கையில், இன்று நாம் அதை நடைமுறையில் உணராமலிருப்பது நம் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். இனி வரப்போகிறவர்கள் அந்தப் பதவியின் க்டூரத்தை நாம் உணரும்படி நடந்துகொள் பவர்களாய்த்தான் இருப்பார்கள் என்றே நான் அனுமானிக்கிறேன். ஜனநாயகத்தை இழிவுபடுத்தும் அந்தப் பதவியை, கட்சி அரசியல்களுக்கெல்லாம் அப்பால் ஒன்றுபட்டு ஒழித்துவிட வேண்டியது மிக அவசியம்.

**ஓய்வுக்குப் பிறகு டெண்டுல்கர் எப்படி?**

-எஸ்.சின்னவன், மகிழவெட்டுவான்.

இந்தியாவுக்கு நம்பகமானவர் டிராவிட் தான் என்ற என் நினைப்புத்தான் இப்போதும் உறுதிப்பட்டு வருகிறது.

**என் கேள்விகளில் ஒன்றுக்காவது நீங்கள் பதிலளித்துவிட்டால் கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதிக்கும் என்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?**

-அ.நிசாந்தினி, திருகோணமலை.

நாம் உண்மை என்று நம்பிக்கொண்டி ருப்பவைகளே உண்மை என்று நம்பிக் கொண்டிருப்பது தவறு என்கிறேன். நாகூர்ரூமியின் ஒரு கவிதை சொல்கிறது

"ஒவ்வொரு நாளும் சூரியன்
உதிக்கும் மறையும்
என்பதே பொய்
எஸ்கிமோக்களுக்கு."

**கிழக்கில் இப்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வகை தொகையற்ற தமிழ் இளைஞர்களின் படுகொலைகளுக்கும் அரச இராணுவத்தினருக்கும் என்ன சம்பந்தம்?**

-வ.சுரேஷ்குமார், வவுனியா.

நம் பத்திரிகைகளின் மௌனத்தைப் பார்த்தால் சம்பந்தமில்லை என்பதாகத்தான்


சிந்துதுலானி

நினைக்க வேண்டியிருக்கிறது. (நம் பொடியள்களுக்குள் பிளவையும் பிரிவுகளையும் அதிகார ஆசையையும் உண்டாக்கி, காலத்துக்குக் காலம் நமக்குள்ளேயே துரோகிகளையும் பெருகச் செய்தபடி, நம் பொடியள் யுத்தமில்லா விட்டாலும் கொலைகள் செய்துகொண்டு திரியத் தூண்டிவிட்டுக்கொண்டிருப்பது அரசும் அரச படைகளும்தான் என்று ஆணித்தரமாக அடித்து எழுதிக்கொண்டிருக்க வேண்டாமோ! கொலைகளை மறந்துவிட்டு, அவர்களைத் திட்டி நாம் ஆறுதல்பட்டுக்கொள்ளலா மல்லவா!)

## சிந்தியா பதில்கள்

**தெற்காசியாவில் மிகவும் ஏழையான நாடு பங்களாதேஷ்தானே?**

-இர.மதியுகன், திருகோணமலை.

அந் நாட்டுப் பெண்களது கன்னங்களின் செழுமையைப் பார்த்தால் அப்படிச் சொல்ல முடியவில்லை.

**யுகபாரதியின் பாடல்களில் உங்களுக்குப் பிடித்தது?**

-ச.நிரஞ்ஜலா, மஹியாவ.

அவர் மீது வெளிச்சம் படவைத்த ஒற்றை நாணயமாகட்டும், அவருக்குப் பணம் கொட்ட வைத்த மன்மதராசாவாகட்டும்.... ஊஹூம்....

"பசிக்கிறது எனச் சொல்ல செம்மொழியானாலென்ன? கம்பளியானா லென்ன?" என்று திரைக்கு வெளியே கோபப்படுகிறபோதுதான் கவிஞராகத் தெரிகிறார்.

**கௌசல்யன் குழுவினரை இராணுவத்தினரே கொன்றதாகவும், கொன்றவர்கள் சிங்களத்தில் பேசியதாகவும் எல்லாம் எழுதிய பத்திரிகைகள், இப்போது வெலிக்கந்தையில் கருணா குழுவின் முகாம் இருப்பதாகவும், இளைஞர்கள் பலர் பயிற்சி களில் ஈடுபட்டு வருவதாகவும் எழுதுகின்றன. இவர்கள்தான் வன்னித் தரப்புப் புலிகளைக் கொன்று வருவதாகவும், வன்னி - கிழக்குப் புலிகளுக்கிடையில் நேரடி மோதல் நடந்ததாகவும் எழுதுகின்றன. அப்படியா னால், கிழக்கில் நடப்பதெல்லாம் உள் இயக்க மோதல்கள்தானே?**

-எம்.எஸ்.அஹமட் இப்ராஹீம், ஏறாவூர்.

ஆமை சுடுறது மல்லாத்தி; இதை நாம சொன்னாப் பொல்லாப்பு!

**ஒரு பெண்ணின் காதல் வலையில் விழுந்துவிட்டேன். மீள ஒரு வழி சொல்ல முடியுமா?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

முதலில் "என்னைக் கண்டதும் கவிழும் உன் இமைகள் மீன் வலையா? நுளம்பு வலையா?" என்று அப்துல் ரகுமான் கேட் டதை அந்தப் பெண்ணிடமிருந்து உறுதிப் படுத்திக்கொள்ளுங்கள்!

**உலகம் அறியாத புதுமைகள் சில சொல்ல முடியுமா?**

-எஸ்.அகிலன், யாழ்ப்பாணம்.

கல்வியால் மேம்பட்டதாகக் கருதிக் கொள்ளும் ஒரு சமூகத்தில் - மண்ணெண் ணை வியாபாரி மக்கள் தலைவனானதும்..... இந்தத் தலைகளை 'கொழுவ' விட்டு வேடிக்கை காட்டும் வித்தைக்காரன் அந்தச் சமூகத்தின் மிகப் பிரபல ஊடகவியலாள னானதும்.....மாற்றுக் கருத்துடையவர்களைப் பாம்பை அடிப்பது போல் முழுதாய்க் கொன்று முடித்துவிட வேண்டும் என்று பதற்றப்படும் இனவாதப் பிதாமகனார் இந்தத் தமிழ்த் தலைமைகளைப் பிரம்புடன் மேய்ப்பவரானதும்.....இன்னும் உண்டு; விரிவஞ்சி நிறுத்துகிறேன்.

**முரளியின் கல்யாணம்?**

-மொஹமட் இர்ஹாம், காத்தான்குடி.

இனி, மதிமலரின் தூஸ்ராவில் இவர் தப்பிப் பார்க்கட்டுமே!

**ஈழப் போராட்டம் நமக்குத் தந்த பாடம் என்ன?**

-சி.முரளிதரன், தெபட்டன்.

"நினைவின் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் பிழைகளின் அவமானம்" என்று சுந்தர ராமசாமியின் சிறுகதை யொன்றில் படித்த வரிதான் ஞாபகத்தில் ஓடி வருகிறது.



## நாளை நிலை மாறும் நானும் சிரிக்கக் கூடும்

**தருவது முழடில்யன்**

விழுந்தால் எலும்புகள் உடைந்துவிடும் உயரத்தில் நின்றுகொண்டிருந்தான் சாந்தன். கீழே பாறைகளை மோதிப் பாய்ந்த ஆற்று நீரின் ஆர்ப்பரிப்புக் கேட்டது. அவ்வளவு உயரத்தில் நீரின் ஓசை எட்டாது என்று எண்ணியிருந்த அவன் கணிப்புப் பொய்யானதிலும் ஆச்சரிய முண்டானது. இரைச்சல் அவனைத் தாண்டி வானத்தை முட்டச் சென்றுகொண்டி ருப்பதாய்த் தோன்றியது.

சாந்தன் பாலத்தின் விளிம்புச் சுவர்களைப் பிடித்தபடி குனிந்து பார்த்தான். ஒரு சாரைப் பாம்பு போல நீர்த்திரள் உடல் நெளித்துப் புரண்டு போய்க்கொண்டி



ருந்தது.

'குதித்துவிடலாமா' என்று யோசித்தான். துணிவு வரவில்லை. 'சில மணித்தியாலங்களின் முன் எங்கே போயிருந்தது இந்தப் பயம்' என்று வியப்புடனும் சலிப்புடனும் எண்ணினான். அப்பாவின் வார்த்தைக் கொடுக்குகளால் மனம் அதிர்ந்த அந்தக் கோப வேளையில் 'தற்கொலை யைத் தவிர வேறு விடுதலை இல்லை' என்றே உறுதியாய் நினைத்தான். எப்படிச் சாவது என்ற தீர்மானமெதுவும் உடன் தோன்றவில்லை. ஆவேசத்துடன் புறப்பட்டு அலைந்துகொண்டி ருக்கையில்தான் இந்தப் பாலம் ஞாபகத்தில் வந்தது. 'குதித்துவிட வேண்டும்' என்ற எண்ணமே அந்த நேரத்தில் பெரிய விடுதலை உணர்வைத் தந்தது. வந்துவிட்டான்.

ஆற்று நீரில் பட்டுத் தெறித்த கிரணங்கள் கண் கூச வைத்தன. அந்தச் சூழலின் ஏகாந் தத்தைப் பிளந்தது ஆற்றின் இரைச்சல். அதை மேவ முடியாமல் அடங்கி ஒலிக்க ஆரம்பித்தி ருந்தது அவன் மன இரைச்சல்.

இருபத்தைந்து வயதுக்குப் பிறகு அப்பன் பாதுகாப்பில் இருப்பதென்பது இவ்வளவு கொடுமையா? எப்படி என் ஒவ்வொரு நாளையும் கழிவிரக்கத்தில் கதறும்படி யாகத் துவைத்துப் போட்டுவிட முடிகிறது அவருக்கு? சிங்கத் தலையும் பாம்பு வாலுமாக அந்தச் சீன மிருகம் படங்களில் நெருப்பைக் கக்கும் வாயுடன் வருவது போல, எந்நேரமும் விஷப் புகையை வார்த்தைகளாய்க் கக்கியபடிதான் அவரும்! இன்றைய இருப்பைக் கேவலப்படுத்தி யும் எதிர்காலப் பயங்களை உருவாக்கிய படியும்..... முடிவற்ற சித்திரவதைகளை அளிப்பதில் சமர்த்தர்.

இந்த வாழ்க்கை எனக்கு மட்டும் ஏன் இவ்வளவு விரோதமானதாக இருக்க வேண்டும்? என்னிடத்தில் ஏன் இத்தனை குரூரத்தைக் காட்டுகிறது? கடவுள் என்பவர் எப்படி இவ்வளவு ஓரவஞ்சனையானவராக நடந்துகொள்ள முடியும்? நான் இப்படி இருப்பதில் கடவுளுக்கு எந்தப் பங்கும் இல்லையா? பிறகு, நான் மட்டும் ஏன் இவ்வளவு கொடுமைகளுக்கு இலக்காக வேண்டும்?

தற்கொலை செய்துகொள்ளும் துணிவும் தன்னை விட்டு விலகிவிட்டது குறித்து வெறுப்பாக இருந்தது சாந்தனுக்கு. 'மீண்டும் போய் அப்பனிடம் சிறு புழுவாய்த் துடிப்ப தற்காகவா இந்தத் துணிச்சலை இழந்தேன்' என்று தன்னையே திட்டிக்கொண்டு திரும்பி நடந்தான்.

ஊருக்குள் வந்துவிட்டிருந்தான். தார் வீதிக்கு மேலே தண்ணீர் நடனமாய் ஒளிர்ந்த கானல் கண்களைக் கூசச் செய்தது. வெறுங்காலுடன் புறப்பட்டு வந்துவிட்ட மடத்தனத்துக் காகத் தன்னை நொந்தான்.

தூரத்தே செத்தவீடொன்றின் மேளம் கேட்டது. நெருங்கினான். பெண்களின் ஒப்பாரிச் சத்தம் தெருவை நிறைத்திருந்தது. ஆங்காங்கே வெள்ளை உடுப்புகளுடன் மனிதர்கள் தெரிந்தார்கள்.

அழுகைச் சத்தம் வரவர அதிகரித்தது. வந்தவர்களும் தங்கள் தங்கள் துயரத்தை நினைத்து அழுகின்றவர்களாக இருக்கும். உண்மையான துக்கத்தைக் கூடி அழுது ஆற்றிக்கொண்டுவிட முடியாது. துக்கம் கரைய தனிமையில்தான் அழ வேண்டும். துக்கத் தைப் பங்கிட்டுக்கொள்ள முடியாது. யார் என்ன ஆறுதல் கூறினாலும் அவை வெறும் வார்த்தைகள்தான். கூட எவர் அழுதாலும் அது வெறும் அழுகை தான்.

எப்போது கடந்தோம் என்று தெரியா மல் சாந்தன் அந்த இடத்தை விட்டு வெகுதூரம் வந்திருந்தான். அழுகைச் சத்தமோ பறையோ காதில் இப்போது விழவே இல்லை.

வீதியோர மரங்களின் புண்ணியத்தில் நடந்துகொண்டிருந்தான். காற்றுப் பலமாக வீச ஆரம்பித்திருந்தது. வெப்பத்தின் உக்கிரம் கொஞ்சம் தணிந்தது.

இப்போது நாதஸ்வர ஓசை எங்கிருந்தோ காற்றில் வந்தது. அது கல்யாண வீட்டுக்கான ஆலாபனை என்று தெரிந்துகொண்டு நடைபோட்டான். கல்யாண மேளம்தான். தெருவை அடைத்துப் பந்தல் போடப்பட்டி ருந்தது. தலையில் பூச் சூடிய பட்டுப் பெண்கள் சாரி சாரியாக உள்ளே போய்க்கொண்டி ருந்தார்கள். தோரணங்களை இழுத்து விளையாடும் சிறுவர்களின் கும்மாளம். கல்யாண மேளம் பலமாக ஒலித்தது. தாலி கட்டும் நேரமாயிருக்கும்!

சாந்தன் அதையும் கடந்து நடந்தான். ஒரு வீட்டில் சாவுப் பறை, மற்றொரு வீட்டில் கல்யாண மேளம். கணவனை இழந்த பெண்கள் கதறுகிறார்கள் ஒருபுறம். மறுபக்கம் வாழப்போகும் மணமக்கள் பூச் சூடிக் கலகலக்கிறார்கள்.

இப்படி இந்த உலகை ஆக்கியவன் யார்? அழுவதையும் சிரிப்பதையும் அருகருகே வைத்து இரசிக்கும் அந்தப் பண்பற்ற கொடுமையாளன் யார்?

சாந்தனுக்கு இப்போது மனநிலை மாறியிருந்தது. தன்னுடைய நிலையும் மாறும். நாளை நானும் சிரிக்கக் கூடும். இதுதான் உலகம். இதைப் புரிந்துகொண்டால்தான் வாழ்க்கையை இன்பமாகக் கண்டுகொள்ள முடியும்! சூடுணராத கால்களுடன் சாந்தன் நடந்தான்.

ஓர் இல் நெய்தல் கறங்க,
ஓர் இல் ஈர்ந் தண் முழவின்
பாணி ததும்ப, புணர்ந்தோர்
பூ அணி அணிய, பிரிந்தோர்
பைதல் உண்கண் பனி வார்பு
உறைப்ப, படைத்தோன் மன்ற,
அப் பண்பிலாளன்! இன்னாது அம்ம,
இவ் உலகம்; இனிய காண்க!
இதன் இயல்பு உணர்ந்தோரே.
(புறம் : 194)




**கி**ரிக்கெட் வீரர்கள் தாங்கள் பங்குபற்றிய முதலாவது டெஸ்ட் போட்டிகளில் ஏற்படுத்திய சாதனைகள் குறித்து இந்த வாரமும் சில தகவல்களைத் தருகின்றோம்.

அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த டீ.டபிள்யூ ப்ளெமிங், பாகிஸ்தான் அணிக்கு எதிராக ராவல்பிண்டி நகரில் தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்குபற்றி முதலாவது இன்னிங்ஸில் 75 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டு களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 86 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுகளையும் கைப்பற்றினார். இதில் ஹெட்ரிக் ஒன்றும் அடங்கும்.


இதேநேரம், விக்கெட் காப்பாளராகவும், துடுப்பாட்ட வீரராகவும் இலங்கை அணியைப் பிரதிநிதி த்துவப்படுத்திய சாமர துனுசிங்க, தான் கலந்துகொண்ட முதலாவது டெஸ்ட் போட்டியின்போது சிறந்த முறையில் தனது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

1994-95ஆம் வருடங்களில் நியூஸிலாந்து அணிக்கு எதிராக நியூஸிலாந்து நாட்டில் நேபியர் நகரில் தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் கலந்துகொண்ட சாமர துனுசிங்க முதலாவது இன்னிங்ஸின்போது 11 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸின்போது 91 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன், விக்கெட் காப்பாளராக 7 பிடிகளையும் எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சிறந்த திறமைகளைக் கொண்டிருந்த வீரரான சாமர துனுசிங்க இலங்கை அணி சார்பாக 5 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரமே கலந்துகொண்டுள்ளார். இதன்போது 160 ஓட்டங்களைப் பெற்றுள்ள சாமர, விக்கெட்டின் பின்புறமாக இருந்து 15 வீரர்களை ஆட்டமிழக்கச் செய்துள்ளார். இதில் 13 பிடிகள்; 2 ஸ்டொம்கள் அடங்கும்.

இந்திய கிரிக்கெட் அணியின் தற்போதைய தலைவரான சௌரவ் கங்குலி தனது முதலாவதும் இரண்டாவதுமான டெஸ்ட் போட்டிகளின்போது சதங்களைப் பெற்றுக்கொண்ட வீரர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

1996ஆம் வருடம் இங்கிலாந்துக்கான சுற்றுப்பயணத்தின்போது லோர்ட்ஸ் மைதானத்தில் கங்குலி தனது முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டு 131 ஓட்டங்களையும், இரண்டாவது டெஸ்ட் போட்டியின்போது (நொடின்ஹெம் ஷயரில்) 138 ஓட்டங்களையும் இரண்டாவது



கங்குலி

இன்னிங்ஸில் 48 ஓட்டங்களையும் பெற்றுள்ளார். இவ்விரு போட்டிகளும் இங்கிலாந்து அணிக்கெதிராக நடந்தவையாகும்.

அடுத்ததாக, தங்களது முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்ட துடுப்பாட்ட வீரர்கள் இருவர், ஒரே போட்டியின்போது சதங்களைப் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்கள் கிரிக்கெட் வரலாற்றிலேயே மிகக் குறைவாகும்.

தென்னாபிரிக்க அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையில் ராவல்பிண்டியில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியொன்றில் பாகிஸ்தான் அணி சார்பாக கலந்துகொண்ட அஸார் மஹ்மூத், ஆட்டமிழக்காமல் 128 ஓட்டங்களையும், அலி நக்வி 115 ஓட்டங்களையும் இவ்வாறு ஒரே போட்டியின்போது பெற்றுக் கொண்டவர்களாவர்.

இனி, தங்களது முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொண்டு சோபிக்காத பல வீரர்கள் பிற்காலத்தில் மிகவும் சிறந்த வீரர்களாகத் திகழ்ந்துள்ளனர். அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

1928 - 29ஆம் வருடங்களின்போது இங்கிலாந்து அணிக்கு எதிராக பிரிஸ்பேனில் தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் கலந்துகொண்ட டொனல்ட் பிரட்மன், முதலாவது இன்னிங்ஸின்போது 18 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டார். இரண்டாவது இன்னிங்ஸின்போது அவர் பெற்றுக்கொண்ட ஓட்டம் ஒன்றாகும்.

முதலாவது போட்டியில் பிரகாசிக்கத் தவறியமையினால் இரண்டாவது போட்டியில் இருந்து பிரட்மனை நீக்கிவிடுவதென அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணித் தேர்வுக் குழு தீர்மானித்தது. பின்னர் மூன்றாவது போட்டியில் கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்பினைப் பெற்ற இவர், முதலாவது இன்னிங்ஸின்போது 79 ஓட்டங் களையும் இரண்டாவது இன்னிங்ஸின்போது 112 ஓட்டங்களையும் பெற்றார்.

இது முதற்கொண்டு இவர் தனது துடுப்பாட்டத்தில் தொடர்ந்து பிரகாசித்து வந்ததனால் உலகின் அதி சிறந்த வீரர் எனும் கௌரவத்துக்கும் ஆளானார்.

1948ஆம் வருடம் வரையில் சுமார் 20 வருட காலமாக அவுஸ்திரேலிய அணி சார்பில் 52 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டுள்ள ஸ்ரீமத் டொனல்ட் பிரட்தன் 29 சதங்களுடன் 6,996 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். (சராசரி 99.94 ஆகும்) டெஸ்ட் போட்டிகளின்போது இவர் இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

இவர் முதல் தரப் போட்டிகளில் கலந்துகொண்டு 28,067 ஓட்டங்களைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். 117 சதங்கள் இவற்றுள் அடங்குகின்றன.

டெஸ்ட் போட்டிகளின்போது இவர் பெற்ற ஆகக் கூடிய ஓட்டங்கள் 334 ஆகும். இதேநேரம் முதல் தரப் போட்டிகளில் இவர் பெற்ற ஆகக் கூடிய ஓட்டங்கள் ஆட்டமிழக்காமல் 452 ஓட்டங்களாகும்.

1930ஆம் வருடம் இங்கிலாந்து அணியுடன் நடைபெற்ற கிரிக்கெட் போட்டித் தொடர் ஒன்றின்போது இவர், 974 ஓட்டங்களைப் பெற்றார். இது சராசரி 139.14 ஆகும்.


**- மைந்தன்**




**இந்தியாவின் மருமகனாகிவிட்ட இலங்கையின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளரும் உலக சாதனையாளருமான முத்தையா முரளீதரனுக்கும் அவரது பாரியாரான மதிமலருக்கும் தினமுரசு தனது இதயங்கனிந்த திருமண வாழ்த்துக்களை தனது நேயர்கள் சார்பில் தெரிவித்துக்கொள்கிறது.. வர்த்தக முகாமைத்துவ பட்டப் பின் படிப்புப் பட்டம் பெற்ற மதிமலர் சென்னையிலுள்ள தனியார் இருதய மருத்துவமனையொன்றின் முகாமைத்துவ பணிப்பாளராகப் பணியாற்றுவது குறிப்பிடத் தக்கது. முரளீதரனும் தனது பங்குக்கு இலங்கை - இந்திய உறவுகளுக்கு ஒரு முடிச்சுப் போட்டுள்ளார்.**



## சில கிளிக்குகள்











## எந்த கிழமையில் பிறந்தீர்கள்?

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

## ஆதிக்கம் 7 : பிறந்த கிழமை சனி

ஆதிக்க எண் 7ஐயும் பல சாதனைகளை நிகழ்த்தக் காரணமான சனிக்கிழமையினையும் கொண்டுள்ள நீங்கள் பல நல்ல குணாம்சங்களைக் கொண்டு விளங்குவீர்கள். சிறந்த பண்புகள் உங்களிடம் நிறைவாகக் காணப்படும். உற்றார் உறவினர்களுடன் அன்பாகவும் பண்பாகவும் நடந்துகொள்வீர்கள். அவர்களின் மனம் துன்பப்படும்படியாக ஒருபோதுமே நடந்துகொள்ளமாட்டீர்கள்.

ஆராய்ச்சி சிந்தனையும், எதையும் அலசி ஆராயும் ஆர்வமும், அதனில் உள்ள பல்வேறு தன்மைகளை அறிந்து கொள்ளும் ஆவலும் கொண்டவர்தான் நீங்கள். இறைவனின் அற்புதமான படைப்புக்களின் ஊடாக ஒரு செய்தி இருப்பதாக உணர்ந்து அதனைத் தேடிக் கண்டுபிடிக்கும் வல்லமை உள்ளவராக விளங்குவீர்கள். அறிவு நுணுக்கமும், புத்திக் கூர்மையும், நுணுகிப் பார்க்கும் ஆழமான பார்வையும் உடையவர்தான் நீங்கள்.

எதற்கும் அஞ்சமாட்டீர்கள். மனத் தைரியம், மனத் திடம் உள்ளவர்தான் நீங்கள். "அஞ்சியவனுக்கு அவ்வப்போது சாவு வரும். துணிவு மிக்கவனுக்கு ஒரு முறைதான் மரணம்", என்ற கூற்றில் உறுதிமிக்கவர் நீங்கள். அதனால்தான் துணிந்து பல காரியங்களைச் செய்து வெற்றி காண்பீர்கள். குறிப்பிட்ட ஒரு காரியத்தை எடுத்துக்கொண்டால் அதனைச் சிறப்பாகவும், திறம்படவும் ஒழுங்காகவும், அழகாகவும் செய்து முடித்து விடுவதில் தீர்களாக இருப்பீர்கள். ஒரு காரியத்தைச் செய்வதற்கு முயன்றால் அதிக அக்கறை செலுத்திக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துச் செய்து முடிக்கும் திறன் உங்களிடம் நிறையவே இருக்கிறது.

வேலை விடயத்திலும் ஆய்வு அம்சத்திலும் எந்த இடையூறோ அல்லது தடங்கலோ ஏற்பட்டாலும் பொருட்படுத்தாமல் குறித்த காரியத்தை நிறைவேற்றுவீர்கள். வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடிய பாக்கியம் உங்களுக்கு இருக்கிறது. பொருள் பெற்றும் புகழடைந்தும் நாடு திரும்பக்கூடிய யோகமுடையவர்தான் நீங்கள். இதன் நிமித்தம் நிலையாக ஓரிடத்தில் வசிப்பது என்பது உங்களால் முடியாத காரியம். ஆதலால் அடிக்கடி இடம் மாறிக்கொண்டே இருப்பீர்கள். இதனால் உங்களுடைய இலாபமோ அல்லது செல்வமோ அல்லது செல்வாக்கோ பெருகுமே தவிர, ஒரு நாளும் குறையாது.

சாப்பாடு, உடை போன்ற விடயத்தில் எந்தக் குறையும் உங்களுக்கு ஏற்படாது. திடகாத்திரமான - கட்டான உடல்வாகினைக் கொண்ட நீங்கள் பெரியோர்களிடத்திலும் சிறுவர்களிடத்திலும் அதிக அன்பும் பாசமும் காட்டுவீர்கள். இதனால் அவர்களிடம் அன்புடனும், பண்புடனும், மரியாதையுடனுந்தான் பேசுவீர்கள்.

வேலை அல்லது தொழில் விடயத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டிய தேவையே இல்லை. உடலை வருத்தாமல், வியர்வை சிந்தாமல், சந்தோசமாகச் செய்யக் கூடிய தொழில்தான் புரிவீர்கள். இதனால் வருமானமும் நிறைவாக உங்களுக்குக் கிடைக்கும். 18 வயதில் நீங்கள் தொழில் செய்தாலும் 28 வயது வரை ஒரு இடத்தில் நிலைத்து நிற்காமல் பல இடங்களிலும் தாவித் தாவி தொழில் செய்வீர்கள். இதனால் உங்கள் வருமானம் பாதிக்கப்படும். ஆனால் 29 வயது தொடக்கம் 32, 35, 38, 41, 44 வயதுகளில் வருமானம் படிப்படியாக உயர்ந்து செல்லும். இந்தக் காலங்களில் வெளிநாடு சென்று (இடையிடையே) திரும்புவீர்கள். 45 வயது தொடக்கம் நீங்கள் மரணிக்கும் காலம் வரை எந்த விதமான கஷ்டங்கள், தொல்லைகள், துன்பங்கள் இல்லாமல் சந்தோசமாக வாழ்வீர்கள்.

நீங்கள் செய்த பாக்கியம் என்னவென்றால் வாழ்க்கையில் உங்களுக்கு எந்த ஆபத்துக்களோ அல்லது விபத்துக்களோ அல்லது கண்டமோ ஏற்படாது என்பதுதான். இந்த வகையில் நீங்கள் புண்ணியம் செய்தவர். 41 வயதில் இருந்து 50 வயது வரை உங்களுக்குச் சிறுநீரோடு சம்பந்தப்பட்ட கோளாறு ஏற்படும். சிகிச்சைக்குப் பின்னர் குணமாகும். இதனால் எந்த விதமான சிரமங்களும் ஏற்படாது. 51 வயதிலிருந்து போசாக்கும் ஊட்டசத்தும் குறைந்து உடல் பலவீனம் அடைவீர்கள். இதனால் இந்தக் காலத்தில் இரத்த விருத்தியினையும் அதிக போசாக்கினையும் தரக்கூடிய உணவு வகைகளை நீங்கள் சாப்பிட வேண்டும்.

உங்களுடைய அதிர்ஷ்ட எண் எது தெரியுமா? நான்குதான். ஆகவே மாதத்தில் வரக்கூடிய 4, 13, 22, 31 திகதிகளில் நல்ல காரியங்களைச் செய்யுங்கள். ஜெயம் பெறுவீர்கள். இந்தத் திகதிகள் நீங்கள் பிறந்த கிழமையான சனிக்கிழமையில் அமையுமாக இருந்தால் இதன் பலன் இரட்டிப்பாகும்.

வெள்ளை நிற ஆடைகளையே விரும்பி அணியுங்கள். உங்களுக்கு வெள்ளை நிறம் யோகத்தையும் அதிர்ஷ்டத்தினையும் தர வல்லது. வெண்ணிறம் புனிதமான தூய்மையான நிறமல்லவா? நீங்கள் மோதிரம் அணிய விரும்பினால் அழகுக்கு மாத்திரம் அணியலாம். ஏனென்றால் மோதிரம் அணிவதால் உங்களுக்கு நன்மையும் இல்லை. தீமையுமில்லை.

ஆகவே, எண் 7ஐயும் சனிக்கிழமையினையும் கொண்ட நீங்கள் வாழ்வில் சகல யோகங்களையும் பெற்று அனுபவித்து வாழ என் ஆசீர்வாதங்கள்.

அன்பு கொண்ட எண் ஏழும், பண்பு கொண்ட சனியும் இன்பங்கொள்ளப் பெற்றீர்! துன்பமில்லா வாழ்வை அனுபவிப்பீர்!

**அடுத்த வாரம் ஆதிக்கம் 7 ஞாயிறுக் கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# போப்பாண்டவர் இரண்டாம் அர்பன் (1042 - 1099)

## உலகை வியக்க வைத்தவர்கள்

சிலுவைப் போர்களின் முக்கியத்துவத்தை இங்கு விளக்க வேண்டிய அவசியமில்லை. எல்லாப் போர்களையும் போலவே, இந்தப் போர்களில் பங்கு கொண்டவர்கள் மீதும் இப் போர்கள் நடந்த பகுதிகளில் வாழ்ந்த குடிமக்களின் மீதும் இந்தப் போர்கள் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தின. மேலும், அந்தக் காலத்தில் மேற்கு ஐரோப்பிய நாகரீகத்தைவிட முன்னேறிய நாகரீகங்களாக விளங்கிய பைசாண்டிய நாகரீகத்துடனும் இஸ்லாமிய நாகரீகத்துடனும் மேற்கு ஐரோப்பா நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு இந்தப் போர்கள் வழி வகுத்தன. இந்தத் தொடர்பு, மறுமலர்ச்சிக்கு வழியமைத்து, நவீன ஐரோப்பிய நாகரீகம் முழுமையாக மலர்ச்சி பெறுவதற்கு உதவியது.

சிலுவைப் போர்களின் மகத்தான முக்கியத்துவத்தின் காரணமாக மட்டுமின்றி, அர்பனின் தூண்டுதல் இல்லாது போயிருப்பின் இந்தப் போர்கள் நடந்திருக்க முடியாது என்ற காரணத்தாலும், போப்பாண்டவர் இரண்டாம் அர்பன் இந்தப் பட்டியலில் இடம்பெறுகிறார். அவர் காலத்தில் சூழ்நிலை கனிந்திருந்தது. இல்லையெனில் அவருடைய பேருரை செவிடன் காதில் ஊதிய சங்காகப் போயிருக்கும். எனினும், ஒரு பொதுவான ஐரோப்பிய இயக்கத்தைத் தொடங்குவதற்கு ஒரு மையமான தலைமை தேவைப்பட்டது. தேசிய அரசர் எவரும் இந்தத் தலைமையை அளித்திருக்க முடியாது. (எடுத்துக்காட்டாக, ஒரு ஜெர்மன் பேரரசர் துருக்கியருக்கு எதிராகப் புனிதப் போர்ப் பிரகடனம் செய்து, தமது படைகளைச் சிலுவைப் போருக்கு நடத்திச் சென்றிருந்தால், பல ஆங்கிலேயத் தளபதிகள் அதில் சேர்ந்திருப்பார்களா என்பது ஐயமே) மேற்கு ஐரோப்பாவில் நாட்டு எல்லைகளைக் கடந்து தமது அதிகாரத்தைச் செலுத்திய ஓர் மனிதர் போப்பாண்டவர்தான். மேற்கு ஐரோப்பியக் கிறிஸ்துவ நாடுகள் அனைத்திற்குமாக ஒரு திட்டத்தை வகுத்து, தமது கருத்தைப் பெருமளவு மக்கள் செயற்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையுடன் அறிவிப்பதற்கான வல்லமை வாய்ந்தவராகப் போப்பாண்டவர் மட்டுமே இருந்தார். போப்பாண்டவர் இல்லாது போயிருப்பின் - உணர்ச்சியைத் தூண்டிய தம் பேருரையை - அவர் ஆற்றாது போயிருப்பின் ஒரு மாபெரும் ஐரோப்பிய இயக்கம் என்ற முறையில் சிலுவைப் போர்கள் ஒருபோதும் நடந்திருக்க முடியாது.

அது மட்டுமின்றி, போப்பாண்டவர் பதவியை வகித்த எவரும் புனித பூமியை மீட்பதற்கு



ஒரு சிலுவைப் போரைத் தொடங்கும்படி அழைப்பு விடுத்திருக்க மாட்டார். போர் தொடங்கியது பல வழிகளிலும் நடைமுறையிலும் இயலாத ஒன்றாக இருந்தது. இந்தப் போரை நடத்தினால், அதன் விளைவு எதுவாக இருக்கும் என ஊகிப்பது கடினமாக இருந்தது. எனவே, இந்த விசித்திரமான ஆலோசனையைக் கூறுவதற்குப் பெரும்பாலான விவேகமுள்ள தலைவர்கள் மிகவும் தயக்கம் காட்டியிருப்பார்கள். ஆனால், இரண்டாம் அர்பன் அந்த ஆலோசனையைத் துணிவுடன் கூறினார். அவர் அவ்வாறு செய்ததன் மூலம், மனித வரலாற்றில் தம்மை விட மிக்க புகழ் பெற்றிருந்தவர்களைக் காட்டிலும் அதிகமான நிலைபெற்ற செல்வாக்கினை அவர் பெற்றார்.

**அடுத்த வாரம் ஜூலியஸ் சீசர் வியக்க வைப்பார்.**

**(வியப்புக்கள் தொடரும்....)**

# காதிலை பூ கந்தசாமி

**நோட்டீஸ் பலகை**



**நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை**
***-காதில பூ கந்தசாமி-***

வணக்கமுங்கோ!

எங்கட கிரிக்கெட் வீரர் முரளிதரன் இந்த மாதம் இருபத்தியோராம் திகதி திருமண பந்தத்திலை இணையிறாரெல்லோ. அவற்ர துணைவியார் இந்தியாவைச் சேர்ந்தவர் எண்டதும் அவர் ஒரு மருத்துவர் எண்டதும் ஏற்கெனவே தெரிஞ்ச விஷயம். லேட்டர்ஸ்; ஸ்பெஷல் என்ன தெரியுமோ? முரளிதரனுக்கு சில வி.ஐ.பி.கள் தங்கட வாழ்த்துக்களை நேரிலையும் தெரிவிச்சிருக்கினம். எங்கட வாழ்த்துக்களும் உரித்தாகட்டும். அது போக, சில பேர் வாழ்த்துக்களை வழமை போல தபால் மூலமும் அனுப்பி வச்சிருக்கினம். அதில ஒரு வாழ்த்துத்தானுங்கோ ஹைலைட்டாத் தெரிஞ்சுது. அது யாற்ர எண்டு யோசிக்காதயுங்கோ. அதையும் அடியேன் சொல்லுறன். நல்ல காலம் அந்த வாழ்த்துக் கிரிக்கெட் வீரருக்கு கிடைக்க முன்னமே பாக்கக் கிடைச்சுது. தப்பித் தவறி இது அவரிற்ர கையிலை கிடைச்சிருந்தால் நிலைமை மோசமாகப் போயிருக்கும். அந்த வாழ்த்துக் கடிதத்தில புலி ஒண்டு தன்ர பல்லைக் காட்டிக்கொண்டு முன்னங் கால்களிரண்டையும் முன்னுக்கு நீட்டி ரெண்டு துவக்கைப் பிடிச்சுக்கொண்டு நிக்குது. அதைக் கண்டவுனேயே, அடடா.... இதை எங்கயோ கண்ட மாதிரி ஞாபகம் வந்திச்சுங்கோ. பங்கருக்குள்ள இருந்தாலும் "நான்தான் தமிழ் மக்களின்ர ஏகதலைவன்" எண்டு பகிரங்கமாகவே சொல்லிக்கொள்ளிறவர்தான் அதை எழுதியிருக்கிறார். ஆஹா......மனிசன் மனசு திறக்கிறவராச்சே. இதென்ன இடையில எண்டிட்டு வாசிச்சால், எங்கட அறிக்கை மன்னர்களெல்லாம் மண் கவ்விற மாதிரி வார்த்தைகளைப் போட்டு வரைஞ்சிருக்கிறார். அந்த வாழ்த்து மடலை அப்பிடியே கொப்பி பண்ணிறன். எப்பிடி இருக்கெண்டு வாசியுங்கோ.

### திருமண வாழ்த்து

தம்பி! திருமண பந்தத்தில இவ்வளவு சீக்கிரம் புகுவீர்கள் எண்டு நான் நினைக்கயில்லை. ஏனெண்டால், நீங்கள் கிரிக்கெட்டில் எட்டியிருக்கும் சாதனைகள் ஈடிணையில்லாதவை. ஆனாலும், அவை நான் சாதித்தவற்றோடு ஒப்பிடும்போது மிகச் சாதாரணமானவை என்பதை தேசியத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ் இளைஞர்கள் எல்லோரும் திறமையாகக் குண்டு வீசுபவர்களாக மிளிர வேண்டும் என்று கனவு கண்டுகொண்டிருக்கையில் நீங்கள் எனக்கே காதுகுத்திப்போட்டு பந்துவீசிக் கொண்டிருக்கிறீங்கள். நீங்கள் என்னதான் முக்கி முக்கி வீசினாலும் மூன்று தடிக்குத்தான் வீசுவியள். நான் வீசினால் குறைஞ்சது மூண்டு பேரையாவது குளோஸ் பண்ணிப் போடுவன் எண்டு என்னைப் பற்றித் தெரிஞ்சவைக்குத் தெரியும். உந்தச் சிங்கள தேசத்தின்ர ரீமுக்குப் பந்து வீசாமல் இன்னும் பல ஆண்டுகளுக்குப் பிறகு நான் அமைக்கப் போற தமிழர் ரீமுக்கு பந்து வீசியிருந்தால் உங்களுக்கு ஒரு கிரிக்கெட் வீரர் எண்டதுக்கும் அப்பாலை ஒரு தேசப் பற்றாளராகவோ, அல்லது ஒரு நாட்டுப் பற்றாளராகவோ வெளியுலகுக்கு இனங்காட்டியிருப்பன். ஆனால் அப்படி ஒரு ரீம் அமைக்கப்படுமா எண்டது கூட எனது கற்பனையே தவிர வேறொண்டுமில்லை. சிங்கள தேசத்துக்கு ஆடின நீங்கள் இப்ப இந்தியாவுக்கு மருமகனாகிறது எனக்கு அவ்வளவாக மகிழ்ச்சியான செய்தியில்லை. ஏனெண்டால் நான் அவசரப்பட்டுச் செய்த ஒரு துன்பியல் சம்பவத்தில ராஜீவ் காந்தி பலியாக வேண்டி வந்ததால எனக்கும் இந்தியாவுக்கும் அவ்வளவாகச் சரியில்லை. அதுக்குப் பிறகு கூட இந்தியா தன்ர பிடியைத் தளர்த்தி என்னுடன் ஒரு இதுக்கு வர வேணும் எண்டு சு.பா.விட்டைச் சொல்லி அறிக்கையும் விட்டுப் பாத்தன். அதற்கும் இந்தியா தலையசைக்கயில்லை. அப்படி தமிழற்ர தேசியத் தலைமைக்கு ஒரு மதிப்புக் கொடுக்கத் தெரியாத இந்தியாவுக்கு நீங்கள் மருமகனாகப் போறது எனக்கு எப்படி மகிழ்ச்சியாக இருக்கும்? இதை உங்களால விளங்கிக்கொள்ள முடியாட்டில் தயவுசெய்து ஒரு நெட் கபேக்குப் போய் குறைந்த செலவில ஒரு கோல் போட்டு ரோங் நம்பரிலை எண்டாலும் ஒருக்கா பாலா அண்ணையிட்டை விளக்கம் கேட்டுக் கொள்ளுங்கோ. அவர் சிலநேரம் கையால மடியாலை போட்டு பிரஸரில எக்கோ பண்ணிற மாதிரிப் பேசினால், அதின்ர விளக்கத்தை கொழும்பில யாரெண்டாலும் ஒரு பேராசிரியரிட்டைச் சொல்லித் தெரிஞ்சு கொள்ளுங்கோ. இதெல்லாம் கஷ்டமெண்டால் சிம்பிளா ஒரு வழி சொல்லுறன். நான் வாழ்த்து அனுப்பினனான் எண்டு ஒரு தகவலை வெளியால சொல்லுங்கோ. மீதியை எங்கடை பத்திரிகைக்காரர் பாத்துக் கொள்ளுவினம். ஆனால் தயவுசெய்து, என்ர கொடுக்குப் பல்லுக் கொதிக்குது எண்டதை மட்டும் பெரிசா நினைச்சு, அனுப்ப வேண்டிய சுவீற் ஐட்டங்களை மட்டும் அனுப்பாம விட்டுப் போடாதேயும். இவனுகள் இங்க பங்கருக்க அவிச்சுப் போடுறதை வேறு வழியில்லாமத் திண்டு திண்டு நாக்குச் செத்துப் போச்சுது எண்டதயும் சொல்லி, என்ர வாழ்த்து வரிகளை நிறைவு செய்யிறன்.

*இப்படிக்கு*
*ஏகதலைவன்*

என்னங்கோ....எப்பிடி இருக்கு...? இப்பிடியே உசுப்பேத்தி உசுப்பேத்தி உடம்பை ரணகளமாக்கிப் போட்டாரப்பா.......!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(24.03.2005 தொடங்கி 30.03.2005 வரை)

**சோதிட மாமணி தில்லை**

### இந்த வாரக் கிரக நிலை

மீனம் - சூரியன், புதன், வெள்ளி, இராகு, மிதுனம் - சனி, கன்னி - வியாழன், கேது, மகரம் - செவ்வாய்.
சந்திரன் சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.



**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் விருத்தி, இனசன நன்மை, காரியானுகூலம், உயர்ந்த நிலை, அன்னியர் உதவி, கௌரவம், உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி சிறப்பு, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**



**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
செய்தொழில் மந்தம், பிரயாசை மிகுதி, உயர்ந்தோர் நட்பு, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் கெடுதி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**



**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)
தொழில் கஷ்டம், பணச் செலவு, அன்னியர் சகவாசம், கடன் பயம், உத்தியோக அலைச்சல், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**



**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் மந்தம், கடின உழைப்பு, பெரியோர் சகாயம், வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி, குடும்ப நன்மை, உத்தியோக உயர்ச்சி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**



**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் நன்மை, பலவித பேறு, பொருள் வரவு, உயர்ந்த நிலை, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**



**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் கஷ்டம், செலவு மிகுதி, கடன் தொல்லை, குடும்ப கலகம், பெரியோர் உதவி, உத்தியோக மகிழ்ச்சி, பதவி நன்மை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**




**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)
தொழில் அலைச்சல், பணச் செலவு, புதிய முயற்சி, பெரியோர் சகாயம், குடும்பக் கவலை, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**



**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)
தொழில் மேன்மை, உயர்ந்தோர் நட்பு, மனக் குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை, உத்தியோகக் கஷ்டம், மாணவர் கல்வி குழப்பம், வீண் தொல்லை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 04.**




**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)
தொழில் மந்தம், மனக் கவலை, பணச் செலவு, வெளியிட வாழ்க்கை, மறைமுக எதிர்ப்பு, குடும்பச் சிக்கல், செலவு மிகுதி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**



**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)
தொழில் கலக்கம், செலவு மிகுதி, இனசன நன்மை, வீண் குறை கேட்டல், அன்னியர் சகாயம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**



**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் பலிதம், பண வரவு, உயர்ந்த நிலை, குடும்பக் கஷ்டம், உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**




**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)
தொழில் அலைச்சல், செலவு மிகுதி, பணக் கஷ்டம், அன்னியர் பகை, குடும்பக் கவலை, உத்தியோகம் குழப்பம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)



# ஓரம் போ!

தற்போது வீதிகளில் மோட்டார் சைக்கிள்களின் பாவனை அதிகரித்துள்ளது. அதேவேளை மோட்டார் சைக்கிள்களில் சிலர் சாகசங்களைச் செய்து காட்டவும் தவறுவதில்லை. அந்த வகையில் ஸ்காபோலிஸ் போஸே எனும் ஹங்கேரி நாட்டு இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிளை மணிக்கு 200.726 கிலோ மீற்றர் வேகத்தில் செலுத்திச் சாதனை படைத்தார். இது என்ன வெறும் சாதனை என்றா நினைக்கிறீர்கள். இவர் மோட்டார் சைக்கிளில் பெற்றோல் தாங்கியின் மேல் பின்புறமாக அமர்ந்துகொண்டே இச் சாதனையைப் புரிந்துள்ளார். இச் சாதனையை இவர் பலட்டன் ஓடுபாதையிலேயே நிகழ்த்தி வீமான யுள்ளார். இச் சாதனையானது 2002ஆம் ஆண்டில் நிகழ்த் தப்பட்ட இச் சாதனை இன்று வரை முறியடிக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத் தக்கது.





# ஸ்டைல்

இப்போது நடந்து வரும் இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் எடுக்கப்பட்ட காட்சிகளே இவை. ஒரு நிகழ்வுக்கு இரசிகர்கள் எவ்வளவு முக்கியம் என்பதை இக் காட்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகவும், தமது கிரிக்கெட் ஆர்வத்தை வெளிக்காட்டுவதற்கும் இரசிகர்கள் இவ்வாறு வேடம் அணிந்துள்ளனர்.



அந்த வகையில் மேலே உள்ள படத்தில் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் அணியும் கண்ணாடி போல் அணிந்து முகம் முழுவதும் இந்தியாவின் தேசியக் கொடியை வரைந்துள்ளனர். கீழேயுள்ள படத்தில் முகத்தின் பாதியில் பாகிஸ்தான் தேசியக் கொடியையும், மறு பாதியில் இந்திய நாட்டின் தேசியக் கொடியையும் வரைந்துள்ளனர். இவை யாவும் இன ஒற்றுமையை ஏற்படுத்துமென இவர்கள் நம்புகிறார்கள். நம்பிக்கை ஈடேற நாமும் வாழ்த்துகிறோம்.

# மைல் கல்


வெற்றி மேல் வெற்றியைக் குவித்துவரும் இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் அண்மையில் இடம்பெற்ற இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் ஆட்டத் தொடரில் பத்தாயிரம் ஓட்டங்களைக் குவித்துச் சாதனை படைத்துள்ளார். சாதனையின் பின் ஊடகங்களுக்குப் பேட்டியளித்த இவர், தனது இலக்கு பதினையாயிரம் ஓட்டங்களைத் தாண்டுவதே எனத் தெரிவித்தார். பதினையாயிரம் ஓட்டங்கள் என்ற இலக்கைக் காண இன்னும் எத்தனை வருடங்களாகுமோ?

## 8ஆவது பிறந்தநாள் வாழ்த்து

நவாலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த திரு.திருமதி திருநாவுக்கரசு - லிங்கேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி தளிரினி தனது 8ஆவது பிறந்தநாளை 28.03.2005 அன்று சுவிஸில் சூரிச் மாநிலத்தில் அமைந்துள்ள தமதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா - அம்மா, அக்கா லட்சனி, சுவிஸிலுள்ள சித்தப்பா - சித்தி, அண்ணன்மார் பிரவின், பிரேன், யோண்சன், மஞ்சு அக்கா குடும்பம், தம்பிமார்கள் மாருதன், ஜெருசன், ராஜா மாமா குடும்பம், நகுலேஸ்வரன் மாமா குடும்பம், காந்தன் மாமா குடும்பம், ஆனந்தன் மாமா குடும்பம், செல்வா மாமா குடும்பம், சிவச்செல்வம் மாமா குடும்பம், நேசன் மாமா குடும்பம், தாஸ் மாமா குடும்பம், லூவின்சன் மாமா, கதிரைமலை மாமா, லண்டனிலுள்ள அண்ணா விந்தன், குகன் மாமா குடும்பத்தினர், சாந்தன் மாமா குடும்பத்தினர், டோஹாவிலுள்ள குகன் சித்தப்பா, ரூபன் சித்தப்பா, ஜேர்மனி சிவாஜினி பெரியம்மா குடும்பம், மட்டு - துறைநீலாவணையைச் சேர்ந்த ஆசைத்தம்பி மாமா குடும்பம், திருகோணமலையைச் சேர்ந்த உதயன் மாமா குடும்பம், மானிப்பாயிலுள்ள பெரியத்தை சின்னத்தம்பி புவனேஸ்வரி, சின்னத்தை சின்னராஜா மல்லிகாதேவி குடும்பத்தினர், அப்பப்பா மருதகுட்டி, பெரியம்மாமார்கள் விக்கினேஸ்வரி, நாகேஸ்வரி குடும்பத்தினர், பேராதனையிலுள்ள கிருஷ்ணா அக்கா மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுச் சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.




செல்வி தளிரினி




குலசேகரன் - சுதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் அக்ஷயன் தனது முதலாவது பிறந்தநாளை 30.03.2005 அன்று சுவிஸ் சூரிச்சில் உள்ள தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா - அம்மா, இலங்கையில் இருக்கும் அப்பப்பா - அப்பம்மா, அம்மப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், மச்சான் மற்றும் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் காளிகாபுவனேஸ்வரி அம்பிகையின் அருள் பெற்று சகல கலைகளும் கற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல் :- இனிய முத்தங்களுடன் ஜெ.சுதர்ஷன் மாமா

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி ஜக்சிகா

Yakshika

## 13.03.2005

கஜேந்திரன் - புஸ்பசாந்தி தம்பதியினரின் செல்வப் புதல்வி ஜக்சிகா Yakshika 13.03.2005 அன்று தனது முதலாவது பிறந்தநாளை Higham hill road, walthamstow லண்டனில் 19.03.2005இல் மிக விமரிசையாகக் கொண்டாடினார். இவரை லண்டனில் உள்ள அன்பு அப்பா - அம்மா, அண்ணமார் வினேஷ், தனூஷன், லண்டன் விஜயகுமார் சித்தா - சித்தி, அண்ணா கீர்த்திகன், இலங்கை சசிக்குமார் மாமா - மாமி, மச்சாள்மார் சஜீத்தா, சஞ்சுகா, சிவகரன் பெரியப்பா - குமுதினி பெரியம்மா, அண்ணாமார் ஈஸ்வர், அருண், சக்தீஸ், அம்மம்மா - பெத்தப்பா சிங்காரவேலு, அப்பப்பா செல்லத்துரை, சல்லி சந்திரலிங்கம் பெரியமாமா - மாமி, மச்சாள், மச்சான்மார், சல்லி பேரின்பநாதன் பெரியப்பா - பெரியம்மா, சல்லி துரைநாயகம் சின்ன பெரியப்பா - பெரியம்மா, அண்ணாமார், திருகோணமலை இரத்தினவேல் சின்னமாமா - மாமி, மச்சாள், சுவிஸ் சிறிதரன் பெரியப்பா - பெரியம்மா, அக்காமார், லண்டன் வேலநாயகம் பெரியப்பா - பெரியம்மா, அக்கா, அண்ணா, லண்டன் மச்சான்மார், மச்சாள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல இறைவன் அருளுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல் :- சந்திரலிங்கம் திருசபேசன் சிங்கப்பூர்.